Registered as a news paper. பக்கங்கள்: பன்னிரண்டு விலை: ரூபா 7.00

நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2034 தை 25 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 துல்ஹஜ் 16 (08.02.2004) ஞாயிற்றுக்கிழமை இதழ்:130

மொறாயஸ் ஒளிச்சுடர்
பல்வ ஓக்குக் கண்ணாடியகம்
இல.05 பலாலி வீதி, (அப்பலோ கிளினிக் முன்), யாழ்.
❖ பல் கட்டுவதற்கும்,
❖ பற்களுக்கு கிளிப் போடுவதற்கும்,
❖ இலவச கண் பரிசோதனை செய்து, நவீனரக பிறேம்களில் மூக்குக் கண்ணாடிகளைப் பெறவும்.
(1962 முதல் 1995 வரை யாழ்.வெலிங்டன் திரையரங்கு முன்பாக இயங்கியது)
(சி-2195)

# நாடாளுமன்றம் கலைப்பு; ஏப்ரல் ௨ ஆம் திகதி தேர்தல்!

## நள்ளிரவு ஜனாதிபதி அறிவிப்பு!



(கொழும்பு)

நாடாளுமன்றம் நேற்று நள்ளிரவு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவினால் கலைக்கப்பட்டது. புதிய நாடாளுமன்றத்தைத் தெரிவு செய்வதற்கான தேர்தல் ஏப்ரல் 2 ஆம் திகதி நடைபெறும். பொதுத்தேர்தலுக்கான வேட்பு மனுக்கள் எதிர்வரும் 17 ஆம் திகதி முதல் 24 ஆம் திகதிவரை ஏற்றுக்கொள்ளப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

நேற்று மாலை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க - தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்கவுடன் நாடாளுமன்றத்தைக் கலைத்து புதிய தேர்தலை நடத்துவது தொடர்பாக ஆராய்ந்தார்.

அத்துடன் - சிறிலங்கா சுதந்திரக் கட்சி முக்கியஸ்தர்களுடனும் அவர் ஆலோசனை நடத்தினார்.

இதனையடுத்து, அரசாங்க அச்சகர் நெவில் நாணயக்காரவுக்கு ஜனாதிபதி செயலகத்திலிருந்து - நாடாளுமன்றக் கலைப்புத் தொடர்பான வர்த்தமானி அறிவித்தலைப் பிரசுரிக்கும்படியான பணிப்பு விடுக்கப்பட்டது.

இதன்படி - கடும் இராணுவ - பொலிஸ் பாதுகாப்புக்கு மத்தியில் நேற்று இரவு 11.35 மணிக்கு அரசாங்க அச்சகர் நெவில் நாணயக்கார நாடாளுமன்றக் கலைப்புத் தொடர்பாக விசேட வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டார்.

இந்த வர்த்தமானி அறிவித்தலில், புதிய நாடாளுமன்றத்தை தெரிவு செய்வதற்கான தேர்தல் எதிர்வரும் ஏப்ரல் 2 ஆம் திகதி நடைபெறும் எனவும், வேட்பு மனுக்கள் எதிர்வரும் 17 ஆம் திகதி முதல் 24 ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

புதிய நாடாளுமன்றத்தின் அங்குரார்ப்பணக் கூட்டம் ஏப்ரல் 22 ஆம் திகதி நடைபெறும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி சந்திரிகாவுக்கும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையிலான அதிகார இழுபறியைத் தொடர்ந்து - பதவிக் காலம் முடிவடைய 4 வருடங்கள் இருக்கும்போதே, நாடாளுமன்றம் கலைக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, ஊடகத்துறை மற்றும் உள்துறை அமைச் சுக்களுக்கு பொது ஜன ஐக்கிய முன்னணியைச் சேர்ந்த இரு

(12 ஆம் பக்கம் பார்க்க)

## மாங்குள வீதி விபத்தொன்றில் யாழ்.வாசிகள் இருவர் மரணம்!

(கிளிநொச்சி)

மாங்குளம் பகுதியில் கன்ரர் வாகனமும் மோட்டார் சைக்கிளும் மோதியதில் - மோட்டார் சைக்கிளில் சென்ற யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர்.

நேற்றுப்பிற்பகல் 2.00 மணியளவில் மாங்குளம் - குஞ்சுக்குளம் பகுதியில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில், வேலணை நான்காம் வட்டாரத்தைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை நாகேந்திரராசா (வயது - 57), இவருடன் சென்ற வட்டுக்கோட்டை - சங்கரத்தையைச் சேர்ந்த தர்மலிங்கம் செல்வக்குமார் (வயது 32) ஆகிய இருவருமே உயிரிழந்தவர்களாவர்.

மாங்குளத்திலிருந்து குஞ்சுக்குளம் நோக்கிச்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## ஐரோப்பிய யூனியன் எம்.பிக்களை தமிழ்ச்செல்வன் சந்தித்துப் பேச்சு!

(பிரஷெல்ஸ்)

ஐரோப்பிய நாடுகளுக்கான சுற்றுப்பயணத்தை மேற்கொண்டிருக்கும் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழுவினர், நேற்றுமுன்தினம் ஐரோப்பிய யூனியன் நாடாளுமன்ற உறுப்பினர்களைச் சந்தித்து கலந்துரையாடினர்.

ஐரோப்பிய யூனியன் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோன் வோல்ஸ் குஷ்னாகன், பெல்ஜியத்துக்கான நோர்வேத் தூதுவர் பிஜோனிபை, வெளிவிவகார அமைச்சைச் சேர்ந்த ஆசிய திணைக்கள தூதுவர் மரிக்கோ, ஐரோப்பிய ஆணையர் கிறிஸ் பற்றனின் பதில் பணிப்பாளர் ஹவி ஜோன்ஜீன் ஆகியோரையே தமிழ்செல்வன் தலைமையிலான குழுவினர் சந்தித்தனர்.

தென்பகுதியில் அரசியல் நெருக்கடி நிலவுகின்ற போதும் வடக்கு, கிழக்கு பகுதிகளில் வாழும் மக்களுக்கு தேவையான அவசர மனிதாபிமானப் பணிகளை ஐரோப்பிய யூனியன் நாடாளுமன்றம் செய்யவேண்டுமென இந்தச் சந்திப்பில் தமிழ்ச்செல்வன் கேட்டுக் கொண்டார்.

வடக்கு - கிழக்குப் பகுதிகளில் முன்னர்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## இந்திய கடற்படைத் தளபதியின் இலங்கை விஜயம் மீண்டும் ரத்து!

இந்திய கடற்படைத் தளபதி அட்மிரல் மாதவேந்திரசிங்கின் இலங்கை விஜயம் மீண்டும் ஒத்திவைக்கப்பட்டிருப்பதாக புது டெல்கியிலுள்ள இந்திய கடற்படைத் தலைமையக வட்டாரங்களை மேற்கோள்காட்டும் செய்திகள் தெரிவித்தன.

இந்திய கடற்படையின் பிரதம தளபதியான மாதவேந்திரசிங் நாளை முதல் நான்கு நாட்கள் இலங்கையில் விஜயம் செய்வதற்குத் திட்டமிட்டிருந்தார்.

இவருடன் இந்தியக் கடற்படையின் உயர் மட்ட அதிகாரிகள் குழுவொன்றும் இலங்கை வரவிருந்தது. இவர்கள் இலங்கையில் தங்கி

(12 ஆம் பக்கம் பார்க்க)

## இயல்புநிலை ஏற்படாததை கண்டித்து யாழ். நகரில் பேரணி நடத்த ஏற்பாடு!

### தேசிய எழுச்சிப் பேரவை தீர்மானம்

(ஊர்காவற்றுறை)

புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தாகி இரு வருடங்கள் பூர்த்தியாகியும் தமிழர் தாயகப் பிரதேசத்தில் முழுமையான இயல்புநிலை ஏற்படுத்தப்படாமையைக் கண்டித்து, மாபெரும் கண்டனப் பேரணி நடத்துவதற்கு யாழ்.மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவை தீர்மானித்துள்ளது.

தேசிய எழுச்சிப் பேரவையின் மூன்றாவது பேராளர் சங்கமம் நேற்று ஊர்காவற்துறையில் நடைபெற்றபோது இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

அரசும் - விடுதலைப் புலிகளும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டு இந்த மாதம் 22 ஆம் திகதி இரண்டு வருடங்கள் பூர்த்தியடைகின்றது.

எனினும், புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் ஏற்றுக்கொண்டதுபோன்று இன்னமும் முழுமை

(12 ஆம் பக்கம் பார்க்க)

## வேலூர் சிறையிலிருந்து வைகோ விடுதலை!

(சென்னை)

பொடா சட்டத்தின் கீழ் தடுத்துவைக்கப்பட்டிருந்த ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ நேற்றுக்காலை 9.35 மணிக்கு வேலூர் சிறையிலிருந்து விடுதலை செய்யப்பட்டார். சிறைச்சாலை வாசலில் ம.தி.மு.க. தலைவர்கள், நிர்வாகிகள் அவருக்கு உற்சாக வரவேற்பளித்தனர்.

ஆயிரக்கணக்கான ம.தி.மு.க தொண்டர்கள் வைகோவை வரவேற்க கார்களில் சென்றிருந்தனர். வைகோ முகத்தைக் கண்டதும் அவர்கள் உணர்ச்சிப் பிழம்பாக மாறி வாழ்த்துக் கோஷங்களை எழுப்பினார்கள்.

(12 ஆம் பக்கம் பார்க்க)




## அச்செழு இராணுவ முகாமில் இராணுவ சார்ஜன்ட் தற்கொலை!

(யாழ்ப்பாணம்)

அச்செழு இராணுவ முகாமில் பணியாற்றிய இராணுவ சார்ஜன்ட் ஒருவர் தன்னைத் தானே சுட்டுத் தற்கொலை செய்து கொண்டதாகத் தெரியவருகிறது.

நேற்றுமுன்தினம் மாலை தனது அறையில் இருந்த 42 வயதான என்.பி.பியதிலக என்ற சிப்பாயே தன்னைத்தானே சுட்டுத் தற்கொலை செய்துகொண்டார்.

துப்பாக்கி வேட்டுச்சத்தம் கேட்டதையடுத்து சம்பவ இடத்துக்கு ஏனைய படையினர் சென்று பார்த்தபோது, குறிப்பிட்ட ராணுவ சார்ஜன்ட் இரத்த வெள்ளத்தில் கிடந்ததாகவும் அவரது

(12 ஆம் பக்கம் பார்க்க)

## பொலிஸ் மா அதிபரின் சேவை நீடிப்பை எதிர்த்து சட்ட நடவடிக்கைக்கு முஸ்தீபு!

### சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி திட்டம்

(கொழும்பு)

பொலிஸ் மா அதிபர் இந்திர டி சில்வாவின் பதவிக் காலத்தை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நீடிப்பதற்கு முடிவு செய்தால், அதற்கு எதிராக சட்டநடவடிக்கை எடுப்பதற்கு சிரேஷ்ட பொலிஸ் அதிகாரியொருவர் தீர்மானித்திருப்பதாகத் தெரியவருகிறது.

பொலிஸ் மா அதிபர் இந்திர டி சில்வாவின் பதவிக்காலம் எதிர்வரும் 14 ஆம் திகதியுடன் முடிவடைகிறது. இவரது பதவிக் காலத்தை மேலும் 6 மாதங்களுக்கு நீடிக்குமாறு, அரசியலமைப்பு சபைக்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க சிபாரிசு செய்திருக்கிறார்.

பொலிஸ மா அதிபர் இந்திர டி சில்வாவுக்கு சேவை நீடிப்பு வழங்கப்பட்டால், பொலிஸ் மா அதிபருக்கு அடுத்த நிலையிலிருக்கும் பிரதிப் பொலிஸ் மா அதிபர் ஜெயதிஸ்ஸ ஹேரத் ஓய்வுபெறவேண்டிய நிலை ஏற்படும் என்று கூறப்படுகிறது. எதிர்வரும் 13 ஆம்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## நூற்றுக்கு மேற்பட்ட இந்திய படகுகள் நெடுந்தீவு கடலில் நேற்று ஊடுருவல்!

(நெடுந்தீவு)

நெடுந்தீவு மேற்கு, தெற்குப் பகுதி கடல் எல்லைகளில் நூற்றுக்கு மேற்பட்ட இந்திய இழுவைப் படகுகள் நேற்றுப்பகல் 2.30 மணிமுதல் அத்துமீறி மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டதை கரையிலிருந்து காணமுடிந்ததாக நெடுந்தீவுச் செய்தியாளர் தெரிவித்தார்.

இதேவேளை - நெடுந்தீவு பெரியதுறைப் பகுதியிலிருந்து சுமார் முந்நூறு மீற்றர் தொலைவில் இலங்கைக் கடற்படையினரின் ரோந்துப் படகொன்று பதினைந்திற்கும் மேற்பட்ட இழுவைப் படகுகளை தன்னருகே அழைத்து பதினைந்து நிமிட நேர விசாரணையின் பின்னர், ஒவ்வொரு படகாக விடுதலை செய்து

(12 ஆம் பக்கம் பார்க்க)

# தேசிய எழுச்சிப் பேரவையின் மூன்றாவது பேராளர் சங்கமம்!

யாழ்.மாவட்டத் தேசிய எழுச்சிப் பேரவையின் 3வது பேராளர் சங்கமம் நேற்று ஊர்காவற்றுறை சென். அன்ரனிஸ் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது.

யாழ்.மாவட்டத் தேசிய எழுச்சிப் பேரவையின் செயலாளர் சொலமன் சூ.சிறில் தலைமையில் ஆரம்பமாகிய இந்த நிகழ்வில், பொதுச்சுடரை மாவீரர் இசைமாறனின் தாயார் மெற்றில்டா ஏற்ற, மங்கள விளக்கை வணபிதா. எம்.ஏச்.கருணாரட்ணவும், தமிழீழ தேசிய எழுச்சிப் பேரவையின் பொறுப்பாளர் உமைமாறன், ஊர்காவற்றுறைப் பிரதேச செயலர் செல்வநாயகம் ஆகியோர் ஏற்றினர்.

தமிழீழத் தேசியக்கொடியை அரசியற்துறை துணைப்பொறுப்பாளர் சோ.தங்கன் ஏற்றிவைத்தார். இதனைத தொடர்ந்து அன்னை பூபதியின் திருவுருவப்படத்திற்கு யாழ்.மாவட்ட அரசியற்துறை துணைப்பொறுப்பாளர் செம்மணன மலர்மாலை அணிவிக்க, தீவக விசேட பொறுப்பாளர் கண்ணன் ஈகைச்சுடரினை ஏற்றிவைக்க சங்கமம் நிகழ்வுகள் ஆரம்பமானது.

இந்த நிகழ்வில், குடாநாட்டில் மேற்கொள்ளப்படவேண்டிய அபிவிருத்தித் திட்டங்கள் குறித்தும் ஆராயபபட்டது.





தமிழீழ தேசியக் கொடியினை தமிழீழ அரசியற்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் ஏற்றுவதையும், பொதுச்சுடரினை மாவீரர் இசைமாறனின் தயார் மெற்றில்டா ஏற்றுவதையும் காணலாம்.





மேடையில் அதிதிகள் அமர்ந்திருப்பதையும், சங்கம நிகழ்வில் பங்குகொண்ட பேராளர்கள் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

## 5 ஆம் ஆண்டு புலமைப் பரீட்சை

# வடமராட்சி கல்விவலய பாடசாலைகளில் சித்தியடைந்த மாணவர்களின் பெயர் விபரம்

அண்மையில் வெளியாகிய ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் வடமராட்சி கல்வி வலய பாடசாலைகளின் பெறுபேறுகள் வருமாறு,

**மருதங்கேணி இந்து தமிழ்க்கலவன் பாடசாலை -**
தோற்றியோர் - 23, சித்தியடைந்தோர் - 02 - கே. கஜேந்திரன் -133, கே. நிசாந்தன் -134.

**தாளையடி றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலை -**
தோற்றியோர் - 05 சித்தியடைந்தோர் -01 எம்.இனிதா - 121.

**பருத்தித்துறை தட்டாதெரு தமிழ்ககலவன் பாடசாலை -**
தோற்றியோர் - 16 சித்தியடைந்தோர் - 01 எஸ்.பிரசாத் -122.

**தம்பசிட்டி மெதடிஸ்த தமிழ்க் கலவன் பாடசாலை -**
தோற்றியோர் - 71, சித்தியடைந்தோர் - 07 - எஸ். கார்த்திகாயினி -147, கே.நிதர்சனா -121, வி.சரஞ்சா -145, எஸ்.துசாந் - 138, எஸ். பரதன் - 127, என்.அபயப்பிரதாபன்- 123, கி.தாட்சாயினி -118.

**பருத்தித்துறை இந்து மகளிர் கல்லூரி-**
தோற்றியோர் -76, சித்தியடைந்தோர் - 18 - சி.சருகா -154, சோபிகா -121, எஸ்.தபுலாசினி -120, கே. துர்க்கா - 133, எஸ்.ஆரணி -142, ஜி.சகிந்துசா - 147, ஏ.அஜிதா 118, எஸ்.கிருசுபா - 138, பி.ஜனனி 137, கே.கயாந்தினி - 122, எஸ்.மிசியணா- 130, ஜி.டெனிக்கா - 125, எம்.கௌசிகா - 124, ஜே.கீர்த்தனா -125, பி.மயூரிக்கா -123, ரி.றஜிதா -129, ரி.சாருபி -123, எஸ்.தர்சிகா -149,

**துன்னாலை மேற்கு தமிழ்க்கலவன் பாடசாலை -**
தோற்றியோர் 26 சித்தியடைந்தோர் - 09 - பி.கௌசிகன் -136, ஜே.நிருபன் -130, கே.பிரசாந்த்-136, கே.சிந்துஜன் - 132, கே.கேமசாலினி -146, வி. நிறஞ்சினி - 125, எஸ். கோபிகா - 122, எஸ்.தேவகி -146, எஸ்.தினேஸ் -147, எஸ்.கோணேஸ்வரன் - 120, எஸ்.சர்மிளா -137.

**அல்வாய் மேற்கு திக்கம் சித்தி விநாயகர் வித்தியாலயம் -**
தோற்றியோர் 12, சித்தியடைந்தோர் - 03 - எ.சுஜிதா -137, எஸ்.பிரகாஜ் -118, எஸ்.பிரியாணி -150,

**அல்வாய் வடக்கு றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலை**
தோற்றியோர் -30, சித்தியடைந்தோர் - 01 - ஏ.யஸ்மின் -136,

**பொலிகண்டி இந்து தமிழ்க்கலவன பாடசாலை -**
தோற்றியோர் - 33, சித்தியடைந்தோர் - 04 - யு.சோபிதா -128, ஏ. கே.அனிஸ்கா -132, பி.பிரியா -118, எஸ்.பிரியதர்சினி -147.

**புலோலி மெதடிஸ்த தமிழ்க்கலவன் பாடசாலை -**
தோற்றியோர் - 24, சித்தியடைந்தோர் - 02, யு.துளசிகன் - 138, எஸ். அனுதர்சன்- 118,

**கற்கோவளம் தமிழ்க்கலவன் பாடசாலை -**
தோற்றியோர் - 20, சித்தியடைந்தோர் - 05, ரி. ஜெசிந்தா 119, ரி. கௌசிகா - 123, ஆர்.கயல்விழி - 118, எஸ். அனோஜா -120, பி. சூரியா - 149.

**வல்வெட்டித்துறை றோமன் கத்தோலிக்கப் பாடசாலை**
தோற்றியோர் - 06, சித்தியடைந்தோர் - 03, ஜி. சுதர்சன்-158, ரி.நிருஜா - 140, கே.விஜிதா-131.

**பருத்தித்துறை சித்திவிநாயகர் வித்தியாலயம் -**
தோற்றியோர்- 46, சித்தியடைந்தோர் - 07, என். கஜேந்தினி -121, ரி.அஜந்தன் - 136, பி.பானுகோபன் - 130, எஸ்.கவிஸ்கான் - 119, கே.பிரசாந்த் - 119, எஸ்.ஜெயசீலன் - 1[illegible] எஸ்.சதீஸ்ராம் - 141.

*(தொடரும்...)*

## மகா கும்பாபிஷேகம்

(வடமராட்சி)

பருத்தித்துறை சித்தாயாத்திரை அருள்மிகு ஸ்ரீசித்திவிநாயகர் கோயில் ஜிர் மணாத்தாரண, அஷ்டபத்தன மஞ்சகுண்ட பசு பிரதிஷ்ட மகா கும்பாபிஷேகம் இன்று காலை 7.36 மணிமுதல் 8.36 வரையான சுபநேரத்தில் நடைபெறும்.

நல்லூர் சட்டநாதர் சிவன்கோவில் பிரதமகுரு சிவஸ்ரீ தாணுவ சோதேவக் குருக்கள் பிரதமகுருவாக இருந்து கும்பாபிஷேகத்தை நடத்திவைப்பார். (17)

# பட்டப்படிப்புகள் கல்லூரியின் 25 ஆவது ஆண்டு நிறைவுதினம்

பட்டப் படிப்புகள் கல்லூரியின் 25 ஆவது ஆண்டு நிறைவு விழா இன்று காலை 9.30 மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் மெய்யியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் வே. யுகபாலசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினர்களாக பொ.பாலசுந்தரம்பிள்ளை (முன்னாள் துணைவேந்தர், புவியியற்துறை பேராசிரியர்), செ.பத்மநாதன் (அரச அதிபர்), சி.செம்மணன் (அரசியற்துறை துணைப் பொறுப்பாளர்), சிறப்பு விருந்தினர்களாக து. ரகு (மக்கள் வங்கி முகாமையாளர், யாழ்ப்பாணம்), எஸ்.சிவராமலிங்கம் (இலங்கை வங்கி மேற்தரக்கிளை), பா.தனபாலன் (உபபீடாதிபதி தேசிய கல்வியியற்கல்லூரி), வே.சிவயோகலிங்கம் (சிரேஷ்ட விரிவுரையாளர்- அரசியல் விஞ்ஞானத்துறை பேராதனை பல்கலைக்கழகம்), எஸ். சிவலிங்கராஜா (சிரேஷ்ட விரிவுரையாளர் தமிழ்த்துறை, யாழ்.பல்கலைக்கழகம்), மா.வேதநாதன் (விரிவுரையாளர், இந்து நாகரிகம் - யாழ்.பல்கலைக்கழகம்), க.தேவராஜா (வணிகத்துறைத் தலைவர் - யாழ்.பல்கலைக்கழகம்) ஆகியோரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இந்த நிகழ்வில் நூல் வெளியீடும் அதனைத் தொடர்ந்து கலை நிகழ்சிகளும் நடைபெறவுள்ளன. இந்த நிகழ்வில் - அனைவரையும் கலந்துகொள்ளுமாறு நிறுவன இயககுநர் தெரிவித்தார். (25)

# மதுபான நிலையத்தால் மக்கள் பெரும் சிரமம்!

யாழ்.கச்சேரி கிழக்கு வீதியில் உள்ள மதுபான விற்பனை நிலையத்தினால், அப்பகுதி மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

மேற்படி பகுதியில் காலையிலிருந்து நள்ளிரவு வரை மதுபான விற்பனை நிலையம் திறக்கப்பட்டு வியாபாரம் நடைபெறுகிறது. மதுபானம் அருந்த வருபவர்கள் மது போதையில் அப்பகுதி மக்களைச் சண்டைக்கு இழுப்பதுடன், பயமுறுத்தியும் வருகின்றனர். அத்துடன், பெண்கள் குழந்தைகள் மத்தியில் கீழ்த்தரமான வார்த்தைப் பிரயோகங்க்ளைப் பாவிப்பதால், அந்தப்பகுதி மக்கள் பெரும் சிரமங்களையும், பீதியையும் எதிர்நோக்கி வருகின்றனர். இதனால் யாழ்.செயலகத்துக்கு அருகிலுள்ள மேற்படி வீதி மக்கள் - ஒன்றாகக் கையெழுத்திட்டு, இந்த மதுபானக்கடையை அகற்றுமாறு கோரி அப்பகுதி கிராமசேவகர் மூலம் உரிய அதிகாரிகளுக்கு மகஜர் கொடுத்தும் எவ்வித பலனும் கிடைக்கவில்லையெனத் தெரிவிக்கப்படுகிறது. (55)

## ஆசிரியர்களுக்கான வதிவிடச் செயலமர்வு

புதிய நியமனம் பெற்ற ஆசிரியர்களுக்கான வதிவிடச் செயலமர்வு நெல்லியடி ஆசிரியர் பயிற்சி நிலையத்தில் நடைபெற்று வருகின்றது. 2 ஆம் திகதி ஆரம்பமான இந்தச் செயலமர்வு எதிர்வரும் 10 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

வடமராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த சுமார் 35 ஆசிரியர்கள் இந்தப் பயிற்சியில் பங்குபற்றுகின்றனர்.


## சிறு விளம்பரம்

### மணமகள் தேவை

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த கொழும்பில் சொந்த ஸ்தானத்தில் வர்த்தகம் செய்யும் வயது 29 லக்கினத்தில் செவ்வாயுடைய மணமகனுக்கு படித்த அழகிய மணமகள் தேவை. தொடர்பு G.புஸ்பராஜா, 3/11, பிரப்பங்குளம் லேன், வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.
T.P:- 0776231006 (624)

யசோ இறபர் ஸ்டாம்

75/=

பொலிமர் கொம்பியூட்டர் இறபர் சீல் ரூபா 75/= மட்டுமே

யசோ (PVT) லிமிட்டட்,
35, கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம். (சி/2152)






நிறஞ்சனாஸ் சங்கானை

சிம்பு, சர்மி நடித்த

காதல் அழிவதில்லை

காட்சி நேரம்:11.00, 2.45, 6.00, (பு.நே.)
ஞாயிறு இரவு 8.45 (பு.நே.)

HULK

(சி-2196)

ராஜா யாழ்ப்பாணம்.

இந்தியாவிலும் இலங்கையிலும்
ஒரே தின வெளியீடு
பிரசாந், தியாகராஜன், பானுப்பிரியா
நடித்த

ஜெய்

காட்சிநேரம் :
10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)
ஆசனங்களை முற்பதிவு செய்துகொள்ளலாம்.

(சி-2197)

# சமாதான முயற்சியை முன்னெடுத்துச் செல்வதற்கு பிரதமர்-ஜனாதிபதி அர்ப்பணிப்புடன் செயற்படவேண்டும்

## லங்கா சமசமாஜக் கட்சி அறிக்கை

(கொழும்பு)

தற்போது கடைப்பிடிக்கப்பட்டு வரும் போர் நிறுத்த ஒப்பந்தத்தைப் பாதுகாத்து, சமாதான நடவடிக்கைகளை அர்த்தமுள்ளதாக முன்னெடுத்துச்செல்ல ஜனாதிபதியும், பிரதமரும் அர்ப்பணிப்புடன் செயற்படுவது அவசியம் என லங்கா சமசமாஜக் கட்சியின் பொதுசெயலாளர் பட்டி வீரக்கோன் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இது தொடர்பாக எங்களது கட்சி நீண்டகாலமாக வலியுறுத்திவருகின்றது.

தற்போதைய நிலைமையில் நாடாளுமன்ற தேர்தலை நடத்துவது மாற்றுவழியாக அமையாது, தேர்தல்' ஒன்று நடத்தப்பட்டால் ஐக்கிய தேசியக் கட்சிக்குத் தற்போதைய உறுப்பினர்கள் தொகையிலும் பார்க்கக் கூடுதலாக ஆசனங்கள் கிடைத்தால், மேலும் இரண்டு ஆண்டுகளுக்கு ஜனாதிபதியுடன் அவர்கள் ஒன்றிணைந்து செயற்படவேண்டும்.

இதேபோன்று சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன் ஒன்றிணைந்த கூட்டணி, தேர்தலில் அதிகமான உறுப்பினர்களைப் பெற்றுக் கொண்டால் இனப்பிரச்சினை தொடர்பாக அவர்கள் ஒன்றிணைந்து செயற்படக்கூடிய வாய்ப்பு இல்லை.

ஏனெனில், இரு கட்சிகளுக்கிடையேயுள்ள கூட்டணி ஒப்பந்தத்தில் தேசியப் பிரச்சினையைத் தீர்ப்பது தொடர்பாக இருமாறுபட்ட கருத்துக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

இவ்வாறான சூழ்நிலையில் தமிழீழ விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தைக்கு வருவது சநதேகத்தை ஏற்படுத்தியுள்ளது என்று பட்டி வீரக்கோன் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இந்திய அகதிமுகாமில் பிறந்த குழந்தைகளுக்கு பிரஜாவுரிமை

(சென்னை)

தமிழ் நாட்டு அகதி முகாம்களில் பிறந்த இலங்கைத் தமிழ்க் குழந்தைகள் அனைவருக்கும் - பிரஜாவுரிமை வழங்கும் திட்டத்தை இலங்கை அரசாங்கம் இலகுவாக்கியுள்ளது.

பிரஜாவுரிமைப் பதிவு நடைமுறைகளை அரசாங்கம் தளர்த்தியிருப்பதனாலும், அகதி முகாம்களில் பிறந்த குழந்தைகளிடமிருந்து பிரஜாவுரிமையின் பூரண நன்மைகளைத் தமிழ் நாட்டு அகதிமுகாம்களில் பிறந்த 7000 இற்கும் அதிகமான தமிழ்க் குழந்தைகள் அனுபவிக்க முடியும் என்றும் இலங்கை வெளிவிவகார அமைச்சு நம்பிக்கை தெரிவித்துள்ளது.

# ஐ.தே.கட்சி எம்.பிக்கள் மூவர் கட்சியிலிருந்து விலக முடிவு!

## ரவூப் ஹக்கீம் தெரிவிப்பு

ஐக்கிய தேசிய முன்னணிக்கு ஆதரவு அளித்துவரும் அதாவுல்லா தலைமையிலான மூன்று நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஐக்கிய தேசிய முன்னணியிலிருந்து விலகுவதற்கு நடவடிக்கை எடுத்துவருவதாக, அரசியல் வட்டாரங்களிலிருந்து தெரியவருகின்றது.

இந்த மூன்று நாடாளுமன்ற உறுப்பினர்களும் பொதுஜன ஐக்கிய முன்னணியைச் சேர்ந்த பிரபல அரசியல்வாதிகளோடு கலந்துரையாடிவருவதாகத் தெரியவருகின்றது.

இவர்கள் ஐக்கிய தேசிய முன்னணியிலிருந்து விலகுவதற்கு ஆயத்தங்கள் செய்வதாக, முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

# தென்மாகாணசபை உறுப்பினர்கள் மீது ஐ.தே.க ஒழுக்காற்று நடவடிக்கை

தென்மாகாணசபையைக் கலைக்கவேண்டாம் எனக் கோரும் கடிதம் ஒன்றை ஆளுநருக்கு அனுப்பிய மாகாணசபை உறுப்பினர்கள்மீது, ஐக்கிய தேசியக் கட்சியின் உயர் மட்டம் ஒழுக்காற்று விசாரணைகளை நடத்த முடிவு செய்துள்ளது.

அமைச்சரவைக் கூட்டத்தில் ஏழு மாகாண சபைகளையும் கலைப்பது என்று முடிவாகியிருந்தது. ஆனால், பொதுஜன ஐக்கிய முன்னணி மற்றும் ஐ.தே.க. மாகாணசபை உறுப்பினர்கள் சிலர் இணைந்து, தென்மாகாண சபைகளை கலைக்கவேண்டாம் என்று கோரும் மனு ஒன்றை ஆளுநர் கிங்ஸ்லி விக்கிரமரட்ணவிடம் கையளித்தனர்.

இதையடுத்து தென்மாகாணசபையின் ஐ.தே.க. உறுப்பினர்கள் அனைவரையும் அலரிமாளிகையில் கடந்த 4 ஆம் திகதி நடந்த கூட்டம் ஒன்றில் கலந்துகொள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அழைப்பு விடுத்தார்.

இந்தக் கூட்டத்தில் பிரதமர் - கட்சியின் கொள்கை மற்றும் முடிவுகளுக்கு விரோதமாக செயற்பட்டு - இத்தகைய கோரிக்கையை விடுத்த மாகாணசபை உறுப்பினர்கள் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கமுடிவுசெய்யப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் அமைச்சர்கள் கரு ஜெயசூரிய, வஜிர அபயவர்த்தன மற்றும் ஐ.தே.க. தவிசாளர் மலிக் சமரவிக்கிரம, பொதுச் செயலாளர் செனரத் கப்புகொட்டுவவும் கலந்துகொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.





அரசியல் விவகாரப் பயணத்தை மேற்கொண்டிருக்கும் அரசியற் துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் தலைமையிலான புலிகளின் குழுவினர் ஜேர்மன் அரசுப் பிரதிநிதிகளை சந்தித்தபோது எடுக்கப்பட்ட படங்கள்.

# தாய் நாட்டைப் பாதுகாப்பதாக இருந்தால் புதிய கூட்டணியை சிஹல உறுமய ஆதரிக்கும்!

## செயலாளர் உதய கமன்வில தெரிவிப்பு

சிறிலங்கா சுதந்திரக் கட்சியும், ஜே.வி.பியும் இணைந்து உருவாக்கியுள்ள ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி - தாய் நாட்டைப் பாதுகாப்பதாக இருந்தால், சிஹல உறுமய அந்த முன்னணிக்கான ஆதரவை வழங்கத் தயாராகவுள்ளது என சிஹல உறுமயவின் செயலாளர் உதய கமன்வில தெரிவித்தார்.

கொழும்பு நகரின் புறநகர்ப் பகுதியான கண்ணொறுவ என்ற இடத்தில் முதலாவதாக நடந்த அவர்களது கட்சி அலுவலகத் திறப்பு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றும்போது, அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

இரு கட்சியினராலும் உருவாக்கப்பட்ட ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியினரின் நடவடிக்கைகளில் சிஹல உறுமய விழிப்பாக உள்ளது.

நாட்டை பிளவுபடுத்துவதற்கு ஜனநாயக தலைவர்கள் இடமளிக்கக்கூடாது. அத்துடன், சகல இனங்களும் நாட்டில் இணக்கத்துடன் வாழ வழியேற்படுத்திக் கொடுக்க வேண்டுமெனவும் அவர் தெரிவித்தார்.

# அமெரிக்க பிரதிநிதிகள் இருவர் இலங்கைக்கு விஜயம்

(கொழும்பு)

அமெரிக்காவில் நிதி நிறுவனப் பிரதிநிதிகள் இரண்டு பேர் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார்கள்.

சர்வதேச அபிவிருத்தி நிலையத்தின் தலைவரும், கிழக்கு ஆசிய அபிவிருத்தி அமைப்பின் தலைவருமே இலங்கை விஜயம் செய்யவுள்ளனர்.

11 ஆம் திகதியில் இருந்து 14 ஆம் திகதிவரை இந்த அமெரிக்கப் பிரதிநிதிகள் இலங்கையில் தங்கியிருப்பார்கள் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கையின் அபிவிருத்தி சமாதான நகர்வு மற்றும் போர்நிறுத்த உடன்பாடு தொடர்பாக ஆராய வந்ததாகவே இவர்கள் இலங்கைக்கு விஜயம் செய்துள்ளார்கள் என்று கூறப்படுகின்றது.

# 2500 தமிழ்மொழிமூல ஆசிரியர்களை நியமிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை

வடக்கு - கிழக்குத் தவிர்ந்த தமிழ்மொழிமூல பாடசாலைகளுக்கு 2500 ஆசிரியர்களை நியமிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருவதாக கல்வி, மனிதவள அபிவிருத்தி, கலாசார அமைச்சர் கருணாசேன கொடிதுவக்கு நாடாளுமன்றில் தெரிவித்தார். இதில் 800 ஆசிரியர்கள் மத்திய மாகாண பாடசாலைகளுக்கு நியமிக்கப்படுவார்கள்.

வடக்கு - கிழக்கு தவிர்ந்த தமிழ்மொழிமூல பாடசாலைகளுக்கே இந்த ஆசிரிய நியமனங்கள் வழங்கப்படவுள்ளன. வடக்கு - கிழக்கிற்கு 3000 ஆசிரியர்கள் ஏற்கனவே நியமிக்கப்பட்டுள்ளனர் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# தேசிய வனவிலங்கு பூங்காவுக்கு உல்லாசப் பிரயாணிகள் அதிகரிப்பு

உடவளவ தேசிய வனவிலங்கு பூங்காவுக்கு வருகைதரும் உள்ளூர், வெளிநாட்டு உல்லாசப் பிரயாணிகளின் எண்ணிக்கை அதிகரித்துவருவதாக இந்தப் பூங்காவைப் பராமரிக்கும் பொறுப்பாளர் சுசங்க குணவர்த்தன தெரிவித்தார்.

இங்குள்ள வினவிலங்குகளுக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படாத வகையில் உல்லாசப் பிரயாணிகளுக்கான வசதிகளை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த வனவிலங்கு சரணாலயத்தில் 500 யானைகள் வாழ்கின்றன. கொழும்பிலிருந்து இங்கு தரைவழியாக விஜயம் செய்யும் உல்லாசப் பிரயாணிகள் - ஒருமணிநேரத்தில் இந்த இடத்தை அடையமுடியும்.

இங்கு விஜயம் செய்யும் உள்ளூர் உல்லாசப் பயணி ஒருவருக்கு கட்டணமாக 20 ரூபாவும், வெளிநாட்டவர் ஒருவருக்கு 12 டொலரும் அறவீக்கப்படுகிறது.

# 116 வருடம் உயிர்வாழ்ந்த உறாவத்தளைப் பெண்மணி

(கொழும்பு)

இலங்கையில் ஆக்க்கூடுதலான காலம் உயிர்வாழ்ந்த பெண் - தனது 116 ஆவது வயதில காலமானாா். காலியிலுள்ள உறாவத்தளை என்ற இடத்தைச் சேர்ந்த ஓ.ரி.எகொனோனா என்ற பெண்ணே தனது 116 ஆவது வயதில் காலமானார். இவர் தனது தந்தையாரின் சாதனையான 110 வயது வரையான சாதனையை முறியடித்து, 116 வயதுவரை வாழ்ந்திருக்கிறார்.

இந்தப் பெண் தனது வாழ்நாளில் சைவ உணவையே உண்டு வந்ததாகவும், இறக்கும் வரை நல்ல தேகாரோக்கியத்துடன் வாழ்ந்ததாகவும் மருத்துவர்கள் தெரிவித்தனர். தனது மைத்துனரை 18 வயதில் காதல் திருமணம் செய்துகொண்ட இந்தப் பெண் - 5 ஆம் வகுப்புவரை கல்வி கற்றிருந்தார். தவறான தண்டனை ஒன்றை தனது ஆசிரியர் வழங்கியதால், பாடசாலையிலிருந்து இப்பெண் பத்து ஆவது வயதில் விலகிக்கொண்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பெண்ணின் இரண்டு மகன்மார் திருமணமாகி வெளியூரில் வசித்து வரும் அதேவேளை, திருமணமாகாத மூன்று மகள்மாரே இவரைப் பராமரித்து வந்தன. கணவரை 61 வயதில் இழந்த இந்தப் பெண்ணின் இளையமகளுக்கு, தற்போது வயது 79 வயது ஆகும்.

கடந்த வியாழக்கிழமை காலமான இலங்கையில் ஆகக்கூடுதலான வயதுவரை வாழ்ந்த இந்தப் பெண்ணின் மரணச் சடங்கு நேற்றுமுன்தினம் அவரது சொந்த ஊரிலேயே இடம்பெற்றது.

# ஓரிரு மாதங்களுக்கு வரட்சி நிலை தொடரும்

(கொழும்பு)

நாட்டில் தற்போது ஏற்பட்டிருக்கும் வரட்சிநிலை இன்னும் ஓரிரு மாதங்களுக்கு தொடரும் என, இலங்கை காலநிலை அவதான நிலையத்தின் பிரதிப் பணிப்பாளர் அமரசிங்க தெரிவித்தார்.

பொதுமக்கள் நீரையும், மின்சாரத்தையும் சிக்கனமாகப் பாவிப்பதன்மூலம் இந்த வரட்சி நிலையால் ஏற்படக்கூடிய பிரச்சினைகளை ஓரளவு தவிர்த்துக் கொள்ளமுடியும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த வரட்சி நிலை எதிர்வரும் ஏப்ரல் மாதம் வரை நீடிக்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இனிவரும் காலங்களில் இலங்கையில் மின் உற்பத்திக்கான வேறு வழிகளைக் கையாள்வதுடன், நீர் வழங்கலுக்கும் புதிய நடைமுறைகளைக் கையாளவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (01)

# 500 மில்லியன் டொலர் முதலீடு இவ்வாண்டு கிடைக்கும்

(கொழும்பு)

இந்த ஆண்டில் 500 மில்லியன் அமெரிக்க டொலர்களை வெளிநாடுகளிலிருந்து முதலீடாகப் பெறுவதற்கு இலங்கை முதலீட்டுச்சபை இலக்கு நிர்ணயித்துள்ளது.

கடந்த ஆண்டில் 240 மில்லியன் அமெரிக்க டொலர் முதலீடுகள் இலங்கையில் மேற்கொள் ளப்பட்டதால், இந்த இலக்கு சாத்தியமானதே என முதலீட்டுச்சபை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை, எதிர்வரும் 2006 ஆம் ஆண் டில் 1 பில்லியன் டொலர் முதலீடுகளை ஏற்படுத்தும் வகையிலான திட்ட இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருப்பதாகவும், இதே இலக்கினை குறுகிய காலத்துக்குள் நிறைவேற்றக்கூடிய வகையிலான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான வசதிகளை ஏற்படுத்திக்கொள்ள இருப்பதாக அந்த அதிகாரி தெரிவித்தார்.

# முன்னணி வீரர்களின் ஆட்டமிழப்புக்கள்தான் அவுஸ்ரேலியாவுடனான தோல்விக்கு காரணம்

## இந்திய அணித்தலைவர் கங்கூலி தெரிவிப்பு

இந்திய, அவுஸ்ரேலிய, சிம்பாப்வே ஆகிய மூன்று நாடுகள் பங்கேற்கும் கிரிக்கெட், அவுஸ்ரேலியாவில் நடந்து வருகின்றது.



இதில் இறுதிப்போட்டிக்கு இந்திய - அவுஸ்ரேலிய அணிகள் தகுதிபெற்றன. இறுதிப்போட்டி மூன்று ஆட்டங்களாக நடைபெறுகின்றது. இதன் முதல் இறுதிப்போட்டியில் நேற்று முன்தினம் இந்திய-அவுஸ்ரேலிய அணிகள் மோதின. நாணயச் சுழற்சியில் வென்ற இந்திய அணி முதலில் துடுப்பெடுத்தாடியது. கடைசி லீக் ஆட்டங்களில் ஓட்டங்கள் எடுக்கத்திணறியது போலவே, இறுதிப்போட்டியிலும் இந்தியா திணறியது.

அவுஸ்ரேலிய அணியின் அனல் பறக்கும் பந்துவீச்சில், இந்தியா ஓட்டம் எடுக்கமுடியாமல் தள்ளாடியது. 70 ஓட்டங்கள் சேர்ப்பதற்குள்ளேயே, 6 விக்கெட்டை இழந்தது.

பதானியும், அகர்கரும் பொறுமையுடன் ஆடி அணியின் ஓட்ட எண்ணிக்கையை சற்று உயரச் செய்தனர். இந்திய அணி 49 ஓவரில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 222 ஓட்டங்களை மட்டுமே எடுத்தது.

எளிதான இலக்குடன் களமிறங்கிய அவுஸ்ரேலிய அணி, வழக்கம்போல அதிரடியாக ஆடி ஓட்டங்களை குவிக்கத்தொடங்கியது.

கில்கிறிஸ்ட் 38 ஓட்டங்கள் எடுத்தபோது ஆட்டமிழந்தார். இதனையடுத்து, பொண்டிங், ஹைடனுடன் ஜோடிசேர்ந்து இந்திய பந்துவீச்சை விளாசித்தள்ளினார். ஹைடன் 50 ஓட்டங்களும், பொண்டிங் 88 ஓட்டங்களும் எடுதது ஆட்டமிழந்தனர்.

முடிவில் அவுஸ்ரேலிய 40.1 ஓவரில் 3 விக்கெட்டு இழப்பிற்கு 224 ஓட்டங்கள் எடுத்து வெற்றிபெற்றது. சைமன்ஸ் 10 ஓட்டங்களுடனும், மார்ட்டின் 28 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர். ஆட்டநாயகனாக பொண்டிங் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

போட்டி முடிவில் இந்திய அணித்தலைவர் கங்கூலி பேட்டியளித்தார். அந்தப்பேட்டியில் அவர் கூறியதாவது - முன்னணி துடுப்பாட்ட வீரர்களான டெண்டுல்கர், சேவாக், லக்ஸ்மன், ராவிட், மற்றும் நான் நிலைத்து நின்று ஆடாததே தோல்விக்கு காரணம். நாங்கள் 70 ஓட்ங்கள் எடுப்பதற்குள்ளே 6 விக்கெட்டுக்களை இழந்துவிட்டோம். டெண்டுல்கரும், சேவாக்கும் ஓட்டங்கள் குவிக்கும் வெறியுடன் ஆடவில்லை. எங்கள் துடுப்பாட்ட வீரர்களின் ஓட்ட குவிப்பு முடிந்துபோகவில்லை. அவர்கள் மீண்டும் சிறப்பாக விளையாடுவார்கள்.

பதானியும், அகர்கரும் ஆட்டத்தின் நிலமையை உணர்ந்து சிறப்பாக ஆடினார்கள். அடுத்து நடைபெறும் இறுதி ஆட்டங்களில் நம்பிக்கையுடன் ஆடி வெற்றிபெற்று கிண்ணத்தை கைப்பற்றுவோம். என்று அவர் கூறினார்.

அவுஸ்ரேலிய அணித்தலைவர் ரிக்கி பொண்டிங் பேட்டியளிக்கையில் - இந்தப்போட்டியில் வெற்றிபெற்றது மகிழ்ச்சியாக இருக்கிறது. நாங்கள் வெற்றிபெறுவோம் என்ற நம்பிக்கையுடன் ஆடினோம், அதுபோல் வெற்றியும் பெற்றோம். அடுத்த ஆட்டத்தில் வெற்றிபெற்று சம்பியன் பட்டம்பெறுவோம். கில்கிறிஸ்ட் அதிரடியாக விளையாடி 20 பந்துகளில் 38 ஓட்டங்களைக் குவித்தார். அவர் இந்தியாவுகுகு எதிராக மிகச்சிறப்பாக விளையாடி வருகிறார். இதேபோன்று ஆட்டத்தை தொடர வேண்டும் என்று அவரிடம் வலியுறுத்தியுள்ளேன் என்றும் அவர் கூறினார்.

இந்திய - அவுஸ்ரேலிய அணிகளுக்கிடையிலான இரண்டாவது இறுதிப்போட்டி இன்று சிட்னியில் பகலிரவு ஆட்டமாக நடைபெறுகின்றது.

## வடமராட்சி வலய மென்பந்து போட்டிகள்

வடமராட்சி வலயப்பாடசாலைகளுக்கிடையில் 19 வயதிற்குட்பட்டோருக்கான மென்பந்து கிரிக்கெட்சுற்றுப்போட்டி இன்று முதல் 14 ஆம் திகதிவரை, திக்கம் இளைஞர் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இதில், இன்று காலை 8 மணிக்கு கரவெட்டி ஞானாசாரியர் கல்லூரியை எதிர்த்து, வல்வெட்டி இ.த.க.பாடசாலையும், 10 மணிக்கு பருத்தித்துறை வேலாயுதம் மகாவித்தியாலயத்தை எதிர்த்து, வல்வை சிவகுரு வித்தியாலயமும், பி.ப. 2மணிக்கு இமையாணன் அ.த.க.பாடசாலையை எதிர்த்து, பருத்தித்துறை தும்பளை சிவப்பிரகாசா வித்தியாலயமும், மாலை 4 மணிக்கு தேவரையாளி இந்துக்கல்லூரியை எதிர்த்து, நெல்லியடி மகாவித்தியாலயமும் மோதவுள்ளன. (12) (16)

## நடுவர் வெங்கட் ராகவன் ஓய்வுபெறுகிறார்

தமிழ்நாட்டைச் சேர்ந்த முன்னாள் பிரபல சுழற்பந்துவீச்சாளர் வெங்கட் ராகவன், இந்திய அணியின் முன்னாள் அணித்தலைவராக இருந்தவர். இவர் இப்போது சர்வதேச கிரிக்கெட் அமைப்பில் (ICC) நடுவராக பணியாற்றி வருகிறார்.

அடுத்த மாதத்திலிருந்து வெங்கட் ராகவன் ஓய்வுபெறுகிறார். இதனை (ICC) தலைமை நிர்வாகி மல்கம் ஸ்பீட் தெரிவித்தார். 75 டெஸ்ட் மற்றும் 52 ஒருநாள் போட்டியில் நடுவராக பணியாற்றியுள்ள வெங்கட் ராகவன், 1992 - 1993 ஆம் ஆண்டில் இந்திய-இங்கிலாந்து போட்டியில் முதன் முதலாக நடுவராகப் பணியாற்றினார்.

அடுத்த மாதம் 16 ஆம் திகதி கண்டியில் தொடங்கும் அவுஸ்ரேலிய - இலங்கை அணிகள் இடையேயான இரண்டாவது டெஸ்போட்டியில் வெங்கட் ராகவன் நடுவராக இருப்பார். இதுவே அவரது கடைசிப்போட்டியாகும்.

## வள்ளுவன் இல்லம் முதலிடம்

கரவெட்டி தேவரையாளி இந்துக்கல்லூரி வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி, கடந்த வியாழக்கிமை பி.ப.1.30 மணிக்கு அதிபர் ம.குட்டித்தம்பி தலைமையில் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

இந்தப் போட்டியில், வள்ளுவன் இல்லம் (மஞ்சள்) 373 புள்ளிகளைப் பெற்று சம்பியன் கிண்ணத்தைத் தனதாக்கிக் கொண்டது. 337 புள்ளிகளைப் பெற்ற பாரதி இல்லம் (சிவப்பு) 2 ஆம் இடத்தையும், 264 புள்ளிகளைப் பெற்ற காந்தி இல்லம் (பச்சை) மூன்றாவது இடத்தையும் பெற்றுக்கொண்டன. (12, 116)

# விளையாட்டு

## நல்லூர் கல்விக்கோட்ட கரப்பந்தாட்ட போட்டிகள்

நல்லூர் கோட்ட பாடசாலைகளுக்கிடையே இந்த வருட கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டிகள் நடைபெற்று முடிவடைந்துள்ளன. இந்தப்போட்டிகளில் 15 வயதுப்பிரிவு, 17 வயதுப்பிரிவு, 19 வயதுப்பிரிவு, ஆகியவற்றில் வெற்றிபெற்ற பாடசாலை அணிகளின் விபரம் வருமாறு- 15 வயதுப்பிரிவில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி முதலாம் இடத்தையும், கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம் இரண்டாம் இடத்தையும் பெற்றுக்கொண்டன.

17 வயதுப்பிரிவில் - அரியாலை ஸ்ரீபார்வதி வித்தியாசாலை முதலாம் இடத்தையும், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி இரண்டாம் இடத்தையும், கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம் மூன்றாம் இடத்தையும் பெற்றுக்கொண்டன.

19 வயதுப் பிரிவில் - யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி முதலாம் இடத்தையும், இரண்டாம் இடத்தை கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயமும் பெற்றுக்கொண்டன.

நல்லூர் கோட்ட வலைப்பந்தாட்ட போட்டிகள் யாழ் இந்து மகளிர் கல்லூரி மைதானத்தில் நாளைமுதல் நடைபெற்று இறுதிப்போட்டி, எதிர்வரும் வெள்ளிக்கிழமை நடைபெற ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (58)

## பருத்தித்துறை கோட்ட வலைப்பந்தாட்ட போட்டி

பருத்தித்துறை கோட்டமட்ட பாடசாலைகளுக்கிடையிலான வலைப்பந்தாட்டப் போட்டி நாளை ஆரம்பமாகி, 11 ஆம் திகதிவரை பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரி மைதானத்தில் தினமும் பி.ப.2 மணிக்கு நடைபெறவுள்ளது.

19 வயது பிரிவில்- மெதடிஸ்த பெண்கள் உயர்பாடசாலை, சென்.தோமஸ் றோ.க.பெ. பாடசாலை, வட.இந்து மகளிர்கல்லூரி, வல்வை மகளிர் மகாவித்தியாலயம் ஆகிய பாடசாலைகள் போட்டியின்றி நேரடியாக வலயமட்ட போட்டிக்காக தெரிவுசெய்யப்பட்டுள்ளன.

நாளை 15 வயது ‘ஏ’ பிரிவில்- மெதடிஸ்த பெ.உயர்தர பாடசாலை எதிர் வல்வை சிவகுரு வித்தியாலயமும், 15 வயது, ‘பி.’ பிரிவில்- புற்றளை மகாவித்தியாலயத்தை எதிர்த்து தொண்டமனாறு வீ.ம.வித்தியாலயமும், 17 வயது ‘ஏ’ பிரிவில் - வட. இந்து மகளிர் கல்லூரியை எதிர்த்து வல்வை சிவகுரு வித்தியாலயமும் மோதவுள்ளன.

நாளை மறுதினம் 15 வயது ‘ஏ’ பிரிவில்- மெதடிஸ்த பெ.உ.பாடசாலையை எதிர்த்து வல்வை மகளிர் மகாவித்தியாலயமும், 15 வயது ‘பி’ பிரிவில்- வட.இந்து மகளிர் கல்லூரியை எதிர்த்து புற்றளை மகாவித்தியாலயமும், 17 வயது ‘ஏ’ பிரிவில்- வடஇந்து மகளிர் கல்லூரியை எதிர்த்து சென்தோமஸ் றோ.க.பெ.பாடசாலையும் மோதவுள்ளன.

எதிர்வரும் 11 ஆம் திகதி, 15 வயது ‘ஏ’ பிரிவில்- வல்வை மகளிர் ம.வித்தியாலயத்தை எதிர்த்து வல்வை சிவகுரு வித்தியாலயமும், 15 வயது ‘பி’ பிரிவில்- வட.இந்து மகளிர் கலலூரியை எதிர்த்து தொண்டமனாறு வீரகத்திப்பிள்ளை மகாவித்தியாலயமும், 17 வயது ‘ஏ’ பிரிவில் - வல்வை சிவகுரு வித்தியாலயத்தை எதிர்த்து சென்.தோமஸ் றோ.க.பாடசாலையும் மோதவுள்ளன. (12)

## இல்ல மெய்வல்லுநர் போட்டி

வடமராட்சி மத்திய பெண்கள் கல்லூரியின் இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் எதிர்வரும் 14 ஆம் திகதி சனிக்கிழமை பி.ப. 2 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

கல்லூரியின் அதிபர் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில், பிரதம விருந்தினராக பருத்தித்துறை மாவட்ட நீதிபதி கே.அரியநாயகம் கலந்துகொள்வார். (12)

## இல்ல மெய்வல்லுநர் போட்டி

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியின் இல்லமெய்வல்லுநர் போட்டிகள் எதிர்வரும் 14 ஆம் திகதி சனிக்கிழமை பி.ப.2 மணிக்கு கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

கல்லூரி அதிபர் வே.பத்மநாதன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில், பிரதம விருந்தினராக சாவகச்சேரி மாவட்ட நீதிபதி பா.சுப்பிரமணியம் கலந்துகொள்வார். இடைவேளை நிகழ்வில் கல்லூரி மாணவர்களால் ஜிம்னாஸ்ரிக் காட்சியும் இடம்பெறவுள்ளது. (12)

# தேர்தல் பிரசாரத்தை வாஜ்பாய் அயோத்தியில் தொடங்கினார்!



இந்திய நாடாளுமன்றத்துக்கு ஏப்ரல் மாதம், 2 ஆவது வாரம் தேர்தல் நடைபெறவுள்ளது. தேர்தல் திகதி அட்டவணையை தலைமை தேர்தல் ஆணையகம் அடுத்தவாரம் அறிவிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

தேர்தல் திகதி அறிவிக்கப்பட்ட பின்னர், பிரசாரத்திற்கு மிகக் குறுகிய கால அவகாசமே உள்ளதால், பாரதீயஜனதா, காங்கிரஸ் தலைவர்கள் பிரசாரத்தை தொடங்கிவிட்டார்கள். பாரதீய ஜனதா சார்பில் நேற்று முறைப்படி பிரசாரத்தை பிரதமர் வாஜ்பாய் தொடங்கினார்.

இதற்காக அவர் நேற்றுக்காலை டெல்கியில் இருந்து இராணுவ விமானத்தில் உத்தர பிரதேச தலைநகர் லக்னோ சென்றார். அங்கிருந்து அவர் ஹெலிகெப்டர் மூலம் கத்ரா நகருக்குச் சென்றார். கத்ரா நகரிலிருந்து அயோத்திக்கு புதிய ரயில் பாதை போடப்பட்டுள்ளது. இதற்காக சரயுநதியின் குறுக்கே புதிய ரயில்வே மேம்பாளம் கட்டப்பட்டுள்ளது. அந்த ரயில்வே மேம்பாளத்தை நேற்று மதியம் பிரதமர் வாஜ்பாய் திறந்துவைத்தார். பிறகு அவர் கத்ராவிலிருந்து பைசாபாத் நகருக்கு ரயிலில் பயணம் செய்தார்.

கத்ரா - பைசாபாத் இடையேயான 8 கிலோமீற்றர் தூர ரயில்பாதை எந்நேரமும் பலத்த பாதுகாப்பு போடப்பட்டிருந்தது. இரண்டே இரண்டு சொகுசுப் பெட்டிகள் இணைக்கப்பட்ட இந்த ரயிலை சுமார் இருபது ஆண்டுக்குப் பிறகு இந்திய பிரதமராக பதவி வகிக்கும் ஒருவர் பயன்படுத்தியுள்ளார்.

பைசாபாத் சென்ற வாஜ்பாய்க்கு, உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. பிறகு அவர் அங்கு நடந்த பிரமாண்ட பொதுக்கூட்டத்தில் பேசினார். பாரதீய ஜனதாவுக்கு ஆதரவு திரட்

வாஜ்பாய், இரண்டு பொதுக்கூட்டங்களில் பேசினார்.

# ராமராவின் மரணத்தில் மர்மம்; மனைவி எழுதிய நூலில் தகவல்!

(ஜதராபாத்)

ஆந்திர மாநில மக்களிடம் அமோக செல்வாக்குப் பெற்று, மிகக்குறுகிய காலத்தில் ஆட்சியைப் பிடித்த எம்.டி.ராமராவ் எட்டு ஆண்டுகளுக்கு முன்பு திடீரென மரணமடைந்தார்.

1996 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 17 ஆந் திகதி அவர் மரணமடைந்தபோது, அவரது மனைவி லட்சுமி பார்வதி மட்டுமே உடனிருந்தார். எனவே எம்.டி.ராமராவ் சாவில் மர்மம் இருப்பதாக பரபரப்புத் தகவல் வெளியானது.

1993 ஆம் ஆண்டு எம்.டி.ராமராவைத் திருமணம் செய்த லட்சுமி பர்வதி, ராமராவ் புகழைப் பயன்படுத்தி அரசியலில் முன்னேற முயன்றார். ஆனால், ஆந்திர மக்கள் ஏற்காததால் அவர் அரசியலில் இருந்து ஒதுங்கினார்.

இதையடுத்து அவர் ராமராவ் வாழ்க்கை வரலாற்றை புத்தகமாக எழுதினார். அதில் ராமராவ் வாழ்வில் நடந்த முக்கிய சம்பவங்களைத் தொகுத்துள்ளார்.

ராமராவ் சாவில் இருக்கும் மர்மத்தை அந்தப் புத்தகத்தில் விபரமாக எழுதியுள்ளார். குறிப்பாக எம்.டி.ராமராவை உண்மையில் கொலைசெய்தது யார்? என்பதை லட்சுமி பார்வதி வெட்டவெளிச்சமாக்கியுள்ளாராம்.

இந்தத் தகவல் ஆந்திர அரசியலில் பெரும் புயலைக்கிழப்பியுள்ளது. இந்தமாத இறுதியில் அந்தப்புத்தகம் விற்பனைக்கு வரும்போது மேலும் பரபரப்பை ஏற்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

ராமராவை கொன்றவர் பற்றி என்ன எழுதியிருக்கிறார் என்று கேட்கப்பட்டதற்கு, லட்சுமி பார்வதி பதில் சொல்ல மறுத்துவிட்டார். ராமராவ் மரணமடைந்த கடைசி சிலமணி நேரம் அவருடன் நான்தான் இருந்தேன் அப்போது நடந்த சம்பவத்தை புத்தகத்தில் எழுதியுள்ளேன் என்றார். .



சந்திரபாபு நாயுடுதான் ராமராவ் முதுகில் குத்திவிட்டார். அதை ராமராவால் தாங்கிக் கொள்ள முடியாமல்போய்விட்டது என்றும், புத்தகத்தில் லட்சுமி பார்வதி எழுதியிருக்கிறார்.

### அராலியில் அறநெறி பாடசாலை

'அன்பு' அறநெறி பாடசாலை- அராலி மத்தி நாச்சிமார் ஆலய முன்றலில், பிரதி சனி, ஞாயிறு நடைபெற்று வருகிறது. இந்தப் பாடசாலையில் சுமார் அறுபது மாணவர்கள் தமது கல்வியைத் தொடர்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (118)

### பல் கிளினிக் நாட்கள்

தெல்லிப்பழை மாவட்ட வைத்தியசாலை பல்வைத்திய அதிகாரி செவ்வாய், வியாழன் அகிய இரு தினங்களும் கோப்பாய் அரசினர் வைத்தியசாலைக்குச் செல்வதால், பல் பிடுங்கவோ அல்லது ஆலோசனை பெறவோ வரும் நோயாளர்கள் செவ்வாய், வியாழன் தவிர்ந்த ஏனைய நாட்களில் வருமாறு கேட்கப்பட்டுள்ளனர். (118)

# மகஜர் கையளிக்கச் சென்ற எம்மை பொலிஸார் தாக்கமுற்பட்டனர்

## மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் - யாழ் பிரதேச செயலகத்தின் முன்பாக தமது கோரிக்கை அடங்கிய மகஜர் ஒன்றை, பிரதேச செயலரிடம் கையளிக்க சென்ற நேரம் பொலிஸார் பெண்களைக் காலால் அடித்து விரட்டியதாக மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் - மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளனர்.

மேலும் முறைப்பாட்டில் தெரிவிக்கப்படுவதாவது -

பாசையூர், மகேந்திரபுரம், வளன்புரம், உதயபுரம், புனிதபுரம் ஆகிய கிராமத்தைச் சேர்ந்த மக்கள் - முன்னறிவித்தல் கொடுத்து, சுதந்திர தினத்தன்று எமது கோரிக்கையை உரியவர்களிடம் ஒப்படைக்க இருந்தோம். அந்தநேரம் இராணுவத்தினர் வந்து பார்வையிட்டுச் சென்றனர். பின்னர் பொலிஸார் தங்கள் வாகனங்களில் வந்து, எம்மை வீடுகளுக்குச் செல்லுமாறு வற்புறுத்தி, பெண்கள் கைகளைப் பிடித்து இழுத்து- அவர்களைக் கால்களால் அடித்து விரட்டினர்.

பின்னர் 10 நிமிடம் கழித்து பெண் பொலிஸாருடன் வந்து எம்மைத்தாக்க முற்பட்டபோது, தாம் சிதறி ஓடிவிட்டதாகவும் அவர்கள் முறைப்பாட்டில் தெரிவித்தனர். அப்போது வந்த இராணுவத்தினர் - எங்கள் மனுக்களை வாங்கி, தாம் உரியவரிடம் கையளிப்பதாகக் கூறினர் எனவும் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

### கரவெட்டிப் பிரதேசத்தில் இலவச மூக்குக்கண்ணாடிகள்

(நவிண்டில்)

கரவெட்டி பிரதேச செயலகத்தில் இன்று காலை 9.00 மணி முதல் பிரதேச செயலர் க.கனகரத்தினம் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்த இலவச மூக்குக்கண்ணாடி வழங்கும் நிகழ்வு - வல்வெட்டித்துறை அரசினர் வைத்தியசாலையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வு வைத்திய கலாநிதி மயிலேறும்பெருமாளின் மேற்பார்வையின் கீழ்- லயன்ஸ் கழகத்தினரால் இலவச கண்ணாடிகள் வழங்கப்படவுள்ளன.

35 கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த 140 பேருக்கு இலவசமாகக் கண்ணாடிகள் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (116)

# சட்டவிரோதமாக மண் ஏற்றிய 9 பேர் பொலிஸாரால் கைது

## வாகனங்களும் கைப்பற்றப்பட்டன

(மிருசுவில்)

மிருசுவில் பகுதியில் சட்டவிரோதமாக மண் கடத்திய இரு லொறிகளும், உழவு இயந்திரம் ஒன்றும் படையினரால் பறிக்கப்பட்டன.

கொடிகாமம், மிருசுவில் பகுதிகளில் அண்மைக்காலமாக சட்டவிரோதமாக மண் ஏற்றப்பட்டு வந்தன.

சட்டவிரோதமாக மணல் அள்ளப்படுவதால், வயல் நிலங்கள் பாதிக்கப்படுகின்றன.

இது தொடர்பாக அப்பகுதி மக்கள் பொலிஸாரிடம் முறையிட்டனர். இதனை அடுத்து மணல் ஏற்றும் இடத்துக்குப் பொலிஸார் சென்றவேளை - அங்கு இரு லொறிகளும், உழவு இயந்திரம் ஒன்றும் மண் ஏற்றிக்கொண்டிருந்தன.

உடனடியாக மணல் ஏற்றிய ஒன்பது பேர்களைக் கைது செய்ததுடன், உபகரணங்கள் அனைத்தையும் எடுத்துச்சென்றனர்.

கைது செய்யப்பட்ட 9 பேரும் சாவகச்சேரி நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

# ஊர்போகும் மேகங்கள் ஒலிப்பாடல் தொகுப்பு யாழ்.பல்கலைக்கழகத்தில் வெளியிடப்பட்டது

வரும் பகை திரும்பும், ஊர்போகும் மேகங்கள் ஆகிய ஒலிப்பாடல் தொகுப்புகள் நேற்றுமுன்தினம் மாலை யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் வெளியிட்டு வைக்கப்பட்டது.

இந்த வெளியீட்டு நிகழ்வில், பொதுச் சுடரை நிதர்சன படப்பிடிப்பாளர் அரசனின் தந்தை முருகானந்தன் ஏற்றிவைத்தார்.

தேசியக்கொடியினைப் புலிகளின்குரல் பொறுப்பாளர் - ந.தமிழன்பன் ஏற்றிவைத்தார். தொடர்ந்து வரவேற்புரையை யாழ். மாவட்ட நிதர்சனப் பொறுப்பாளர் அப்பன் நிகழ்த்தினார்.

ஒலிப்பாடல் வெளியீட்டுரையை கலைபண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை நிகழ்த்தினார்.

ஒலிப்பாடல் பேழை வெளியீட்டில் - ஊர்போகும் மேகங்கள் என்ற ஒலிப்பாடல் தொகுப்பை, யாழ் மாவட்ட துணை அரசியல் பொறுப்பாளர் செம்மணன் வெளியிட்டு வைக்க, முதல் பிரதியை மனோன்மணி சண்முகதாஸ் பெற்றுக்கொண்டார். வரும்பகை திரும்பும் ஒலிப் பேழையை - கிட்டு பீரங்கிப் படையணி நிர்வாகப் பொறுப்பாளர் அமுதன் தன் வெளியிட்டு வைக்க, அருட்தந்தை பேணாட் அடிகள் பெற்றுக்கொண்டார்.

# உடல் ஆரோக்கியத்தை மேம்படுத்த விளையாட்டுத்துறை அவசியமாகிறது

## கல்விக்கழகத் துணைப்பொறுப்பாளர் அருண்

(நவிண்டில்)

மாணவர்கள் உலக அறிவை வளர்த்து, உன்னதமாக முன்னேற வேண்டும். 17 ஆயிரம் மாவீரர்களினதும் நினைவை நிறைவேற்றித்தர வேண்டுமென கரவெட்டி தேவரையாளி இந்துக் கல்லூரியில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டியில், சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய தமிழீழக் கல்விக்கழகத் துணைப்பொறுப்பாளர் க.அறிவு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் -

பல சாதனைகளை, பல விளையாட்டு வீரர்களை உருவாக்கிய விளையாட்டு மைதானத்திலிருந்து உரையாற்றுகிறேன். விளையாட்டு மைதானம் - அடிப்படைத் திறமைகளை வெளிப்படுத்தும் களமாக இருக்கவேண்டும்.

உடல் ஆராக்கியத்தை மேம்படுத்துவதற்கு விளையாட்டு அவசியமாகிறது. இந்தக் கிராம மக்களிடையே விளையாட்டுத்துறை முதன்மை வகிக்கிறது.

இன்று இங்கு போட்டியாளர்களைப் பார்க்கும்போது, சில போட்டியாளர்கள் நலிவுற்றவர்களாகக் காணப்பட்டனர். தொடர் பயிற்சி இல்லாமையே இதற்குக் காரணம்.

தொடர் பயிற்சிக்கு விளையாட்டு மைதானங்களைத் தொடர்ந்து பாவிக்கவேண்டும். சிலரின் சாதனைகளைப் பார்த்திருக்கிறீர்கள். நீங்களும் சாதிக்கமுடியும். அதற்கு தொடர் பயிற்சியை ஏற்படுத்தவேண்டும்.

வீரர்கள் தலைநிமிர்ந்து வாழ்வதற்கு, இந்தத் தேவரையாளி இந்துக் கல்லூரி பல சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது.

மற்றவர்களுக்கு முன்னுதாரணமாக நல்ல உள்ளங்களை இந்தக் கல்லூரி ஏற்படுத்தியுள்ளது.

ஏனைய கல்லூரிகளுக்குத் தளர்வில்லாத அதிபர்கள் இந்தக் கல்லூரிக்கு உதாரணமாகும்.

இந்தப் பிரதேச மக்கள் கேட்டுக்கொண்டதற்கு இணங்க ம.குட்டித்தம்பி - அதிபராக நியமிக்கப்பட்டார். கல்வி மேம்பாடுகளை, விளையாட்டுக்களை எடுத்துத் தந்தவர்தான் அதிபர் ம.குட்டித்தம்பி.

மாணவர்களாகிய நீங்கள் - திறமைகளை வெளிக்காட்டியுள்ளீர்கள். நீங்கள் சகல துறைகளிலும் சாதனை செய்யவேண்டும். அறிவை வளர்த்து உன்னதமான மாணவர்களாக நீங்கள் முன்னேறவேண்டுமென அவர் அங்கு தெரிவித்தார். (116)



நல்லூர் பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தால் மூத்த கூட்டுறவாளர் கௌரவிப்பு நிகழ்வின்போது, தலைவர் பெ.கனகசபாபதி உரையாற்றுவதையும், கௌரவிக்கப்படவுள்ள மூத்த கூட்டுறவாளர்களையும் படத்தில் காணலாம். (91)

### சமுர்த்தி அலுவலர்கள் இடமாற்றம்

(நவிண்டில்)

சாவகச்சேரி பிரதேச செயலகத்திலிருந்து சமுர்த்தி முகாமையாளர் கௌரி குணரத்தினம் - கரவெட்டிப் பிரதேச செயலர் பிரிவுக்கும், கரவெட்டிப் பிரதேச செயலர் பிரிவிலிருந்து ஆறுமுகம் இரகுநாதன் சாவகச்சேரிப் பிரதேச செயலகப் பிரிவிற்கும் கடந்த திங்கட்கிழமை முதல் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

இந்த இடமாற்றக் கடிதம் -சம்பந்தப்பட்ட பிரதேச செயலகங்களுக்கு மாவட்ட செயலகத்திலிருந்து அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (116)

# வல்லையில் கல்லுடைக்கும் ஆலை பெயர்பலகை விஷமிகளால் சேதம்

வல்லைவெளிப் பகுதியில் புதிதாக ஆரம்பிக்கப்படவிருந்த கல்லுடைக்கும் ஆலையொன்றின் முகப்பில் பொருத்தப்பட்டிருந்த பெயர்ப் பலகையை - இனந்தெரியாதவர்கள் அடித்து நொருக்கியுள்ளதுடன், இந்தப் பெயர்ப் பலகையை அருகே இருந்த புதர்கள் மத்தியில் தூக்கி வீசப்பட்டிருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவம் கடந்த 29 ஆம் திகதி திங்கட்கிழமை இரவு நடைபெற்றுள்ளது.

இந்த ஆலை தொடங்குவதற்கு இந்து கலாசார அலுவல்கள் அமைச்சர் தி.மகேஸ்வரன் அனுமதி வழங்கியிருந்தார்.

நேற்றுமுன்தினம் முற்பகல் அமைச்சரைச் சந்தித்த ஆலை நிறுவுனர் - இந்தச் சம்பவத்தை அமைச்சருக்குப் புகைப்படங்களுடன் விபரித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் - இந்தச் சம்பவம் நடைபெறுவதற்கு முதல்நாள் தன்னைச் சந்தித்த அந்தப் பகுதி கிராம அலுவலர் - அமைச்சராயினும், வேறெந்த அதிகாரிகளின் அனுமதி இருந்தாலும் அந்தப் பகுதியில் ஆலை திறக்க அனுமதிக்கப்படமாட்டாது எனக் கூறிச்சென்றதாகவும் முறையிட்டுள்ளார். (206)

# 13 வயதுச் சிறுமி மீது பலாத்கார முயற்சி சந்தேகத்தின்பேரில் ஒருவர் கைது!

பதின்மூன்று வயதுச் சிறுமியை சித்தப்பா முறையுள்ள நபர் ஒருவர் பாலியல் பலாத்காரத்தில் ஈடுபடுத்த முயற்சித்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணம் ஐந்துசந்திப் பகுதியில் இடம்பெற்றது. இந்தச் சம்பவம் தொடர்பாக தெரியவருவதாவது -

சிறுமி தனியாக வீட்டிலிருந்த வேளை, சித்தப்பா முறையுள்ள நபர் ஒருவர் அந்தச் சிறுமியைத் தனியான இடத்துக்குச் கூட்டிச் சென்று, பாலியல் பலாத்காரத்தில் ஈடுபடுத்த முயற்சித்தவேளை, சிறுமியின் தாயார் சிறுமியைத் தேடிவருவதைக் கண்டு, இந்த நபர் தப்பிச் சென்றுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக யாழ். பொலிஸ் நிலையத்துக்குத் தகவல் கிடைத்ததையடுத்து, சந்தேகத்தின் பேரில் சிறுமியின் சித்தப்பா முறையான நபர் கைது செய்யப்பட்டுள்ளார். பலத்காரத்தில் ஈடுபடுத்த முயற்சித்த சிறுமி - தற்போது யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருகின்றார்.

# வவுனியாவுக்குச் சென்ற நபர் சிறைச்சாலையில் தடுத்துவைப்பு

சாரதி அனுமதிப் பத்திரம் பெறுவதற்காக வவுனியா சென்ற நபர் - கொழும்பு மகசீன் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

காரைநகரைச் சேர்ந்த முரளிதரன் வயது 26 என்ற நபர் கடந்த மாதம் 26 ஆம் திகதி சாரதி அனுமதிப்பத்திரம் பெறுவதற்காக வவுனியா சென்றார்.

வவுனியா சென்ற இவரைக் காணவில்லை என இவரது மனைவி யாழ். பொலிஸ் நிலையத்திலும், மனித உரிமை ஆணைக்குழுவிலும் முறைப் பாடு செய்திருந்தார்.

காணாமற்போன இவர் தற்போது மகசீன் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது என இவரது மனைவி தெரிவித்தார்.

ஒருமாதத்திற்கு முன்புதான் வவுனியாவில் பிடிக்கப்பட்டு, நிரபராதி என்று விடுதலை செய்யப்பட்டார் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. தனது கணவன் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள விடயம் தொடர்பாக, அவரது மனைவி மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் முறையிட்டுள்ளார்.



## விளையாட்டு அரங்கம்

# தேவை மனிதனா?... இயந்திர மனிதனா?...

சர்வதேச கிரிக்கெட் ஆட்டங்கள் தொடரில் பல்வேறு வகையான சர்ச்சைகள் எப்போதுமே இருந்து வந்துள்ளன. அவை கிரிக்கெட் ஆட்டங்களை மேன்மேலும் மெருகுபடுத்தவே உதவிவருகின்றன.



ஸ்ரீவ்பக்னர்
**சோதனை மேல் சோதனை**

தற்போது இரண்டு விடயங்கள், இந்த வகையில் கூடுதலான கவனத்தைப் பெற்றிருக்கின்றன என்று கூறலாம். ஒன்று வீரர்களின் அத்துமீறிய மைதான வார்த்தையாடல்கள், அடுத்தது நடுவர்களின் தீர்ப்புகளில் ஏற்படும் தவறுகள் பற்றிய சர்ச்சைகள். இந்த வகையில ICC யால் 2002 ஏப்ரல் மாதத்தில் நியமிக்கப்பட்ட அதியுயர் தரம் வாய்ந்த நடுவர்கள் கூடுதலாக சம்பந்தப்படுகிறார்கள். ஏனெனில், பல்வேறு தகுதித் தேர்வுகளைத் தாண்டியே இவர்கள் 'ELITE PANAL' என்ற மகுடத்தின் கீழ் கொண்டுவரப்பட்டார்கள். பொதுவில் நடுவர்கள் அதிலும் சிறப்பாக தேர்ந்த நடுவர்கள் பிழைவிடும்போது, இவை மிகவும் விசனத்துடனும், கண்டனத்துடனும் நோக்கப்படும்.

இந்தவகையில், ஒரு டெஸ்ட் தொடர் முடிவடையும்போது - அந்தத் தொடர் பற்றிய பகுப்பாய்வுகள் நடைபெறுவதும் வழக்கம். இதிலும்கூட செல்வாக்கு இருந்தால்தான் சொல்வது செல்லுபடியாகும் என்ற நிலை காணப்படுகிறதே என்று கவலைப்படுகிறார் ஒரு கிரிக்கெட் விமர்சகர். அதற்கும் அழகாக இரண்டு ஆதாரங்கள் காட்டுகிறார். 2001 இல் இங்கிலாந்து - இலங்கை டெஸ்ட் போட்டியொன்றின்பின் இங்கிலாந்து அணித்தலைவர்-நஸார் உசேன் விதந்துரைத்ததின் பேரில் அசோகா டீ சில்வா ELITE PANAL க்குள் உள்வாங்கப்பட்டார். அதேவேளை, இந்த வருடம் நடைபெற்ற இலங்கை - நியூஸ்லாந்து அணிகளுக்கிடையிலான டெஸ்ட் போட்டியொன்றின்பின், வழமையான அறிக்கையை அணித்தலைவர் ஹசான் திலகரட்ண ICC யிடம் வழங்கி இருந்தார். அதில் ஒரு வெள்ளை இன நடுவர் பற்றிய குறிப்புக்களை ஆணித்தரமாக எடுத்துக்காட்டியிருந்தார். ஆனால், அந்த விடயம் கண்டுகொள்ளப்படவேயில்லை என்று குறிப்பிடுகிறார் விமர்சகர். இதில் எழும் வினா என்னவென்றால், ICC யில் அங்கம் வகிக்கும் எல்லா நாடுகளும் ஒரே விதமாக மதிக்கப்படுகின்றனவா? இங்கு இனம், பிராந்தியம், நிறம், கண்டம் என்று ஏதாவது முனைப்புச் பெறுகிறதா? என்ற நியாய பூர்வமான சந்தேகமும் எழாமல் இல்லை.

மறுவளமாக இந்திய - அவுஸ்ரேலிய டெஸ்ட் தொடரின் கடும் விமர்சனத்துக்கு உள்ளாகியவர் ஸ்ரீவ் பக்னர். நடுவர் வரிசையில் டேவிட் ஷெப்பர்ட் முதலிடம் பெற, இரண்டாம் இடம் பெறுபவர் இவர். இவரால் நேர்ந்த தவறுகள் அநேகம் என்ற வகையில் அவுஸ்ரேலிய - இலங்கை கிரிக்கெட் தொடரிலும் என்னென்ன நடைபெறுமோவென்று அச்சம் தெரிவிக்கின்றார் விமர்சகர்.

இந்த வகையில் அவர் இன்னும் ஒரு கோணத்தில் பொருத்தமான வினாவொன்றை எழுப்புகின்றார்.



**டேவிட் ஷெப்பட்**
**ஜாம்பவான்**

தொலைக்காட்சித் தொழில் நுட்பம் வளர்ந்துள்ளது எனவே மிக நுணுக்கமாக நடுவர் தவறுகள் கண்டுபிடிக்கப்படுமென்பது உண்மை. சரி, அப்படியாயின் இந்தத் தவறுகளைக் குறைக்க என்ன நடவடிக்கைகளை ICC எடுத்துள்ளது என்கிறார்.

இன்னொரு புறம், நடுவர்கள் தமது உச்சத் திறமையைக்காட்டும் காலம் என்பது அவதானிக்கப்படவேண்டும் என்பவர், ஸ்ரீவ் பக்னருக்கு வயது 57, டேவிட் ஷெப்பாட்டின் வயது 63, வெங்கட்ராகவனுக்கு வயது 58, டரல் ஹாப்பருக்கு வயது 52 என்று பட்டியலிடுகிறார்.

ஆனால், உண்மையில் திறமை வாய்ந்த நடுவர்களாக சைமன் டபல் 33 வயது, பில்லி பௌடன் 40 வயது ஆகியவர்கள் நிரூபணமாகி இருக்கிறார்கள் என்கிறார். எனவே, இளம் வயதும் கணக்கில் எடுக்கப்படவேண்டும் என்று கூறுகிறார்.

மேலும், இலங்கையில் நடைபெற்ற ICC சம்பியன் கிண்ணப் போட்டிகளின் போது, சில புதிய தொலைக்காட்சித் தொழில் நுட்பங்கள் பரீட்சித்துப் பார்க்கப்பட்டன. ஏனோ அவை பின்னர் தொடரப்படவில்லை. எனவே LBW தீர்ப்புகள் BAT-PAD பிடிகள் போன்றவற்றின் முடிவு பற்றி தொலைக்காட்சித் தொழில்நுட்பங்களின் உதவியைப்பெறுவது கூடிய பலனளிக்கும் என்பது அவரது வாதம்.

இவர் இறுதியாகத் தன் அவதானத்தில் வீரர்கள் விடும் பிழைகளை மிகப் பாரதூரமாகக் கொண்டும் ICC ஒழுக்கக் கோவை நடுவர் சாதாரண மனிதர்கள் தானே என்றும், வாதிடுவது போலத் தோன்றிகிறது.

ஆனால், வீரர்கள் உணர்ச்சி வசப்படாத சந்தர்ப்பங்களை அதிகரிக்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்பவர், இன்றைய நிலையில் தொலைக்காட்சித் தொழில்நுட்பங்களின் உதவியைக் கூடுதலாகப் பெறும்போது, பல்வேறு சர்ச்சைகளையும், வீரர்கள் மத்தியிலான மன உழைச்சல்களையும், தேவையற்ற செயற்பாடுகளையும் தவிர்த்துக்கொள்ள முடியும் என்பது அவரது முத்தாய்ப்பான கருத்து

**- செந்தூரம் -**

---

# இதனைப் படியுங்கள் கவனமாக



**கபில்தேவ்**
**வாத்தியாருக்குச் சவால்**

நான் இளமையானவன். என்னை நான் திடகாத்திரமானவனாக வைத்துக்கொள்ள விரும்புகிறேன். அப்படிச் செய்தால்தான் நான் இந்தியாவின் வேகப்பந்து வீச்சாளர்களாக வரஇயலும் என்றான் பதினேழு வயது இளைஞன் ஒருவன்.

கூடுதல் சப்பாத்தி (ரொட்டி) உணவுக்காகக் கேட்டபோதே, இந்தக் காரணத்தை அந்த இளைஞன் பயிற்றுநரிடம் கூறினான். அதற்கு ஒப்புக்கொள்ள மறுத்த பயிற்றுநர் அளவென்றால் அளவுதான். அதற்கு மேல் தரமுடியாது. மேலும், ஒருவரைப்பார்த்த உடனேயே அவர் வேகப் பந்துவீச்சாளராக வருவாரா? இல்லையா? என்று எனக்குத் தெரியும் என்று அந்த இளமனதைப் புண்படுத்திவிட்டார்.

இது நடந்தது - பம்பாயில் இளம் வீரர்கள் பயிற்சிப்பாசறையில் 1976 இல் கூடுதல் ரொட்டி கிடைக்காமல் ஏமாந்தவர் கபில் தேவ். அப்போது அவருக்கு வயது 17 மட்டும்.

ஆனால், அடுத்த இரண்டு வருடங்களில் பத்தொன்பதாவது வயதில் இந்திய அணியின் வேகப்பந்து வீச்சாளராக அறிமுகமான கபில்தேவ், ஓய்வுபெறும் போது, செய்து முடித்த அறுவடை 131 டெஸ்ட் போட்டிகள் 434 விக்கெட்டுக்கள் 5248 ஓட்டங்கள்.

தற்போது 45 வயதாகும் கபில் தேவ் இளைஞர் உலகக்கிண்ணப் போட்டிகளில் கலந்து கொள்ளவிருக்கும் 19 வயதுக்குட்பட்ட அணிவீரர்களுக்கு சில ஆலோசனைகள் வழங்கும்போது, இந்தச் சம்பவத்தையும் குறிப்பிட்டு பழைய நினைவுகளை மீட்டார்.

அன்று சிறப்பாகக் கபில்தேவுக்குக் கொடுக்கப்பட்ட விருந்தில் அவருக்கு எத்தனை சப்பாத்திகள் தேவையோ அத்தனையும் கொடுக்கப்பட்டது. அவரும் தயங்காமல்தின்று தீர்த்தார்.

இந்தச் சம்பவத்திலிருந்து பெறப்படும் உண்மை ஆசான்கள் தமக்குத் தான் எல்லாம் தெரியும் என்று மாணவர்களை மட்டம் தட்ட முயற்சிக்காதீர்கள். ஏனெனில், உங்களைவிடக் கொம்பன்கள் பின்னால் அப்பாவிகளைப் போல் நிற்கின்றார்கள். அவர்கள் வேகமாகவே உங்களை முந்தி விடுவார்கள். கிரிக்கெட்டில் மட்டுமல்ல எல்லாத் துறைகளளிலும்தான்.

**- மக்டலீன்**

---

# அதிகுறைந்த ஓட்டங்கள் பெற்ற அணிகளின் வரிசைப் பட்டியல்

**கடந்த ஞாயிறன்று தென்னாபிரிக்காவில் நடைபெற்ற முதலாவது ஒருநாள் போட்டியில் தென்னாபிரிக்க சேகரித்த 263 ஓட்டங்களுக்குப் பதிலாக மேற்கிந்திய அணி பெற்றது 54 ஓட்டங்கள் மட்டுமே. இந்தவகையாகக் குறைந்த ஓட்டங்கள் பெற்ற வரிசையொன்று பின்வருமாறு.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 36 | (18.4 ஓவர்) | கனடா | Vs | இலங்கை | 2002 |
| 38 | (15.4 ஓவர்) | சிம்பாப்வே | Vs | இலங்கை | 2001 |
| 43 | (19.5 ஓவர்) | பாகிஸ்தான் | Vs | மே.இ.தீவுகள் | 1992 |
| 45 | (40.3 ஓவர்) | கனடா | Vs | இங்கிலாந்து | 1979 |
| 45 | (14.0 ஓவர்) | நமீபியா | Vs | அவுஸ்ரேலியா | 2002 |
| 54 | (26.3 ஓவர்) | இந்தியா | Vs | இலங்கை | 2000 |
| 54 | (23.2 ஓவர்) | மே.இ.தீவுகள் | Vs | தென்னாபிரிக்கா | 2004 |
| 55 | (28.3 ஓவர்) | இலங்கை | Vs | மே.இ.தீவுகள் | 1986 |
| 63 | (25.5 ஓவர்) | இந்தியா | Vs | அவுஸ்ரேலியா | 1980 |
| 64 | (35.5 ஓவர்) | நியூசிலாந்து | Vs | பாகிஸ்தான் | 1985 |
| 68 | (31.3 ஓவர்) | ஸ்கொட்லாந்து | Vs | மே.இ.தீவுகள் | 1999 |
| 69 | (28.0 ஓவர்) | தென்னாபிரிக்கா | Vs | அவுஸ்ரேலியா | 1993 |
| 70 | (25.2 ஓவர்) | அவுஸ்ரேலியா | Vs | இங்கிலாந்து | 1977 |
| 70 | (26.3 ஓவர்) | அவுஸ்ரேலியா | Vs | நியூசிலாந்து | 1985 |

---

# ஓடி ஓடி உழைப்பவன்



**சஹீர்கான் - எல்லைதாண்டவேண்டும்**

இந்த நிமிடத்தின் இந்தியக் கிரிக்கெட் அணியின் முதற்தர பந்துவீச்சாளர் சஹீர்கான் தான். இந்தியக் கிரிக்கெட் அணியின் அவுஸ்ரேலிய சுற்றுப்பயணத்தில் மிகவும் எதிர்பார்க்கப்பட்டவர் இவர். பிரிஸ்பேர்ன் முதலாவது டெஸ்ட் போட்டியில் ஐந்து விக்கெடுகளைச் சரித்து, நம்பிக்கை ஏற்படுத்தியவர். பின்னர், தசைப்பிடிப்பினால் அவதிப்பட்டார். இதனால், அடிலைட் டெஸ்ட் போட்டியில் பங்கேற்க இயலவில்லை. மூன்றாவது டெஸ்ட் போட்டியில் விளையாடியபோதும், உச்சத்திறமை காட்ட முடியாதநிலையில் ஓய்வளிக்கப்பட்ட இவர் - டெஸ்ட் தொடர் முடிவடைய இந்தியா திரும்பினார். முத்தரப்பு ஒருநாள் போட்டித் தொடரில் பங்குகொள்ள இயலவில்லை.

ஆனால், அடுத்தமாதம் இந்தியக் கிரிக்கெட் அணி, பாகிஸ்தான் செல்லவிருக்கிறது. இந்தச் சுற்றுப்போட்டியில், சஹீர்கான் பங்கேற்பதில் நிச்சயமாக இருக்கிறார். தற்பொழுது தனது காயங்கள் சுகமாகி விட்டதாகவும், தான் இப்பொழுது உடற்பயிற்சி செய்து வருவதாகவும், இன்னும் இரண்டு வாரங்களில் தான், பூரண தகுதி நிலைக்கு வந்துவிடுவேன் என்றும் நம்பிக்கை தெரிவித்துள்ளார். அகர்கர், நெஹ்ராவிற்கு மேலாக, இர்பான் பத்தான், பாலாஜி போன்றவர்கள் அவுஸ்ரேலியாவில் தம் திறமையைக் காட்டியது உண்மைதான் என்றாலும், விசேடமாகப் பாகிஸ்தான் செல்லும் அணியின் வேகப்பந்து வீச்சாளர்களின் முதல்வனாக சஹீர்கான் சென்றால்தான், அது பூரணமான இந்திய அணியாகத் திகழும் என்பதில் இருவேறுபட்ட கருத்துக்கு இடமில்லை. ஏனெனில், இந்தியத் துடுப்பாட்ட வரிசை மிகபபலமானது. அதேபோல, பாகிஸ்தான் பந்துவீச்சு வரிசையும் மிகப்பலமானதுதான். அதிலும், வக்கார் யூனுஸ்கூட அணிக்குள் நுழையும் தறுவாயில் இருக்கிறார். எனவே, இந்தியத் துடுப்பாட்ட வரிசைக்கு பாகிஸ்தான் பந்துவீச்சு அணி சவால்தான். அதேபோல பாகிஸ்தான் துடுப்பாட்டவரிசை சிறிது பலம் குறைந்ததுதான் என்றாலும், சொந்த மண்ணில் அவர்கள் எதையும் செய்வார்கள். மேலும், அனுபவம் வாய்ந்த வீரர்கள் தம் திறமையைக் காட்டியிருக்கிறார்கள். அருமையானதொரு ஆரம்ப இளம் வரிசையொன்றும், பாகிஸ்தானிடம் இருக்கிறது. இந்தநிலையில் சஹீர்கான் இந்திய அணியில் இருந்தேயாகவேண்டும். **- செந்தூரம்**

# சமபலம் சரியான போட்டி

இந்த மாதம் இலங்கை வரும் அவுஸ்ரேலிய கிரிக்கெட் அணியில் ஒரு வருடத் தடையின் பின் அணிக்குள் வரும் ஷேன்வோர்ன் பற்றிய எதிர்பார்க்கைகள் அதிகமாகவே இருக்கின்றன. ஆனால், இலங்கைச் சுழற்பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரனும், இலங்கை அணிப்பயிற்றுநர் ஜோன் டைசனும் வேறுவிதமாக சிந்திக்கிறார்கள போல இருக்கிறது.


முரளி ~ இல்லை அவரே சிறந்தவர்

பொதுவாக, உபகண்ட மைதானங்கள் அவுஸ்ரேலியாவிற்கு எப்பொழுதுமே சாதகமாக அமைவதில்லை என்ற அடிப்படையிலும், வோர்ன் ஒரு வருடத்தின் பின் சர்வதேச ஆட்டங்களுக்கு வருவதும் இப்படியான ஒரு கருத்துக்குக் காரணமாக இருக்கலாம். இருந்தாலும், இன்றும் கூட முதல்தரமான சூழல் பந்துவீச்சாளர் வோர்ன் என்பதை முரளிதரன் ஏற்றுக் கொள்கிறார்.



வோர்ன் ~ அவர் சிறந்தவர்

இன்னொரு வகையில் தற்பொழுது அவுஸ்ரேலியாவில் விளையாடிக் கொண்டிருக்கும் இந்திய அணி, அவுஸ்ரேலிய கட்டமைப்பு என்பதைக் கேள்விக்குறியாக்கிவிட்டிருப்பதும் இதற்கு ஒரு காரணமாக இருக்கலாம்.

மேலும், ஜோன் டைசன் கருத்துக் கூறும்போது, ஸ்ரீவ்வோ சர்வதேசக் கிரிக்கெட்டில் இருந்தும் அதுவும் தலைமைப் பகுதியில் இருந்து நீங்கியதும் பாரியதொரு இடைவெளியை ஏற்படுத்தியிருக்கிறது.

ரிக்கி பொண்டிங் மலர்ப்படுக்கைகளை எதிர்கொள்ளப் போவதில்லை என்கிறார். மொத்தத் தில் இவர்களின் கருத்திலிருந்து இலங்கை அணியானது அவுஸ்ரேலிய அணிகளுக்கு எதிரான பெரும் தாக்குதல் வியூகங் களை அமைத்துக் கொண்டது என பேசுவது போலத் தெரி கிறது.

இதைவிட ஆர்வத்திற்குரிய விடயமாக இருக்கப்போவது வோன், முரளி இருவருக் கும் இடையிலான மறைமுகப் போட்டியாகும். அதாவது, தற்போது டெஸ்ட் விக்கெட்டுக்கள் அதிகம் எடுத்து முதல் நிலையில் இருப் பவர் மேற்கிந்தியத்தீவுகள் அணியின் கோட்ணி வோல்ஷ். இவரை முந்த இந்த இருவரும், சமபலத்துடன் ஓடிக்கொண்டிக் கிறார்கள். அதுவும் முதல் கட்டமாக 500 விக்கெட்டுக்களை முதன் முதலாக சரிப்பவர் யார் என்பதே போட்டி. முரளிதரன் தற்போது 485 டெஸ்ட் விக்கெட்டுக்களுடன் மூன்றாவது இடத்தில் இருக்கின்றார்.

ஆனால், இதில் குறிப்பிடத்தக்க அம்சம் ஷேன்வோனைவிட 3 வருடம் பிந்தி டெஸ்ட் உலகில் புகுந்த முரளி வோனைவிட 22 டெஸ்ட் போட்டிகள் குறைவாக விளையாடி வேகமாக ஓடிக் கொண்டிருக்கிறார் என்பதுதான். ஷேன் வோன் 491 டெஸ்ட் விக்கெட்டுக்களுடன் இரண்டாம் இடத்தில் இருக்கிறார்.

பொதுவான ஒரு பார்வையாக வோர்ன் பற்றிய அச்சமில்லை என்றுமுரளி கூறினாலும், அவரது திறமைகள் இன்னும் சாதிக்கக்கூடிய ஆற்றல்கள் பற்றி உயர்வாகவே கூறுகிறார்.

மொத்தத்தில் அவுஸ்ரேலியா - இலங்கை கிரிக்கெட் சுற்றுப்போட்டி மூன்று வகையாக அமையப் போகின்றது. ஒன்று டெஸ்ட் போட்டித் தொடர். இரண்டாவது ஒருநாள் போட்டித் தொடர். மூன்றாவது வோர்ன் - முரளி போட்டித் தொடர்.

- காயத்திரி -

# ஆசை ஆசையாய் வாசிக்க


லாரா என்றும் முதல்வன்

ICC இன்னொரு பரிமாணத்தில் கிரிக்கெட் ரசிகர்களை மகிழ வைக்க முனைவது போலத்தெரிகிறது. கொள்கை அளவில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள இந்தத் திட்டம் நடைமுறைக்கு வருமாயின், அதன் பெயர் **BEST VERSUS REST** என்றிருக்கும்.

அதாவது, கிரிக்கெட் உலகின் அதிசிறந்த டெஸ்ட் அணியுடன், உலகத் தெரிவுக்குழு ஒரு டெஸ்ட் தொடரில் விளையாடும். அதேபோல, ஒருநாள் தொடரும் அமையும். இன்றைக்கு உலகின் அதிசிறந்த டெஸ்ட் மற்றும் ஒருநாள் அணி அவுஸ்ரேலியாதான். இந்தப் புதிய பரீட்சார்த்த சுற்றுப் போட்டியைப் பத்து டெஸ்ட் அந்தஸ்துப் பெற்ற நாடுகள் ஏற்றுக் கொண்டுள்ளன. தெரிவு அணி எவ்வாறு தெரிவு செய்யப்படும் என்று இன்னும் தீர்மானம் ஆகவில்லை.

ஒன்றில் தெரிவுக்குழு ஒன்றினால் உலகின் அதிசிறந்த வீரர்கள் தெரிவு அணியைத் தெரிவு செய்யவேண்டும். அல்லது தரக்கணிப்பின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டவர்கள் ஏற்றுக்கொள்ளப்படுவார்களா என்று தெரியவில்லை. அப்படி ஒரு நிலை வருமாயின், அணி எப்படி அமையும் என்று இரண்டு தரக்கணிப்பு நிறுவனங்கள் கூறுகின்றன.

பிரைஸ் போட்டா ஹவுஸ் வாப்பர் இப்படி நினைக்கின்றது. ஹேர்சல் கிப்ஸ் (தெ.ஆ), மார்க் றிச்சட்ஸன் (நியூ), ராகுல்ராவிட் (இந்), பிரைன் லாரா (மே.இ), இன்சமாம் உல்ஹக் (பாக்), ஜக்கஸ் கலிஸ் (தெ.ஆ), சச்சின் டெண்டுல்கார்(இந்), முத்தையா முரளிதரன் (இல), சோஹெய்ப் அக்தர் (பாக்), ஷோன் பொலக் (தெ.ஆ), மக்காயா என்ரினி (தெ.ஆ)

விஸ்டன் பின்வரும் வீரர்களைத் தெரிவு செய்கிறது. மைக்கல் வோண் (இங்கி), ஜக்கலிஸ் (தெ.ஆ), ராகுல்ராவிட் (இந்), பிறைன்லாரா அணித்தலைவர் (மே.இ), சச்சின் டெண்டுல்கர் (இந்), வெங்கட்பிரபு லக்ஸ்மன் (இந்), மார்க் பௌச்சர் (தெ.ஆ), ஷோன் பொலக் (தெ.ஆ), ஷோன்பொண்ட் (நியூ), முத்தையா முரளிதரன் (இலங்), சோஹெய்ப் அக்தர் (பாக்).

இந்தச் சுற்றுப் போட்டிகள் நடைபெறுவது உறுதியானவை. பரிசுத்தொகையாக வழங்கப்படவுள்ள தொகை, சகல வகைப் பரிசுக்கும் அடங்கலாக இலங்கை ரூபா பத்துக் கோடி.

- வெரோனிக்கா -

# நிரந்தரம் எதுவென்று புரிந்தவர்

அவுஸ்ரேலிய கிரிக்கெட் அணி இன்னொருமுறை ஒரு டெஸ்ட் தொடருக்காக மற்றும் ஒரு நாள் போட்டிகளுக்காக இந்தியா வரும்போது அந்த அணியில் ஸ்ரீவ்வோ இருக்கப்போவதில்லை. இந்தியாவில் வைத்து இந்தியக் கிரிக்கெட் அணியை டெஸ்ட் தொடர் ஒன்றில் வென்று காட்ட வேண்டுமென்ற ஆசை, இனி என்றும் அவருக்கு நிறைவேறப்போவதில்லை. கிரிக்கெட் உலகின் ஒரு சகாப்தமாகக் கருதப்படும ஸ்ரீவ்வோ எத்தனையோ உச்சங்களைக் கண்டவர். ஆனால், இந்திய மண்ணில் வெற்றி என்பது கனவாகவே போய்விட்டது.



இதயம் பனிக்கிறது

ஸ்ரீவ்வோ ஒரு சர்வதேசக் கிரிக்கெட் வீரராக எத்தனையோ வகையில் தரங்கணிக்கப்பட்டாலும், அவரது தகுதியை உயர்த்திக் காட்டும் சான்றுகளே அதிகம் என்பதில் இரண்டாம் பேசசுக்கே இடமில்லை.

ஸ்ரீவ்வோவின் மதிப்பு என்பது, இவரது கிரிக்கெட் வாழ்வின் அளவு கோலால் மட்டுமா மதிக்கப்படுகிறது. இவரது மறுபக்கம் மனிதம் என்றொரு எல்லையில் உயர்ந்து நிற்பது தற்போதுதான் மெதுமெதுவாக வெளிவந்து கொண்டிருக்கிறது. அதற்கு முன்னால், இந்திய கிரிக்கெட் வீரர்கள் விமர்சகர்கள் மனதில் ஸ்ரீவ்வோவின் இடமென்ன என்பதும் நல்லதொரு கேள்விதான். ஒரு விமர்சகர் அழகாகக் கூறுகிறார். "சிட்னி மைதானத்தில் அவருக்கு அளிக்கப்பட்டது உணர்வுபூர்வமானதொரு பிரியாவிடைதான். ஆனால், ஏதோ ஒருவகையில் ஸ்ரீவின் இறுதித் டெஸ்ட் இந்தியாவின் எந்தவொரு மைதானத்தில் நடைபெற்றிருந்தாலும், அதைப் போன்றே எவ்வித குறையும் இல்லாத பிரியாவிடையே அவருக்குக் காத்திருக்கும்".

ராகுல் டிராவிட் ஆரம்பத்தில் இருந்தே இவரை ஆதர்சமாகக் கொண்டவர். "அவரது கிரிக்கெட் ஆட்ட உயர்ந்த சராசரிகள் அல்லது எண்ணிக்கைகள் அல்ல இங்கு பேசப்படுவது. அவர் சர்வதேசக் கிரிக்கெட்டுக்கு கொடுத்த பங்களிப்பே பிரதானம்" என்கிறார். அவர்: இர்பான் பத்தான் நேற்று டெஸ்ட் ஆட்டத்திற்கு வந்தவர். இறுதித் தடவையாக ஸரீவ் அவுட்டாகி, வெளியேறும்போது, பத்தான் மைதானத்தின் தொலைதூரத்தில் இருநது ஓடிவந்து, முதுகில் தட்டித்தன் அன்பைத் தெரிவித்தார். "அவரைப் பற்றி நிறையக் கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனால், அவரை நான் நேரில் சந்திதத்தே சாதனையாகக் கருதுகின்றேன். அவர் மிகுந்த எளிமையானவர். அவரைப்போல இருக்க நான் ஆசைப்படுகிறேன். ஒரு டெஸ்டிலேயாவது அவருக்கு எதிராக விளையாடக் கிடைத்தது பெரும் அதிர்ஷ்டம்தான்" என்கிறார். இவர் பற்றிய இந்தியர்களின் உயர்ந்த கருத்துக்களுக்கு இந்த இரண்டு உதாரணங்களும்போதும். இன்றேல் அதற்கே இடம்போதாமல் போகும்.

- ஜோசப் கிருஸ்ணா -

(அடுத்தவாரம் தொடரும்...)

# பெல்ஜியம் நாட்டுக்கு காட்டில் மழை

மகளிர் ஒற்றையர் ரெனிஸ் போட்டிகள் என்றால் அண்மைக்காலமாக பெல்ஜியத்தின் பக்கம் பார்வை செல்கின்றது. ஏனெனில், 2003இல் நடைபெற்ற பிரெஞ்ச் வெற்றிக்கிண்ணம், அமெரிக்கன் வெற்றிக்கிண்ணம் இரண்டிலும் இறுதியாட்டத்தில் மேற்கிந்தியர்கள், பெல்ஜியம் வீராங்கனைகள் ஒருவர் ஜஸ்ரின் ஹெனின், மற்றையவர் கிம் கிளிஸ்டர்ஸ் இரண்டிலுமே வெற்றி வாகை சூடியவர் ஜஸ்ரின் ஹெனின். அதேபோல, தற்போது நடைபெற்று முடிந்த இன்னொரு முக்கிய போட்டியான அவுஸ்திரேலிய வெற்றிக்கிண்ணப் போட்டியிலும் மோதியவர்கள் இவ்விருவருமே வெற்றிக்கண்டவர். அதே தொடர்ச்சியில் ஜஸ்ரின் ஹெனின்.


ஹெனின் ~ Fistget விம்பிள்டனே கனவு

தற்போதைய உலகதரவரிசையில் முதலாம் இடம் பெறுபவர் ஜஸ்ரின் ஹெனின். இவருக்கு வயது 21. அதேபோல உலகத்தரவரிசையில் இரண்டாம் இடம்பெறுபவர் கிம் கிளிஸ்டர்ஸ். இவருக்கு வயது 20. இவர்கள் இருவரும் 18 முறை நேருக்குநேர் சந்தித்துள்ளனர். இவற்றில் கிளிஸ்டர்ஸ் 9 முறையும் ஹெனின் 9 முறையும் வென்றுள்ளனர். ஆனால் ரென்னிஸ போட்டிகளின் உச்சம் கிறண்ட்ஸ்லாம்ஸ்தான். அந்த வகையில் 3-0 என்ற வகையில் ஹெனின் முன்னிலை வகிக்கிறார். இருவரும் பெல்ஜியத்தைச் சேர்ந்தவர்கள் என்றாலும் அவுஸ்ரேலிய ரசிகர்களின் ஆதரவு கூடுதலாக கிளிஸ்டர்சுக்கே இருந்தது. அதற்கு ஒரு காரணம் உண்டு. அவுஸரேலிய இளம் ரென்னிஸ் வீரர் ஹெவிட்டைத் திருமணம் செய்தவர் கிளிஸ்டர்ஸ் இதனால், புகுந்த வீட்டு ஆதரவு அவருக்கே அதிகம். இருநதும் வீட்டுக்குள் புகுந்து கிளிஸ்டர்சைச் சகித்து விட்டார் ஹெனின். இது ஒருபுறம் இருக்க, முன்னைய இரண்டு கிராண்ட்ஸ்லாம்ஸ் போட்டிகளை விட அவுஸ்ரேலியப் போட்டிகள் சிறிது தளர்வுற்றதாகவே இருந்த தென்பதையும் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். ஏனெனில், இப்போட்டிகளில் விளையாடுவார்கள் என்று எதிர்பார்க்கப்பட்ட வீராங்கனைகள் சிலர் உபாதைகளால் போட்டியில் பங்குகொள்ளவில்லை. முன்னைய வெற்றிவீராங்கனை செரினா வில்லியம்ஸ், மற்றும் ஜெனபர் கப்ரியாட்டி, மொனிக்கா செலஸ் மற்றும் போட்டிகளில் கலந்து, இடையிலேயே விலகிவிட்ட வீனஸ் வில்லியம்ஸ் ஆகியோர் முக்கியமானவர்கள். என்றாலும்கூட, இவர்கள் இல்லை என்ற ஒரு காரணத்துக்காக ஹெனின் பெற்றவெற்றி எவ்விதத்திலும் குறைந்ததாகிவிடாது. ஹெனின் இன்னும் வெல்லவேண்டிய ஒரேயொரு கிறண்ட்ஸ்லாம்ஸ் ரென்னிஸ் உலகில் முதன்மை பெற்றாலும், எந்தவொரு ரென்னிஸ் வீரரின் கனவுமாக இருக்கும் விம்பிள்டன் போட்டிக் கிண்ணம்தான் அதை வென்றெடுக்கும் சகலதகுதிகளும் ஹெனினுக்கு இருக்கிறது என்பதே ரென்னிஸ் விமர்சகர்களின் நம்பிக்கையாகும்.


கிளிஸ்டர்ஸ் ~ Fistget எனக்கு எல்லாமே கனவு

- நிர்மலன் -

- நக்கீரன்

# சூடுபிடிக்கும் இந்திய தேர்தல்களம்; பலப்பரீட்சையில் தமிழகக் கட்சிகள்

யானை வரும் முன்னே மணியோசை வரும் பின்னே என்பார்கள். தேர்தல் வரும் முன்பே இந்



திய தேர்தல் களம் சூடு பிடித்து விட்டது.

இந்தியா பெரிய நாடு. மக்கள் தொகை 102 கோடி. வாக்காளர்களில் 70 விழுக்காட்டினர் 40 வயதுக்குக் குறைவாகவும் 54 விழுக்காட்டினர் 18-35 வயதுக்கும் இடையில் உள்ளனர். இந்த தேர்தலை நடத்தும் செலவு ரூபா 1,161.50 கோடி என மதிப்பிடப்பட்டுள்ளது.

13 ஆவது லோக் சபையின் இறுதி அமர்வு இந்த வியாழனோடு முடிவடைகிறது. அதன் ஆயுள் காலம் முடிய இன்னும் 8 மாதங்கள் இருக்கும் முன்னரே கலைக்கப்படுகிறது. 1999 ஒக்டோபர் 10 இல் தெரிவு செய்யப்பட்ட லோக் சபை மொத்தம் 4 ஆண்டுகள் 4 மாதங்கள் நீடித்தது.

1996 இல் தெரிவு செய்யப்பட்ட 10 ஆவது லோக்சபையில் அடல் பிகாரி வாஜ்பாய் தலைமையிலான அரசு 13 நாட்களே உயிர் வாழ்ந்தது. 1997 இல் தெரிவு செய்யப்பட்ட 11 ஆவது லோக் சபையில் அதே அரசு 13 மாதங்களே நீடித்தது. கடந்த 10 ஆண்டுகளில் 7 பிரதமர்கள் வந்து போயிருக்கிறார்கள்!

கலைக்கப்படவிருக்கும் லோக் சபையில் பா.ஜனதாவுக்கு 182 உறுப்பினர்களும் காங்கிரசுக்கு 112 உறுப்பினர்களும் இருந்தனர்.

மொத்தம் 543 இருக்கைகள் கொண்ட 14 ஆவது லோக் சபைக்கு தேர்தல் எப்போது என்பதை இன்னும் தேர்தல் ஆணையம் அறிவிக்கவில்லை. பெரும்பாலும் மார்ச் மாதத்தில் தேர்தல் நடக்கலாம்.

இந்திய தேர்தலில் உத்தரப் பிரதேச மாநிலம் முக்கிய இடத்தை வகிக்கிறது. இந்த மாநிலத்தின் மொத்த தொகுதிகள் 81. அடுத்து பீகார் மாநிலம் 54 தொகுதிகள். தமிழ்நாட்டில் 39 தொகுதிகள் மட்டுமே உள்ளன. தற்சமயம் பாரதிய ஜனதாவுக்கு உத்தரப் பிரதேசத்தில் 26 உறுப்பினர்கள் இருக்கிறார்கள்.

லோக்சபை முன்கூட்டிக் கலைக்கப்படுவதால் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் பணமாக ரூபா 5 இலட்சத்தையும் பல சலுகைளையும் இழக்க நேரிடும். ஒரு நாடாளுமன்ற உறுப்பினரது ஊழியம் மாதம் ரூபா 36,000. நாடாளுமன்றம் கூடும்போது அதில் கலந்து கொள்ளும் ஒவ்வொரு நாளும் ரூபா 500. இதைவிட இலவச தொலைபேசி, ரயில், விமானம், மின்சாரம், தண்ணீர் என்று ஏகப்பட்ட சலுகைகள் உண்டு.

முன்னர் போல் அல்லாது இம்முறை பாரதிய ஜனதா மற்றும் இந்திய காங்கிரஸ் கட்சிகள் தலைமையிலான கூட்டணியே தேர்தல் களத்தில் மோதிக்கொள்கின்றன. மூன்றாவது அணி என்றொரு அணி இம்முறை இல்லை.

லோக் சபையின் ஆயுட்காலம் இன்னும் 6 மாதங்கள் இருக்கும் போது தேர்தலை நடத்த ஆளும் கட்சியான பா.ஜனதா முடிவு செய்தது ஏன்?

கடந்த சனவரி மாதம். மத்திய பிரதேசம், டில்லி, இராஜஸ்தான் மற்றும் சட்டிஸ்கார் சட்ட சபைகளுக்கு நடந்த தேர்தலில் பாரதிய ஜனதா கட்சி டில்லி நீங்கலாக ஏனைய 3 மாநிலங்களிலும் பெரும் வெற்றி ஈட்டியது. எனவே பாரதிய ஜனதா பக்கம் வீசிய அந்த அலை லோக்சபைத் தேர்தலிலும் வீசும் என்ற எதிர்பார்ப்பில் லோக் சபையை முன்கூட்டியே கலைத்து விட்டு தேர்தலுக்கு முகம் கொடுக்க பாரதிய ஜனதா முடிவு செய்தது.

உலகளவில் பொருளாதாரத்தில் வேகமாக வளர்ச்சி அடைந்து வரும் 10 நாடுகளில் இந்தியாவும் ஒன்று. அதன் கடந்த ஆண்டு பொருளாதார வளர்ச்சி 7.5-8.0 விழுக்காடாகக் கணக்கிடப்பட்டுள்



ளது. அந்நிய நாணய கையிருப்பு 10,500 கோடி டொலராக உயர்ந்துள்ளது. வாங்கும் சக்தி 1999-2003 இற்கும் இடையில் இரட்டிப்பாக உயர்ந்துள்ளது. அதாவது ரூபா 763, 500 இலிருந்து ரூபா 1,486, 200 கோடியாக உயர்ந்துள்ளது. பயணிகள் வண்டித்துறை 41, இரட்டைச் சக்கர வண்டிகளின் சந்தை 48, செல் தொலைபேசித் தொடர் 1,163 விழுக்காடாக அதிகரித்துள்ளது.

ஆனால், இந்த புள்ளி விபரங்கள் பணக்காரர் மேலும் பணக்காரர் ஆனார்கள் என்பதையே காட்டுகிறது. இந்தியா ஏழ்மையை ஒழிக்கக் குறைந்தது சீனாவைப் போல் 10 விழுக்காடு வளர்ச்சியையாவது எட்ட வேண்டும். அப்போது தான் 8 கோடி வேலை வாய்ப்பை உருவாக்கமுடியும் என்கிறார்கள் பொருளாதார நிபுணர்கள். இப்போது 2 கோடி தொழில்களே உருவாக்கப்படுகிறது.

இந்தியாவில் ஏழை மக்களின் வாழ்க்கைத் தரம் திருப்திகரமாக இல்லை. ஏழைகளுக்கு கிடைக்கும் உணவின் அளவு குறைவாக இருக்கிறது. இதனால் ஏழைகளின் வாங்கும் சக்தி குறைவாக இருக்கிறது. 'உலகளவில் மிகவும் ஏழ்மை நிலையில் உள்ளவர்களில் 3 இல் ஒரு பகுதியினர் (26 கோடி) இந்தியாவில்தான் வாழ்கின்றனர்' என்கிறார் வறுமை ஒழிப்பு நடிவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள சமூகவியலாளர் செமூர் ஸ்சிமித். வறுமைக் கோட்டுக்குக் கீழ் (ஒரு நாள் வருமானம் ஒரு டொலருக்கும் குறைவு) வாழும் தொகையினர் 2001-02 காலப் பகுதியில் 10..2 கோடியாக அதிகரித்துள்ளனர்.

இருந்தும் இந்தப் பொருளாதார வளர்ச்சி நாட்டு மக்களிடையே 'எல்லாம் நன்றாக இருக்கிறது' என்ற ஒருவித (மயக்க) உணர்வை ஏற்படுத்தியுள்ளது. அந்த உணர்வை வாக்குகளாக மாற்றுமாறு பிரதமர் வாஜ்பாய் தனது கட்சிக்காரர்களைக் கேட்டுள்ளார்.

இதே கருத்துக் கணிப்பு நடைபெற இருக்கும் தேர்தலில் பாரதிய ஜனதா கட்சிக்கு 20 இருக்கைகள் குறைவாகவும் (160-170) காங்கிரஸ் கட்சிக்கு 30-40 இருக்கைகள் (70-80) குறைவாகவும் கிடைக்கும் என ஆருடம் சொல்லி உள்ளது.

பிரதமர் வாஜ்பாய் - காங்கிரஸ் தலைவி சோனியா காந்தி இருவருக்கும் இடையில் உள்ள இடைவெளி காங்கிரஸ் கட்சித் தலைவர்கள் தொண்டர்களுக்கு ஆறுதல் தரும் செய்தியாக இருக்காது என்பது நிச்சயம். ஆனால் ஆறுதல் தரும் செய்தியும் இருக்கிறது. அறுபது விழுக்காடு வாக்காளர்கள் சோனியாவின் அயல்பிறப்பு ஒரு தேர்தல் சிக்கலாக இருக்காது எனத் தெரிவித்துள்ளனர். 38 விழுக்காட்டினர் இருக்கும் எனத் தெரிவித்துள்ளனர்.

பாரதிய ஜனதாக் கட்சி சோனியா காந்தியின் பூர்வீகத்தை இந்தத் தேர்தலில் ஒரு ஆயுதமாகப் பயன்படுத்தப்படும் வாய்ப்பு இருக்கிறது. ஐந்து ஆண்டுகள் எதிரியாகப் பார்த்த பாரதிய ஜனதாவோடு கூட்டுச் சேர்ந்துள்ள தமிழக முதல்வர் ஜெயலலிதா இந்தியாவுக்கு இத்தாலியில் பிறந்த சோனியாகாந்தி பிரதமராக முடியாது என, ஏற்கனவே தெரிவித்து விட்டார்.

மறுபுறம் பா.ஜனதா அயோத்தியில் இராமர் கோயில் கட்டுவது, பசுத்தடை போன்ற அடிப்படை இந்துத்துவா கோட்பாடுகளை சற்று பின்னுக்குத் தள்ளலாம்.

தேர்தல் என்று வந்துவிட்டால் ஆளும் கட்சி பொதுக் கருவூலத்தில் இருந்து பணத்தை தண்ணீராக இறைப்பதும் ஏராளமான சலுகைகளை தாராளமாக அறிவிப்ப



தும் எல்லா நாட்டிலும் நிலவும் காட்சிதான். பாரதிய ஜனதா ஆட்சி ஒரு குட்டி வரவு - செலவுத் திட்டம் மூலம் மத்திய ஊழியர்களின் ஊழியத்தை உயர்த்தி இருக்கிறது. படியாகக் கொடுக்கப்பட்ட கொடுப்பனவில் பாதியை ஊழியத்தோடு சேர்த்துள்ளது. வெளிநாட்டு முதலீட்டாளர்களது முதலீட்டு அளவை உயர்த்தியுள்ளது. பிற்பட்டோருக்கு இருக்கும் வருமான வரம்பை ரூபா 100,000 இல் இருந்து ரூபா 250,000 இலட்சமாக உயர்த்தியுள்ளது. இந்த குட்டி வரவு - செலவுத் திட்டத்தை 'தேர்தல் வரவு - செலவுத் திட்டம்' என காங்கிரஸ் கட்சித் தலைவி வர்ணித்துள்ளார்.

தமிழ்நாட்டைப் பொறுத்தளவில் தேர்தல் சூடு ஏற்கனவே கொதிநிலைக்கு உயர்ந்துள்ளது. சென்ற தேர்தலோடு ஒப்பிடும் போது இப்போது எதிர்மாறான கூட்டணிகள் இன்று உருவாகியுள்ளன.

• சென்ற தேர்தலில் அதிமுகவோடு கூட்டணி வைத்துக்கொண்ட பாட்டாளி மக்கள் கட்சி இப்போது தி.மு.க. தலைமையிலான சனநாயக முற்போக்கு கூட்டணியோடு கை கோர்த்துள்ளது. மாறாக தி.மு.கவோடு இருந்த பா.ஜனதா இம்முறை அதிமுகவோடு கூட்டுச் சேர்ந்துள்ளது. இப்படி கட்சிகள் அணி மாறுவது இயல்பாகி விட்டது.

வழக்கமாக அ.தி.மு.க பொதுச் செயலாளர் ஜெயலலிதாவே மற்றவர்களை முந்திக்கொண்டு முதலில் கூட்டணி அமைத்து, தொகுதிகளைப் பங்கிட்டு வேட்பாளர்களையும் அறிவித்து விடுவார். ஆனால், இம்முறை கலைஞர் கருணாநிதி முந்திக் கொண்டார். சனநாயக முற்போக்கு கூட்டணியை அமைத்துவிட்டு யார் யாருக்கு எவ்வளவு தொகுதிகள் எந்தத் தொகுதிகள் என்பதையும் அறிவித்துவிட்டார். மொத்தம் 40 தொகுதிகளில் (புதுவை உட்பட) தி.மு.க. 15, இந்திய காங்கிரஸ 10, பா.ம.க 6, மதிமுக 4, கம்யூனிஸ்ட் (சிபிஎம்) 2, கம்யூனிஸ்ட் (இந்தியா)2, முஸ்லிம் லீக் 1 போட்டி இடுகின்றன.

இந்தத் தொகுதிப் பங்கீட்டில் தி.மு.க. பக்கம் இருந்த விடுதலைச் சிறுத்தைகள் மற்றும் புதிய தமிழகம் இரண்டுக்கும் தொகுதிகள் ஒதுக்கப்படவில்லை. இதனால் திருமாவளவனும் டாக்டர் கிருஷ்ணசாமியும் தி.மு.க தலைவர் கலைஞர் கருணாநிதி 'தலித் மக்களுக் குத் துரோகம் செய்து விட்டார், எங்களை வேண்டும் என்றே புறம்தள்ளி சாதிக் கட்சி என்று முத்திரைகுத்தி சேரி மக்களை அவமதித்துவிட்டார்' எனக் கோபித்துக்கொண்டு காட்டமான அறிக்கை விட்டுள்ளார்கள். தனித்துப் போட்டியிடவும் முடிவு செய்துள்ளார்கள்.

திருமாவளவன் இன்னும் ஒரு படிமேலே போய் உதய சூரியனது சின்னத்தில் மங்களூரில் போட்டியிட்டு வென்ற சட்டசபை உறுப்பினர் பதவியையும் துறந்து விட்டார்.



டாக்டர் கிருஷ்ணசாமி ஜெயலலிதாவோடு சேரலாம் எனப் பேச்சு அடிபடுகிறது. ஆனால் இந்துத் துவாவையும் பிராமணியத்தையும் கடுமையாக எதிர்த்துப் பேசிவந்த திருமாவளவனால் அப்படி இலேசில் பொயஸ் தோட்டம் பக்கம் போய்விடமுடியாது.

திருமாவளவனின் கோபத்துக்கு தொகுதி கிடைக்கவில்லை என்பதைவிட கலைஞர் டாக்டர் இராமதாசை கூட்டணியில் சேர்த்துக் கொண்டார் என்பதுதான் காரணம். விடுதலைச் சிறுத்தைகள் மற்றும் புதிய தமிழகம் சாதிக் கட்சி என்றால் வன்னியரைப் பிரதிநித்துவப்படுத்தும் பா.ம.கவும் சாதிக் கட்சிதான் என்பது திருமாவளவனின் வாதம்.

ஆதி திராவிட சமுதாயத்தைச் சேர்ந்த மருமகள் கலைஞர் வீட்டில் இருக்கிறார். அவரது மகன் அழகிரியின் மனைவி ஒரு ஆதி திராவிடர். அது மட்டுமல்ல. அவரது மருமகன் (அக்காள் மகன்) இயக்குனர் அமிர்தத்தின் மகளைத் திருமணம்செய்து கொடுத்த வகையில் நாமக்கல்லைச் சேர்ந்த ஒரு டாக்டர் மாப்பிள்ளையும் தலித் மாப்பிள்ளைதான். இந்த நிலையில் தலித் சமூகத்தில் இருந்து பெண் எடுத்தவரும் பெண் கொடுத்தவருமான கலைஞரைப் பார்த்து அவர் தலித் சமுதாயத்தினரை இழிவுபடுத்திக் கூறினார் என்பது உண்மைக்கு மாறானது. திருமாவளவன் அப்படிப் பேசி இருந்திருந்தால் அது தவறு.

உண்மை என்னவென்றால் தி.மு.கழகத்திலேயே தலித் உறுப்பினர்கள் இருக்கிறார்கள். அவர்களும் தேர்தலில் போட்டியிடுகிறார்கள். யார் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் தமிழ் நாட்டில் உள்ள 9 தனித் தொகுதிகளுக்கு பிற்பட்ட வேட்பாளர்களை நிறுத்தியே ஆக வேண்டும்.

திருமாவளவனுக்கும் கிருஷ்ணசாமிக்கும் நாடாளுமன்றத் தேர்தலிலே போட்டியிட வாய்ப்புக் கொடுத்தால்தான் தலித் மக்களை ஒப்புதல் செய்ததாக பொருளாகுமா? அதே தலித் இனத்தைச் சேர்ந்த தி.மு.க உறுப்பினருக்கு அப்படியான வாய்ப்பு அளிக்கப்பட்டால் அது தலித் இன மக்களை அங்கீகாரம் செய்தது ஆகாதா?

சென்ற சட்டசபைத் தேர்தலில் இதே திருமாவளவனுக்கும் கிருஷ்ணசாமிக்கும் 18 தொகுதிகள் கொடுக்கப்பட்டன. அது தலித் மக்களுக்கு வழங்கிய அங்கீகாரம் இல்லையா?

சட்டசபைத் தேர்தல் வேறு நாடாளுமன்றத் தேர்தல் வேறு. சட்ட சபைத் தேர்தலில் 235 தொகுதிகளைப் பிரித்துக் கொடுக்கலாம். ஆனால் நாடாளுமன்றத் தேர்தலில் 40 தொகுதிகளை எத்தனை கட்சிகளுக்குப் பிரித்துக் கொடுக்கமுடியும்? சென்ற நாடாளுமன்றத் தேர்தலில் 18 தொகுதிகளில் போட்டியிட்ட திமுக இம்முறை 15 தொகுதிகளில் மட்டும் போட்டியிடுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

எதிரும் புதிருமாக இருந்த திருமாவளவனும் கிருஷ்ணசாமியும் இப்போது இணைந்துள்ளார்கள். இது வரவேற்கத்தக்கது. இவர்கள் மட்டுமல்ல டாக்டர் இராமதாசையும் இணைத்துக் கொள்ள வேண்டும். வுன்னியரும் பிற்பட்டவர்கள்தான்.

பிற்பட்ட மக்களை பிரதிநித்துவப்படுத்தும் கட்சிகள் ஒரு அணியில் திரள வேண்டும். ஆடுகள் பிரிந்து நின்று தங்களுக்குள் மோதிக் கொள்வது தமிழினத்தை சாதி வாரியாகக் கூறுபடுத்தி அதில் குளிர்காயும் ஓநாய்களுக்குத்தான் இலாபமாகப் போய் விடும்.

திருமாவளவனுக்கும் கிருஷ்ணசாமி இருவரும் அரசியலில் யார் எதிரிகள் யார் நண்பர்கள் என்பதை நன்கு தெரிந்து கொள்ள வேண்டும். நாற்காலி அரசியலுக்கு ஆசைப்பட்டு தங்களது எதிர் காலத்தையும் தமிழினத்தின் எதிர் காலத்தையும் இருட்டாக்கி விடக் கூடாது. யார் நலனையும்விட தமிழினத்தின் நலம் முக்கியம்.

நல்ல காலமாக 575 நாட்களுக்கும் மேலாக பூட்டிய சிறைகளுள் வாடிய தமிழினத்தின் விடிவெள்ளி தமிழ்த் தேசியத்தின் மறு வடிவம் தன்மானத்தின் மறுபதிப்பு மதிமுக பொதுச் செயலாளர் வைகோ பிணையில் வெளிவந்து விட்டார்.

தமிழ்நாட்டைப் பொறுத்தளவில் மக்கள் விரோத, தமிழ்த் தேசிய வாதிக்ளை சிறையில் அடைத்த ஜெயலலிதாவின் காட்டாச்சி அகற்றப்பட வேண்டும். ஒட்டுமொத்த தமிழினத்தின் முதல் எதிரி ஜெயலலிதா தோற்கடிக்கப்படவேண்டும். வாழ்நாளில் மறக்க முடியாதபடி தமிழக வாக்காளர்கள் அவருக்கு செமத்தியான பாடம் படிப்பிக்க வேண்டும். அதற்கு தமிழ்த் தேசியத்தை ஆதரிக்கும் கட்சிகள் ஒரே அணியில் ஒன்றுதிரள வேண்டும். ☆

**இந்திய காங்கிரஸ் என்றால் இந்திரா; இந்திரா என்றால் இந்திய காங்கிரஸ் என்ற முழக்கம் இந்திராகாந்தி இருந்த காலத்தில் எழுப்பப்பட்டது. கடந்த 57 ஆண்டுகளில் இந்திய காங்கிரசின் தலைமை நேரு ~ காந்தி குடும்பத்தவர் கைகளிலேயே இருந்து வருகிறது.**

**'எல்லாம் நன்றாக இருக்கிறது' என்ற உணர்வு காரணமாக அடுத்த பிரதமராக வருவதற்கு யார் தகுதிவாய்ந்தவர் என்ற கேள்விக்கு பிரதமர் வாஜ்பாய்க்கு 47 விழுக்காட்டினர் ஆதரவு தெரிவித்தனர். இந்திய காங்கிரஸ் தலைவி சோனியாவுக்கு 23 விழுக்காட்டினர் மட்டுமே ஆதரவு தெரிவித்தனர். வாஜ்பாயை பிரதமர் பதவிக்கு ஆதரிப்போர் பாரதிய ஜனதா கட்சிக்கே வாக்களிக்கப் போவதாக தெரிவித்துள்ளார்கள். இன்னொரு கருத்துக் கணிப்பு வாஜ்பாய்க்கு 54 விழுக்காடு ஆதரவும் சோனியா காந்திக்கு 31 விழுக்காடு ஆதரவும் இருப்பதாகத் தெரிவித்தது.**

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*செய்தக்க அல்ல செயக்கெடும் செய்தக்க*
*செய்யாமை யானும் கெடும்.*

திருக்குறள்.

## நமது நோக்கு

### போராட்டங்களும், வாக்குறுதிகளும்...

உயர்பாதுகாப்பு வலயம் எனப் பெயரிட்டு இலங்கைப் படையினர் ஆக்கிரமித்து முகாம் அமைத்து நிற்கும் தங்கள் சொந்தப் பாரம்பரிய வதிவிடப்பிரதேசங்களிலிருந்து படைத் தரப்பினர் வெளியேறி, தம் மண்ணில் இயல்பு வாழ்வை, மீளக் குடியேறி ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளை உடன் எடுக்குமாறு கோரி இடம்பெயர்ந்து வாழும் தமிழ் மக்கள் இலங்கையின் சுதந்திரதினமான, கடந்த நான்காம் திகதியன்று வலிகாமம் வடக்கு மற்றும் தென்மராட்சி பகுதிகளில் ஆரம்பித்த சாகும்வரையிலான உண்ணாவிரதப்போராட்டம் மூன்றாவது நாளான நேற்றுமுன்தினம் வழமைபோன்று வெறுமனே வாக்குறுதிகளின்பேரில் தற்காலிகமாக கைவிடப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுவும் தங்களின் வாழ்வியல் உரிமைகளுக்காக, நியாயமானதும், அவசியமானதுமான கோரிக்கைகளை முன்வைத்து அமைதிமுறையில் போராடும் அப்பாவித் தமிழ்மக்கள் எப்போதும் சந்திக்கும் நிகழ்வின் தொடராகவே அமைந்துள்ளது.

ஒவ்வொரு போராட்டத்தின்போதும் அரசியல் மற்றும் , அரசியல்வாதிகளின் தலையீடு என்பது போராட்டத்தின் பரிமாணத்தை அர்த்தமற்றதாக்கும் வகையில் இடைநடுவில் சிதைந்துவிடுவது தான் துயரமானதாகின்றது.

கடந்தகாலங்களில் இப்படி எத்தனையோ போராட்டங்களின் எழுச்சிமுனைப்புக்கள் வெற்றுவாய் வாக்குறுதிகளின் முன் அடங்கிப்போனமை காரணமாக அந்தப்போராட்டங்களின் காரணிகள் இன்னமும் அப்படியே முடிவற்றநிலையில் அதற்கான தீர்வுகள் எதுவும் கிட்டாமல் கிடப்பில் போடப்பட்டவையாகி தீண்டுவாரற்றுக் கிடக்கின்றன.

மக்கள் தங்கள் போராட்டங்களுக்காக முன் வைக்கும் பிரச்சினைகள் யாவுமே அரசியல் சார்ந்த பிரச்சினைகளாகவும், அரசயல் நகர்வுகள் அல்லது பேச்சுவார்த்தைகள் மூலம் மட்டுமே தீர்வு காணப்படவேண்டியவைகளாகவும் இருப்பதால் அதற்குள் அரசியல்வாதிகள் தலையீடு செய்வது தவிர்க்க முடியாததாகிவிட்டது. ஆனால், மக்களின் பிரச்சினைகளை, மக்களின் மனோநிலையில் ஆழ்தள ஆதங்கங்களைப் புரிந்துகொண்டு ஆத்மார்த்தமாக அவர்களுடன் இணைந்து போராடிக்கொண்டே அதற்காக குரல்கொடுக்கும் விசுவாசமான அரசியல்வாதிகள் எவரும் இலங்கையின் ஜனநாயக அரசியல் நீரோட்டத்தில் இல்லையென்பதே பொதுவான மக்களின் கருத்தாகும்.

அவர்களுக்கு, அவர்களின் அரசியல் அபிலாஷைகளுக்கேற்ப, அரசியல் நடத்தியே பழக்கம். மக்களின் பிரச்சினைகளையும் தமக்கான அரசியல் தேவைகளுக்கான கருவியாகவே பயன்படுத்தும் அவர்களின் இயல்புதான் இன்றுள்ள அனைத்துப் பிரச்சினைகளுக்கும் காரணமாகும்.

மக்களின் பிரச்சினைகள், பிரச்சினையாகத் தொடரும் வரையில்தான் தமது அரசியல் அபிலாஷைகளை எட்டமுடியும் என்ற விசித்திரமான ஜனநாயக தத்துருவத்தில் அவர்களுக்குள்ள நம்பிக்கையும் மக்கள் அறிந்தே உள்ளனர். ஆனாலும், மக்களின் அப்பாவித்தனம், அவர்கள் அரசியல்வாதிகளின் வெற்று வாக்குறுதிகளை தொடர்ந்து நம்பிவருவதிலிருந்து தெளிவாக உணரக்கூடியதாக உள்ளது.

நேற்றுமுன்தினம் நடந்த நிகழ்வும் அதையே உணர்த்துகிறது.

வலிகாமம் வடக்கில் உண்ணாவிரதிகளைச் சந்தித்த தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மாவை சேனாதிராசா, ரவிராஜ், சிவாஜிலிங்கம் ஆகியோர் அரசியலில் குழப்பம் நிறைந்த இந்தச் சூழலில் இந்தப் போராட்டத்தை நிறுத்துவதே நல்லது எனத் தெரிவித்துள்ளனர். இதனையடுத்தே, உண்ணாவிரதம் கைவிடப்பட்டதாகத் தெரிகிறது.

இலங்கையின் அரசியலில் குழப்பமான நிலை நிலவுகிறது என்பது உண்மைதான். இங்கு ஒருபோதுமே, குழப்பமற்ற ஸ்திரமான அரசியல் நிலை அண்மைக்காலத்தில் இருந்ததில்லை என்பதும் அதைவிட உண்மையாகும்.

நிலைமை இவ்வாறிருக்க, அவர்கள் இதனை விளக்கி உண்ணாவிரதம் இருப்போருக்கு சூழலின் குழப்பநிலையை விவரித்திருக்கலாம். இப்போது புரிந்துகொண்டவர்கள் அப்போதும் அதை விளங்கிக் கொண்டிருப்பார்கள் அதன்மூலம் அவர்கள் தமது போராட்டத்தின் வடிவத்தை மாற்றிக்கொண்டிருக்கவும் கூடும். ஆனால், அப்படி ஏதுவும் நடக்கவில்லை. மூன்று நாட்கள் உண்ணாநோன்பு நோற்றவர்களின் உறுதிக்கு உத்தரவாதமற்ற வாக்குறுதிகளை மாற்று ஏற்பாடாக முன்வைத்தமை அர்த்தமற்ற ஒன்றாகவே உள்ளது.

இதேபோன்று, தென்மராட்சியில் உண்ணாவிரதிகள் முன் பிரதமரின் ஆலோசகர் குணசிங்கம் என்பவர் தோன்றி உங்கள் பிரச்சினைக்கு விரைவில் தீர்வு காணப்படும் என வாக்குறுதியை அளித்துள்ளார்.

பித்து இருஆண்டுகள் கடந்துள்ள நிலையில் இப்படி எத்தனையோ தேர்தலுக்குப் பின்னான வாக்குறுதிகளை அரசும், அரசியல்வாதிகளும் வழங்கிவிட்டார்கள்.

- எல்லாமே காற்றோடு போனகதைகள் தான்.
- காலவரையறையற்று சிறையில்வாடும் தமிழ்க்கைதிகளின் போராட்டம்...
- காணாமற் போனோரின் இரத்த உறவுகள் நடத்திவரும் போராட்டம்...
- உயர்பாதுகாப்பு வலயப் பிரதேசத்தினுள் குடியமர அனுமதிகோருவோர் நடத்தும் போராட்டம்....

எல்லாமே வாக்குறுதிகளால் - வாக்குறுதிகளை வழங்கும் வெற்று அரசியல்வாதிகளால் அரைகுறையில் அர்த்தமற்று முடிந்துவிடுவதுதான் கவலைக்குரிய விடயமாகியுள்ளது.

இது ஒரு உண்மையான - தீர்க்கமான இலக்குடன் மேற்கொள்ளப்படும் போராட்டம். எதனையும் வெறும் வாக்குறுதிகள் மூலம் தற்காலிகமாக நிறுத்திவிடலாம் தான். ஆனால், அதையே தீர்வாக்கி நிரந்தரமாக ஒடுக்கிவிடலாம் என எவரும் எந்த அரசியல்வாதியும் கருதிவிடக்கூடாது

இப்போதைக்கு இதைமட்டுமே கூறமுடியும்.

## நாடும் நடப்பும்




# வேலைநிறுத்தப்போராட்டம் விஸ்தரிக்கப்படும்
# யாழ்.பல்கலைக்கழக ஊழியர்கள் தெரிவிப்பு!

வேலைநிறுத்தப் போராட்டத்தை விஸ்தரிக்கப்போவதாக யாழ்.பல்கலைக்கழக ஊழியர்கள் தெரிவித்தனர்.

யாழ்.பல்கலைக்கழகத்தில் கடந்த மாதம் இறுதிப்பகுதி முதல் இடம்பெற்றுவரும் வேலைநிறுத்தப்போராட்டத்திற்கு இதுவரையில் எந்தவொரு பலனும் கிடைக்காத நிலையிலேயே, இந்தமுடிவை அவர்கள் எடுத்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

யாழ்.பல்கலைக்கழக நிர்வாகம், ஊழியர் நியமனம், அவர்களின் சம்பளநிர்ணயம் உட்படப் பல்வேறு விடயங்களிலும் பாரபட்சம் காட்டிவருவதுடன் - அரசியல் செல்வாக்கையும் பயன்படுத்திவருகிறது.

இவற்றைக் கண்டித்தே, கடந்த மாதம் முதல் வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஊழியர்கள் குதித்திருந்தனர். எனினும், தமது கோரிக்கைகளுக்கு இதுவரையில் எந்த விதத் தீர்வும் எட்டப்படாத நிலையிலேயே தமது போராட்டத்தினை விஸ்தரிக்கப்போவதாக அவர்கள் அறிவித்திருக்கிறார்கள்.

அனைத்துப் பல்கலைக்கழக ஊழியர்சங்கத் தலைவர் லயனல் மல்வத்தகே மற்றும் சங்கத்தின் செயலாளர் சுப்பையா ஆகியோர் நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணத்திற்கு வருகைதந்திருந்தனர்.

இவர்களை யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ் சந்திக்க மறுத்திருந்தார். இதனால், யாழ்.பல்கலைக்கழக நிர்வாகத்தினருக்கு எதிரான போராட்டத்தினை ஊழியர்கள் விஸ்தரிப்பதெனத் தீர்மானித்துள்ளதாக அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

இதனிடையே, ஊழியர்களின் வேலைநிறுத்தத்தால் பல்கலைக்கழகத்தின் கல்விச்செயற்பாடுகள் பெரிதும் பாதிக்கப்பட்டிருப்பதாக யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் தெரிவிக்கின்றனர்.

கடந்த மாதம் முதல் கல்விச்செயற்பாடுகள் ஊழியர்களின் வேலைநிறுத்தத்தால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் இதனால், மாணவர்கள் விரிவுரைகளுக்கு வந்துவிட்டு ஏமாற்றத்துடன் திரும்பிச்செல்வதாவும் மேலும் தெரிவித்தனர்.

எனினும், சிலதுறைவிரிவுரைகள் ஒழுங்காக இடம்பெறுவதாக யாழ்.பல்கலைக்கழக நிர்வாகம் தெரிவிக்கின்றது. (ப)

## பொலிஸ்மா அதிபரின் பதவிக்காலம் நீடித்தால் உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர நேரிடும்

பொலிஸ்மா அதிபர் இந்திர டி சில்வாவின் பதவிக்காலம் நீடிக்கப்படுமானால், தாம் உயர் நீதிமன்றில் அடிப்படை மனித உரிமை மீறல் வழக்கைத் தாக்கல் செய்ய நேரிடும் எனச் சிரேஷ்ட உதவிப் பொலிஸ்மா அதிபர்கள் தெரிவித்தனர்.

பொலிஸ்மா அதிபரின் பதவிக்காலம் எதிர்வரும் 14 ஆம் திகதி முடிவடைகிறது. எனினும், அவரது பதவிக்காலத்தை நீடிப்பதற்கான முயற்சியில் ஜனாதிபதி ஈடுபட்டுள்ளமையை எதிர்த்தே, அவர்கள் இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார்கள்.

அவ்வாறு அவரது பதவிக்காலம் நீடிக்கப்படுமானால், தமக்குரிய பதவி உயர்வுகள் கிடைக்காமல் போய்விடும் என்பதைச் சுட்டிக்காட்டியே, தமது கருத்தை வெளியிட்டுள்ளனர்.

இவர்களது இந்தக் கருத்திற்கு இலங்கையிலுள்ள மனித உரிமைகள் அமைப்புக்களும் தமது ஆதரவினைத் தெரிவித்துள்ளன.

எனினும், எதிர்வரும் 14 ஆம் திகதியுடன் அவரது பதவிக்காலம் முடியாவிட்டாலேயே, இந்த வழக்கைத் தாக்கல் செய்யவுள்ளதாகவும் அவர்கள் மேலும் தெரிவித்தனர். (01)

## யாழ்.திறந்த பல்கலைக்கழகத்தில் விரைவில் சட்டப்பயிற்சி நெறி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண திறந்த பல்கலைக்கழகத்தில் சட்டப் பயிற்சி நெறி மிகவிரைவில் ஆரம்பிக்கப்படவிருப்பதாக யாழ். திறந்த பல்கலைக்கழக இயக்குநர் ச.ஆ.ஞானேந்திரன் தெரிவித்தார்.

யாழ்.திறந்த பல்கலைக்கழகத்தில் சட்டப்பயிற்சி நெறியைப் பயில்வதற்கு சுமார் 350 பேர்வரை விண்ணப்பித்துள்ளனர். இவர்களின் விண்ணப்பங்கள் யாவும் திறந்த பல்கலைக்கழகத்தின் தலைமையகத்துக்கு அனுப்பப்பட்டுள்ளன.

பயிற்சிநெறியைப் பயில தெரிவுசெய்யப்பட்டவர்களின் பட்டியல் எமக்குக் கிடைத்ததும், வகுப்புக்கள் ஆரம்பிக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.

## வீடுகளில் தற்காலிமாக குடியேறுவோர் பொருட்களை அபகரித்துச் செல்கின்றனர்

யாழ்.குடாநாட்டில் தற்காலிக வீடுகளில் இருப்பவர்கள் வீட்டைவிட்டு வெளியேறும் போது, வீட்டில் உள்ள பொருட்களை சூறையாடிச் செல்வது தொடர்பான முறைப்பாடுகள் சென்றமாதம் யாழ்.பொலிஸ் நிலையத்தில் அதிகரித்துள்ளது என பொலிஸ்நிலைய வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

வீட்டு உரிமையாளர்கள் இல்லாத வீடுகளில் தற்காலிகமாகக் குடியேறுபவர்கள் வீட்டு உரிமையாளர் வந்தவுடன், வீட்டில் ஏற்கனவே உள்ள பொருட்களையும், தமது பொருட்கள் எனக்கூறி எடுத்துச்செல்கின்றனர். இதனால், வீட்டு உரிமையாளர்கள் பெரும் சிரமத்தினை எதிர்நோக்குகின்றனர்.

தமது வீட்டு உரிமைச்சொத்துக்களை பெறுவதற்கு பொலிஸார் வீட்டு உரிமையாளர்கள் பொலிஸ்நிலையத்தில் வந்து முறையிடுவதாக தெரிவித்தனர். (தீ)

# தேர்தல்களை பகிஷ்கரிக்கப் போவதாக அம்பாறை பிரதேச மக்கள் தெரிவிப்பு!

(கொழும்பு)

அம்பாறை இறக்காமம் பகுதி பிரதேச செயலர் பிரிவின் எல்லைகள் வரையறுக்கப்படும் வரை நடைபெறவிருக்குழ் உள்ளூராட்சித் தேர்தல் முதல் அனைத்துத் தேர்தல்களையும் பகிஷ்கரிக்கப்போவதாக அந்தப் பிரதேச மக்கள் தெரிவித்தனர்.

இறக்காமம் ஜும்மா பள்ளிவாசலில் அரசியல் கட்சிகளின் தலைவர்கள் மற்றும் பொது அமைப்புக்களின் தலைவர்கள் எனப் பலரும் கலந்துகொண்ட கூட்டத்திலேயே இந்த முடிவு அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின் பிரகாரம் இறக்காமம் பகுதிப் பிரதேசசெயலக எல்லை இதுவரை வகுக்கப்படவில்லை. இதனைக் கருத்தில் கொண்டு அந்தப் பகுதி எல்லைகள் வகுக்கப்பட்ட பின்னரே இந்த மக்கள் தேர்தலில் வாக்களிப்பதென முடிவெடுத்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, உள்ளூராட்சித் தேர்தல் உட்பட எந்தவொரு தேர்தலையும் புறக்கணிப்பதோடு கட்சிக்கூட்டங்களையும், கட்சி சம்மந்தமான சுவரொட்டிகள் ஒட்டப்படுவதையும் தாம் புறக்கணிக்கவுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

இந்த அறிவித்தல் முஸ்லிம் கட்சிகளுக்கே பாதிப்பை உண்டு பண்ணும் என ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். (01)

சந்திப்புக்களம்

- மேகதூதன் -

# எல்லாம் வல்லதான கல்வியினால் புரட்சிகரமாகத் தேசத்தைக் கட்டியெழுப்பமுடியும்

சமகால கல்வி, சமூக வாழ்வு, நிலைமைகள் தொடர்பாகக் கல்வியியலாளரும், யாழ். தேசிய கல்வியியற்கல்லூரி உப பீடாதிபதியுமான பா.தனபாலனுடனான சந்திப்பு



***கேள்வி: இன்றைய சமகால இளம் கல்வியியலாளர், கல்வியியல்துறைக்கு அர்ப்பண சேவையாற்றுபவர் என்ற வகையில், கல்வியில் முழுமையான பயனை நாம் பெற்றுள்ளோமா? தங்கள் அபிப்பிராயம் என்ன?***

பதில்: கல்வி ஒவ்வொருவருக்கும் உரிமையாகவும், அது எல்லாவிதமான சுதந்திரங்களுக்கும், புரட்சிகரமான அரசியல் மேம்பாடுகள் அனைத்துக்குமான அடிப்படையாக உள்ளது. அதன் பயன்கள் எமது தேசத்தில் இன்னும் முழுமையாக எட்டப்படவில்லை. தேசத்தைக் கட்டியெழுப்பவேண்டிய இந்த நேரத்தில், கல்வியின் பயன்கள் எட்டாதவர்களை அடிமட்டப் பங்கேற்புகள்மூலம் எட்டுவதற்கான புரட்சிகர நடவடிக்கைகளையும், விழிப்புணர்வுகளையும், துணிகரமான விரைவான முடிவுகளையும் எடுக்கவேண்டியுள்ளது.

***கேள்வி : இதற்கான அரசியல் சூழ்நிலை தற்போது நிலவுகிறது என எண்ணுகிறீர்களா?***

பதில்: தேசிய விடுதலைக்காக இரத்தம் சிந்திப் போராடிய ஒரு தேசிய இனம் - சலுகைகளையும், அரசியல் சந்தர்ப்ப சூழ்நிலைகளையும் பயன்படுத்துவதுடன், உறுதியான அரசியல் - கல்வி - புரட்சிகர மக்கள் விழிப்புணர்வினூடு புதிய சந்தர்ப்பங்களை உருவாக்கலாம். எம்மினத்துக்குச் சாதகமான கல்வியின் முழுப்பயன்களையும் பெறும் புதிய சூழ்நிலைகளை உருவாக்கலாம். இதற்குத் தேசப்பற்றுள்ள அனைவரும் ஒன்றிணைக்கப்பட வேண்டும்.

***கேள்வி :- அவ்வாறானால் அரசியல்வாதிகள், கல்வியலாளர்கள் அனைவர்கள் மீதும் குற்றம் சுமத்துகிறீர்களா?***

பதில்: ஆம், எம்மினத்தின் சுயம் பற்றி மறுமதிப்பீடு செய்யவேண்டிய காலத்தில் நாம் இருக்கின்றோம். மாபெரும் தியாகம் பொருந்திய போராட்ட காலத்தில் வாழ்ந்த எமக்கு, எமது மாணவர்களுக்குத் தேசப்பற்றுடன் எவ்வாறு கல்வியை வழங்குவது? எப்படி வழங்குவது? என்பதில் இன்னும் தெளிவு ஏற்படவில்லையே. ஒடுக்குமுறையின் பரிமாணங்களுக்குத் தொடர்ந்தும் ஆளாகியுள்ளோமே! எம்மை அறியாமலேயே அதற்கு உறுதுணையாகி நிற்கின்றோமே!

***கேள்வி: அவ்வாறாயின், ஒடுக்குமுறையின் ஆயுதமாகக் கல்வியை வீழ்ச்சியடையவித்தல் என்ற உத்தி வெற்றி பெற்றுவிட்டது என்கின்றீர்களா?***

பதில்: அதில் சந்தேகமேயில்லை. நாம் பலவற்றில் வெற்றி பெற்றுள்ளோம். ஆனால், கல்விமூலம் தேசத்தைக் கட்டியெழுப்பலாம் என்ற கோட்பாடு, கல்வியை அழிப்பதன்மூலம் தேசத்தை அழிக்கலாம் என்ற நடைமுறை உத்திமூலம் சிதைக்கப்பட்ட நிலையிலேயே நாம் உள்ளோம். இங்கே நான் கல்வி என்று கூறுவது பரந்தது - பரமானந்தம் தருவது. அதாவது, பரீட்சைப் பெறுபேறுகளுடன் மட்டும் நில்லாது கலாசாரச் சீரழிவிலிருந்தும் மாணவர்களைப் பாதுகாப்பதே நற்பிரஜையின் தன்மையாகும். நாகரிமான சமூகத்தில் அமைதியாக வாழக்கூடியநிலை போன்ற பலவற்றைக் கருத்திற்கொள்ளவேண்டும். மேலும் இன்று வடக்கு - கிழக்கில் 94 ஆயிரம் சிறார்கள் பாடசாலைக்குச் செல்லாதுள்ளனர். அவர்களைப் பாடசாலைகளில் இணைக்கவேண்டியுள்ளது. இது தொடர்பான பல கடமைகளை நிறைவேற்றுதல் காலத்தின் தேவையாகவுள்ளது.

***கேள்வி: தற்போது யாழ்ப்பாணமாவட்டம் கல்வி அடைவுகளில் பதின்மூன்றாவது இடத்திலுள்ளது பற்றி...?***

பதில்: இலங்கைத்தீவில் நிகழ்ந்த இனப்பாகுபாடு, மேலும் எம் இனத்தின்மீது திணிக்கப்பட்ட யுத்தம், அதன் தாக்கங்கள், திட்டமிட்ட வளப்பங்கீட்டின்மைகள், கல்வி முகாமைதத்துவக் குறைபாடுகள் இவற்றின் விளைவாக ஏற்பட்ட மன அழுத்தங்கள், குடும்ப அலகின் சிதைவுகள், மனவடுக்கள், மனநோய்கள், கலாசாரச் சீரழிவுகள் இவைகள் எல்லாம் யாழ்ப்பாண மாவட்டக் கல்வி நிலையைப் பாதித்துள்ளன.

***கேள்வி: இலங்கையில் எய்ட்ஸ் நோய் அதிகமுள்ள மாவட்டங்களில் கொழும்புக்கு அடுத்த இடத்தில் (இரண்டாம் இடத்தில்) யாழ்ப்பாணம் உள்ளதாமே?***

பதில்: ஆம், தாங்கள் கூறியது சரி, பல தேவைகளுக்காக வெளிநாட்டவர் பலரின் வருகை, எம்மவர்களின் ஒழுக்கம் சீர்கெடுவதற்கான சந்தர்ப்பங்கள் நிறைந்தநிலை, அடிப்படைக்குடும்ப அலகில் ஏற்பட்ட விரிசல்கள், சமவயதுக்குழுவினரின் தாக்கங்கள், போதைப்பொருள் பாவனை, சமூகச் சூழல் போன்ற பல காரணங்கள் இந்நிலைக்குச் சாதகமாகவுள்ளன. ஒரு இனத்தை இலகுவாக அழிக்கவேண்டுமானால் - கலாசாரச் சீரழிவை ஏற்படுத்தினால் போதுமானது. இந்நிலையில் நாம் அனைவரும் உறுதியான விழிப்புடன் செயற்படவேண்டும். இது தொடர்பான விழிப்புணர்வுச் செயற்திட்டங்களைக் கலாசாரம் பேணும் குழுவினர் பலமுனைகளில் செயற்படுத்தி வருகின்றனர். அவர்களது புரட்சிகரமான பணி முன்மாதிரியானது, போற்றுதலுக்குரியது. இப்பணியில் நாம் அனைவரும் இணையவேண்டும். இக்குழுவினர் பாடசாலை மாணவர்களிடையே நிலவும் அராஜகநிலை, மூத்தோர் - ஆசிரியரை மதிக்காதநிலை, வன்முறைகளில் ஈடுபடல், பெண்களுக்குத் தொல்லை கொடுத்தல், போதைப்பொருள் பாவனை போன்ற தீய செயல்களிலிருந்து மாணவர்களை விடுவிக்க நடவடிக்கைகளை விஸ்தரிக்கவும் வேண்டும். பாடசாலைப்பற்று, சமூகப்பற்று, நாட்டுப் பற்றுக் கொண்ட புதிய பரம்பரையினரை உருவாக்க பல வேலைத்திட்டங்களையும் மேற்கொள்ளவேண்டியுள்ளது.

***கேள்வி: பொதுவாக இன்றைய எமது கல்விப்பிரயோகங்கள் பொது நிர்வாகங்கள் விடுதலைக்கு உதவுவதாக அமையாமல், அந்நியமாதலுக்கு ஆதாரங்களாகவுள்ளனவென விமர்சிக்கப்படுகிறது.***

பதில்: ஆம், அந்நியமாதலுக்கும், சுயநலத்திற்குமே வழிகாட்டுவதாகவுள்ளது. இவ்வாறான கல்வியைக் 'கல்வி' எனக்கூற முடியாது. இதில் பல மாற்றங்களை ஏற்படுத்த வேண்டியுள்ளது. வடக்கு - கிழக்கிலுள்ள பல் கலைக்கழகங்கள், ஆசிரியர் பயிற்சி நிறுவகங்கள், தொழில்நுட்பப்பயிற்சி நிறுவகங்கள், கல்வி அலுவலகங்கள், பாடசாலைகள், அரச நிறுவனங்கள், திணைக்களங்கள், பொது அமைப்புக்கள், தனியார் அமைப்புகள் போன்ற சகல அமைப்புகளதும் - மனித வளத்தினரின் செயற்படுநிலை, கல்வித் தேவைகள், வினையாற்றல், சமூகப்பற்று மனப்பான்மை நடத்தைகள் என்பவை தொடர்பான வினைத்திறன் மதிப்பீடுகள், சுய மதிப்பீடுகள், செயல்நிலை ஆய்வுகள் - அந்தந்தத் துறையினராலும், வேறு நிபுணர்களாலும் ஆய்வுக்குட்படுத்தப்பட்டு, பிரச்சினைகள் இனங்காணப்படவேண்டும். ஊழியர் தம் சுயமுரண்பாடுகளையும், சேவை வினைத்திறன்களையும், கடமைப்பொறுப்புகளையும், செய்யமுற்படும்போது எழும் தடைகள், ஊழல், செல்வாக்குநிலைகள் இவையெல்லாம் எமது பொது வாழ்வு, கல்விச் சூழல் நிலைகளைச் சிதைத்து விடுகின்றன, புற்றுநோய்போல அழித்து வருகின்றன. இவ்வகையில் ஒவ்வோர் சமூகச்சூழல் அலகுகளையும் ஆய்வுக்குட்படுத்தி புரட்சிகரமாகச் சீர்திருத்தவேண்டியுள்ளது.

***கேள்வி: ஏன் தாங்கள் இவ்விடயத்தில் கூடுதலான அழுத்தத்தைக் காட்டுகிறீர்கள்?***

பதில்: கடந்த இருபது வருடங்களுக்கு மேல் நடைபெற்ற யுத்த தாக்கங்கள், சகஜநிலைஇல்லாமை, சுமுகமானசூழல் நிலவாமையினால் பொதுமக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

நீண்டபோராட்டத்தில் ஏற்பட்ட இழப்புக்கள், தியாகங்கள் வீண் போகாமலிருக்க இன்றைய காலத்திலிருக்கும் ஒவ்வொருவரும் இனப்பற்றுடன் அர்ப்பணசேவையாற்ற வேண்டிய தேவை இருக்கின்றது. மற்றும் பொது நிறுவனங்களில் ஏற்படும் தவறுகள், சமூகத்தின் வேறு ஒரு பகுதியில் பிரச்சினைகளைத் தோற்றுவிக்கின்றன. அத்துடன் திருத்தப்படாத தவறுகள் மேலும் மேலும் தவறுகளை ஏற்படுத்துகின்றன. இதனால் நிறுவனங்களின் தலைவர்கள், ஊழியர்கள் தமது நேரத்தின் பெரும் பகுதியைத் தவறுகளைக் கண்டறிவதிலும், மளக கருமங்களை மேற்கொள்வதிலும் காலத்தை வீணாக செலவிடுகின்றனர். பொதுமக்களுக்குக் கிடைக்கும் சேவைகள் பாதிப்புக்குள்ளாகின்றன. பொதுச்சேவை செய்வோர் மிக நிதானமாக, தம்மால் இயன்ற சேவையைப் பொதுமக்களுக்கு வழங்குவதுடன், புதிய அபிவிருத்தித் திட்டங்களுக்கான வழிகளில் செயற்திட்டங்களை மேற்கொள்ளவேண்டிய கடப்பாட்டிலிருந்து தவறுதல் தேசத்துரோகமாகும். இந்தத் தேசத்தைக் கட்டியெழுப்புவதற்குப் பதிலாக, அதை அழிக்கும் நடவடிக்கைகளாகவே உள்ளன. இவ்வாறான சூழ்நிலைகளே பெருமளவில் எமது பிரதேசங்களில் காணப்படுகின்றன. இவை அறவே ஒழிக்கப்படவேண்டும். இதற்குப் பல கல்வி விழிப்புணர்வுத் திட்டங்கள், தொடர்பு சாதனங்கள் மூலம் ஏற்படுத்தப்படவேண்டும்.

(தொடரும்)

செய்திக் கட்டுரை

- கதிர் -

# இக்காலம் சமாதானக் காலமல்ல சமாதானத் தேக்க காலம்

கொழும்பு அரசியலில் இன்று தலைமை என்பது இல்லை என்ற நிலைப்பாட்டின் உச்சத்தை அடைந்து வருகின்றது. அதேவேளை, தமிழர் தரப்பிற்கான அரசியல் தலைமை சகலவிதமான அறிவும், ஆளுமையும், இராஜதந்திரங்களும் கொண்ட சர்வதேச அங்கீகாரங்களைப் பெற்றதாகப் பரிணமித்துள்ளமை - சமாதான முயற்சிகளைப் பொறுத்தமட்டில், அதிக இஸ்த்திரமாய் இருக்கும் பகுதி தமிழர் பகுதியென்பதை சர்வதேசத்திற்குப் படம் போட்டுக்காட்டியுள்ளது.

ஜனாதிபதி - பிரதமர்களுக்கிடையிலான அதிகார இழுபறி - சமாதான முயற்சிகளில் பல்வேறு சந்தேகங்களையும், தேக்கநிலைமைகளையும் ஏற்படுத்தியதுடன், இவர்களில் யார் தலைவர்? என்ற கேள்வியை உள்நாட்டிலும் சர்வதேசத்திலும் ஏற்படுத்தியுள்ளது.

சமாதான அனுசரணையாளர்கள் உட்பட சர்வதேசமே இலங்கையில் சமாதானத்தை ஏற்படுத்தப் போட்டியிட்டுக்கொண்டு முன்வந்த போது, குரங்கு அப்பம் பிரித்த கதையாக சமாதானத்தைப் பறித்து, பிய்த்துக்கொள்ள முயற்சிக்கின்ற ஜனாதிபதியில் சர்வதேச வெறுப்புக்கள் அதிகரித்துவிட்டன. மறுபுறத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தன்னிடம் எந்த அதிகாரமும் இல்லாமல், புலிகளுடன் பேசுவதாலோ அல்லது சமாதான முயற்சிகளை மேற்கொள்வதாலோ எதனையும் வெற்றிகாண முடியாது என்பதை ஒப்புக்கொண்டுள்ளார்.

கொழும்பு அரசியல் வட்டாரங்கள் இதனை விடப் பல குழப்பங்களுக்குள் இருக்கிறது. சமாதானத்திற்கெதிரான சக்திகளான ஜே.வி.பியுடன் சிறிலங்கா சுதந்திரக்கட்சி கூட்டணி அமைப்பதும்கூட எதிர்காலத்தில் - குழம்பிய குட்டையில் மீன்பிடிக்க முற்படும் வேலைதான். தென்பகுதி மக்கள் - தமிழர்களின் அழிவுகளைப் பத்திரிகையில் படித்துள்ளார்கள். அதன் அதிர்வைக் கட்டுநாயக்கா விமானத்தளம் புலிகளால் தாக்கி அழிக்கப்பட்டபோது கண்டவர்கள். இன்று புலிகளின் பலத்தை வன்னியில் நேரடியாகவும், வீடியோ படங்கள் மூலமும் காண்கின்றனர். ஆகவே, மீண்டும் ஒரு தடவை தமிழரைச் சீண்டிப் புலிகளின் சினத்தைப் போர் முனையில் பார்ப்பதற்கு அனுமதிக்கமாட்டார்கள். ஆகவே, சிங்கள மக்கள் தமக்கு ஒரு சரியான தலைமையைக் கொண்டுவந்து, அதன்மூலம் தீர்வை ஏற்படுத்தவே விரும்புவர்.

ஆனால், தமிழர் தரப்பிற்குச் சரியான தலைமை ஒன்றுள்ளது. அது தனது கொள்கையின் நீண்டகால நோக்காகக்கொண்ட தனது திட்டமிடல், அவற்றை பகுதிகளாக்கி குறுகிய காலத்தில் தான் அடையவேண்டிய குறிக்கோள்கள் யாவற்றையும் சரிவரக் காய் நகர்த்தி வெற்றிகளை ஈட்டிய வண்ணம், தனது தாயக விடுதலைப் பயணத்தைத் தொடர்கின்றது. இருப்பினும், தமிழர்தரப்பின் உன்னத இலக்கை அடைவதற்கு சில தீயசக்திகள் தடையாகவும் இருக்கின்றன. அவை தமிழினத்தால் சரிவர அடையாளம் காணப்பட்டுள்ளதால், கால ஓட்டத்தில் புறந்தள்ளப்படும்.

கொழும்பில் காணப்படும் தலைமைத்துவ வெற்றிடம் காரணமாக மேற்குலகநாடுகள் - இலங்கையின் சமாதானப் பயணத்திலும் பொருளாதார அபிவிருத்தியிலும் சமபங்காளிகளான தமிழர் தரப்பை நாடிக் கிளிநொச்சிக்கு வரவேண்டிய சூழல் இன்று அதிகரித்து வருகிறது.

கடந்த மாதம் சுவீடன் நாட்டு நாடாளுமன்ற உறுப்பினர்குழு - கிளிநொச்சிக்கு சென்றதையடுத்து, அபிவிருத்திக்குப் பொறுப்பான அனைத்து நாடுகளினதும் பிரதிநிதிகள் கிளிநொச்சிக்குச் சென்று, தமிழ்ச்செல்வனுள்ளிட்ட தமிழர் தரப்பினருடன் பல்வேறு அரசியல், பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினைகளை ஆராய்ந்துள்ளனர். இதனைவிட, ஏராளமான வெளிநாட்டுப் பிரமுகர்களும், பல நாட்டுத் தூதுவர்களும் கிளிநொச்சியில் தமது கால்களைப் பதித்துள்ளனர். இது தமிழமக்களுக்கு கடந்த காலங்களில் சிங்கள தேசத்தினால் இழைக்கப்பட்ட அநீதிகளை அம்பலப்படுத்தவும், எமது தரப்பு நியாயங்களைத் தெளிவுபடுத்தவும் எமது தலைமைக்கு கிடைக்கும் அரிய சந்தர்ப்பமாகும்.

தமிழர்கள் கடந்த காலங்களில் பல தடவை பலரை நம்பி ஏமாந்தவர்கள். அனுபவம் பல பாடங்களை எமக்குக் கற்றுத்தந்துள்ளது. ஆகவே, இனியொரு தடவை நாம் பாடம் படிக்காமல், இந்தமுறை எமக்கு "மெரிட்பாஸ்" கிடைக்கவேண்டும். இந்த வாய்ப்புக்களைச் சரியாகக் கையாள்வதில் கிடைக்கப்போகும் வெற்றிகளே ஈழப்போராட்டத்தில் தமிழர் கொடுத்த தியாகங்களுக்கான சன்மானமாகும்.

தமிழர்களைப் பொறுத்தமட்டில் சிங்களத் தலைவர்களின் அரசியல் "பேயாட்டம்" காரணமாக தமிழர்களின் உண்மை நிலைமையைச் சர்வதேசம் புரிந்துகொள்ளும் அதேநேரம், தமிழர் பக்கமாகச் சர்வதேசத்தை சிந்திக்க வைக்கக் கூடிய "பொற்காலம்" ஆகவும் இது இருக்கும். ஆகவே, இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தத் தமிழர்கள் வேகமாகவும், விழிப்பாகவும் செயற்பட வேண்டும்.

விடுதலைப் புலிகளால் கையளிக்கப்பட்ட இடைக்கால நிர்வாக அதிகாரமளிக்கப்பட்ட திட்டவரைபை ஏற்றுக்கொண்டு, அதிலிருந்து பேச்சுககளை ஆரம்பிக்க சிங்களத்தலைமை எதுவும் முன்வரப்போவதில்லை. ஆகவே, "சமாதானம்" என்பதைவிட "சமாதானத் தேக்க காலம்" என்பதுதான் தமிழர்களுக்குச் சாதகமாக இருக்கும். ஏனெனில், சமாதானத்தைப் பற்றி பேசும் இலங்கை அரசியல் தலைவர்கள் யாருமே, சமாதானத்திற்கான எந்தவொரு தியாகத்தையோ, விட்டுக்கொடுப்பையோ மேற்கொள்ளத்தயாராக இல்லை என்பதாலேயாகும். சிங்களத்தலைவர்கள் சமாதான முன்னெடுப்பை தமது சுய அரசியல் இலாபத்திற்கும், சிங்கள மக்களை ஏமாற்றுவதற்குமே பயன்படுத்துகின்றனர்.

இந்தியாவுடன் பாதுகாப்பு ஒப்பந்தங்களை மேற்கொண்டு வருவதும், அமெரிக்கா உட்பட பல்வேறு நாடுகளில் யுத்தக்கப்பல்கள் உட்பட யுத்த ஆயுதக் கொள்வனவை மேற்கொள்வதன்மூலம் - தமிழர் பிரதிநிதிகளுக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தலாமென சிங்களத் தலைவர்கள் கனவு காணக்கூடும். உயிர் ஒருமுறைதான் போகும். அது உரிமைக்காகப் போகட்டும். உடல் ஒருமுறைதான் வேகும். அதுவும் உரிமைக்காக வேகட்டும் என்றே தமிழர்கள் போராடி வந்தவர்கள். ஆகவே, அவர்கள் தமது இலக்கை அடையும் வரை சோர்வடையமாட்டார்கள் அமைதி வழிப் பேச்சுக்கள்மூலம் தமிழர்களின் உரிமைகள் வழங்கப்பட்டால், தமிழர்கள் அமைதியாகிப் போவார்கள். இல்லையேல் நினைத்ததை முடிப்பதைத்தவிர அவர்களுக்கு வேறு வழியில்லை. ☆

# சதாமுடன் நெருக்கமான அறுவர் அமெரிக்கப் படைகளால் கைது

சதாம் ஹுசைனின் ஆட்சிக்காலத்தில் அவருடன் நெருங்கிய உறவினைக் கொண்டிருந்தவர்கள் எனப்படும் அறுவரை அமரிக்கப்படையினர் நேற்றுமுன்தினம் கைதுசெய்துள்ளனர். கூட்டுப்படைகளுக்கெதிரான செயற்பாடுகளிலும், கெலிகொப்படர் தாக்குதல்களிலும் இவர்கள் ஈடுபட்டிருந்தனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



ஈராக்கின் தென்பகுதியில் முஸ்லிம் பேரரசின் துண்டுப்பிரசுரங்கள் மூலம் முஸ்லீம் தீவிரவாதிகள், அமரிக்கக் கூட்டுப்படையினருக்கு உதவி செய்யக்கூடாதென எச்சரித்திருந்தனர். இதன் பின் கூட்டுப்படையினருக்கு தகவல்களை வழங்கியிருந்தனர் என்ற சந்தேகத்தில் இருவர் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

இதனிடையே, ஷியா முஸ்லிம்களின் ஆனமீகத் தலைவர் 'அயோதுல்லா அலி அல்கசெனிக்' க்கு எதிராக மேற்கொண்ட கொலை முயற்சியில் இருந்து அவர் உயிர் தப்பியுள்ளதாக பரப்பப்பட்ட வதந்திகள் பின், அதிக அளவிலான ஆதரவாளர்கள் அவரது இல்லத்தின்முன் திரண்டிருந்ததாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

சதாமின் குடும்பத்திற்கு சொந்தமான சிலர், அமெரிக்க கெலிகொப்டர் தாக்குதலில் ஈடுபட்டிருந்தனர் எனச் சந்தேகித்து, சதாமின் நகரான 'திக்ரித்' இல் தேடுதல் மேற்கொண்டதாக அமெரிக்க இராணுவ அதிகாரி 'ரசல் தெரிவித்தார்.

இதனிடையே, 800 இற்கும் மேற்பட்ட ஈராகியர்கள் ஈராக்கின் தென்பகுதியான சுனி முஸலிம்களின் பிரதேசத்தில் மாலையில் இருந்து விடியும் வரை அமுல்படுத்தப்படும் ஊரடங்குச் சட்டத்திற் கெதிராகவும், சிறைப்பிடிக்கப்பட்ட ஈராக்கியர்கள் விடுவிக்கப்படவேண்டும் எனக் கோரியும், ஆர்ப்பாட்டம் ஒன்றை மேற்கொண்டுள்ளனர்.

சென்ற மாதம் மூன்று அமெரிக்கர்கள் பாதையோரக் குண்டுவெடிப்பில் கொல்லப்பட்ட பின்னரே இந்த ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டிருந்தது.

மேலும், சென்ற ஞாயிற்றுக்கிழமை 'குர்மில' என்ற குர்திஷ் பிரதேசத்தில் நடத்தப்பட்ட தற்கொலைக் குண்டுத்தாக்குதலில் 109 குர்திஷ் மக்கள் கொல்லப்பட்டிருந்தனர். இத்தாக்குதலுக்கு காரணமானவர்களை தேடும் பணியில் அமெரிக்கப்படையினர் ஈடுபட்டுவருகின்றனர். இக்குண்டுதாக்குதலுக்கு 'வுன்சர் அல் சனா' என்ற பிரிவினர் உரிமைகோரியுள்ளனர்.

## லைபீரியாவை கட்டியெழுப்ப சர்வதேச உதவிகோரும் அனான்

லைபீரியாவை மீளக் கட்டியெழுப்புவதற்கு சர்வதேச உதவிகளைப் பெறுவதற்கு ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் கோபிஅனான் ஈடுபட்டுள்ளார்.

நியுயோர்க்கில் நடைபெற்ற மாநாடு ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

500 மில்லியன் அமெரிக்க டொலர்களை லைபீரியாவுக்கு வழங்க முயற்சித்து இருக்கின்றோம். லைபீரியாவின் அயல் நாடுகள் இந்த நிதித் திரட்டலுக்கு உதவ வேண்டும் எனவும், அவர் கேட்டுக்கொண்டார்.

உள்நாட்டு வெளிநாட்டு முதலீடுகள் தொடர்பாகவும், மாநாட்டில் கலந்துரையாடப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

உலக நோக்கு

## ஈராக், குவைத்தில் பணிபுரியும்

# அமெரிக்க படையினரின் பாலியல் வன்முறைகளை விசாரிக்க பாதுகாப்பு செயலர் ரம்ஸ் பீல்ட் உத்தரவு



ஈராக்,குவைத் ஆகிய நாடுகளில் பணியாற்றும் அமெரிக்கப்படையினரின் பாலியல் வன்முறைகள் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ளுமாறு, அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சர் டொனால்ட் ரம்ஸ்பீல்ட் தெரிவித்தார்.

பாதுகாப்பு அமைச்சில் பாலியல் வன்முறைகள் ஏற்றுக்கொள்ளமுடியாது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாலியல்வல்லுறவு, வல்லுறவுக்கான முயற்சி கொடூரமாக ஒருவரை ஒருவர் தாக்குதல், தன்னினச்சேர்க்கை ஆகியன குற்றமாக கருதப்படும் எனவும் பென்டகன் தெரிவித்துள்ளது. உயர்மட்ட இராணுவ அதிகாரிகள் இவற்றை கண்காணித்து உரிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டியது அவர்களின் முக்கிய பணி எனவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுவரை 80 குற்றங்கள் இவை தொடர்பாக அறிவிக்கப்பட்டுள்ளதாகவும், தெரிவிக்கப்பட்டுள்ளது. ஈராக்,குவைத் ஆகிய நாடுகளில் பணிபுரியும் 37 பெண் படைவீரர்கள், தாம் சக படையினரால் தாக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளனர்.

90 நாட்களுக்குள் இவை தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு அவற்றின் முடிவுகளும், அவற்றை நிறுவுவதற்கான ஆலோசனைகளும் தெரிவிக்கப்படவேண்டும் எனவும் ரம்ஸ்பீல்ட் கட்டளை பிறப்பித்துள்ளார்.

# சுரங்க ரயில் தாக்குதல் விசாரணைகள் ஆரம்பம்



மொஸ்கோவில் வெள்ளிக்கிழமை சுரங்கப் பாதையினூடாக சேவையில் ஈடுபட்டிருந்த ரயில் வண்டி ஒன்றில் நிகழ்த்தப்பட்ட குண்டுத்தாக்குதலில் 39 பயணிகள் கொல்லப்பட்டிருந்தனர். இதுதொடர்பாக விசாரணைகளை புலன்விசாரணைப் பிரிவினர் மேற்கொண்டு வருகிறார்கள்.

தற்கொலைக் குண்டுதாரியினால் இத்தாக்குதல் நடத்தப்பட்டதா அல்லது குண்டுப்பொதி முன்னரே வண்டியின் இரண்டாவது பெட்டிக்குள் வைக்கப்பட்டதா என்பதை அறிந்து கொள்வதற்கான விசாரணைகளை அதிகாரிகள் மேற்கொண்டு வருகின்றனர்.

இந்தக் குண்டுத் தாக்குதலுக்கு செச்சினியத் தீவிரவாதிகளே காரணமென ரஷ்ய அதிபர் விளாடிமிர் பூட்டின் தெரிவித்துள்ளார்.

ஆனால், செச்சினியத் தீவிரவாதிகள் இந்தக் குண்டுத்தாக்குதலை வன்மையாக கண்டித்திருந்தனர். ஆனால், எவ்வாறு குண்டுத்தாக்குதல் நிகழ்த்தப்பட்டது என்பதில் மாறுபட்ட கருத்துக்கள் நிலவிவருகின்றன.

மேலும், ரயில் நிலையத்தில் பொருத்தப்பட்டிருந்த கமராக்களின் மூலம் தாக்குதலை நடத்தியவர் இரு பெண்கள் என பி.பி.சி செய்தியாளர் தெரிவித்திருந்தார்.

ஆனால், ஆண் ஒருவரின் படத்தைப் பிரசுரித்திருந்தனர். இதே நேரத்தில் தற்கொலைக் குண்டுத்தாக்குதல் ஒன்று நிகழ்த்தப்படும்போது, பாவிக்கப்பட்டு குண்டின் பாகங்கள் காணப்படுவதாகவும் ஆனால், ரயில் குண்டுத்தாக்குதலில் அவ்வகையான தடையங்கள் எவற்றையும் காணமுடியவில்லை எனவும் தெரிவித்தனர்.

# தலை ஒட்டிப்பிறந்த குழந்தை சத்திரசிகிச்சையின் பின் மரணம்



டொமினிக்கன் - குடியரசில் தலைகள் ஒட்டிப்பிறந்த 7 வாரக் குழந்தையான ரெரீபகாவின் செயல்படாத தலைப்பாகத்தை வெற்றிகரமாக வைத்தியர்கள் பிரித்தெடுத்துள்ளனர். 11 மணித்தியாலங்கள் தொடர்ந்து நடத்தப்பட்ட அறுவைச் சிகிச்சையின் பின், இரண்டாவது தலைப்பாகம் அகற்றப்பட்டுள்ளது.

சத்திரசிகிச்சை முடிந்து 12 மணித்தியாலங்களின் பின்னர் இந்தக் குழந்தை பரிதாபகரமான முறையில் மரணமடைந்தது.

இரண்டாவது தலைப்பாகம், உடலுடன் கூடிய தலையின் மேல்பக்கத்தில் அமைந்துள்ள மண்டை ஓட்டின் உச்சியுடன் இணைந்து காணப்பட்டது. வேண்டப்படாத தலைப்பாகத்தை அகற்றி அவ்விடத்தில் காணப்படும் இரத்த நாளங்களையும், நாடிகளையும் கட்டுப்படுத்தி உடலின் வேறுபாகத்தில் இருந்து எடுக்கப்பட்ட எலும்பை மண்டைஓட்டில் பொருத்தி மீண்டும் குழந்தை ஆரோக்கியமாக நடமாடுவதற்கு துணைபுரியுமென, இவ் அறுவைச்சிகிச்சையை வெற்றிகரமாக நடத்தியுள்ள வைத்தியர் சான்ரியாகோ இசிம் தெரிவித்துள்ளார்.

தலையின் மேற்பாகத்தில் அமைந்திருந்த இரண்டாவது தலை மிகமோசமாக வளர்ந்து வந்துள்ளதாகவும், உரிய நேரத்தில் சிகிச்சை மேற்கொள்ளாது விடின் மூன்று மாதங்களின் பின்னர் தலையைத்தூக்கமுடியாத நிலை ஏற்பட்டிருக்குமென குழந்தை நரம்பியல் நிபுணர் டொட்டர் ஜோச் லசனைப் தெரிவித்தார்.

# கடற்கிளிஞ்சல் சேகரிப்பில் இறந்த சீனர்களது விசாரணைகளை பொலிஸார் ஆரம்பித்தனர்

பிரித்தானியாவில் மோர்கம்டசி குடாவில் கிளிஞ்சல்கள் சேகரிப்பின்போது, நீரில் மூழ்கி மரணமடைந்தவர்களின் விசாரணைகளை பொலிஸார் நடத்திவருகின்றனர். மேலும், இறந்தவர்களின் உடல்களைத் தேடும் பணியினை மீட்புப்பணியாளர்கள் தொடர்ந்தும் நடத்திவருகிறார்கள்.

மரணமடைந்தவர்களில் அனேகமானோர் சீனர்களாக காணப்படுவதால், கிளிஞ்சல்கள். சேகரிப்பில் ஈடுபட்டவர்களுக்கும், குற்றச் செயல்களில் ஈடுபடும் கும்பலுக்கும் இடையே தொடர்புகள் உண்டா என்பதையும் பொலிஸார் ஆராய்ந்து வருகின்றனர். இதனிடையே மீட்புப் பணியாளர்களால் மிட்கப்பட்டிருந்த சிலரை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுவருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காப்பாற்றப்பட்டவர்களில் 14 பேர் சீனர்களாவர். இதனால் புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்கு கூடுதலான பாதுகாப்பும், அனுமதிப் பத்திரங்கள் வழங்குவதில் அதிக கட்டுப்பாடும் விதிக்கப்பட வேண்டும் என கருத்து தெரிவிக்கப்பட்டுள்ளது.

மரணமடைந்த 17 பேரில் இருவர் பெண்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 2 ஆயிரம் கி.மீற்றர் சென்றுதாக்கும்

# அணுஆயுத ஏவுகணை பரிசோதனை பாகிஸ்தான் நடத்தி வருகின்றது!

பாகிஸ்தான் நவீனஏவுகணைகளை தயாரிப்பதில் அதிக அக்கறைகாட்டி வருகிறது. இந்தியாவின் அக்கினி, திரிசூலம், நாக் ஏவுகணைகளுக்குப் போட்டியாக பாகிஸ்தானும் அணுஆயுத ஏவுகணைகளை செலுத்தி சோதனை நடத்திவருகிறது.

பாகிஸ்தானின் அணுஆயுத தொழில்நுட்பங்களை அந்தநாட்டு விஞ்ஞானி அப்துல் கதீர்கான் ஈரான், வடகொரியா, லிபியா ஆகிய நாடுகளுக்கு விற்பனை செய்து கோடிக்கணக்கில் பணம் சம்பாதித்ததாக கைதுசெய்யப்பட்ட சம்பவத்தை தொடர்ந்து ஏவுகணை சோதனைகள் சில காலம் ஓய்ந்து இருந்தது.

இந்த நிலையை அடுத்து அடுத்தமாதம் மீண்டும் அணுஆயுத சோதனையை பாகிஸ்தான் தொடங்க இருக்கிறது. இதுபற்றி பாகிஸ்தான் அதிபர் முஷாரப் இஸ்லாமாபாத்தில் நிருபர்களுக்குப் பேட்டி அளித்தார்.

அப்போது அவர் கூறியதாவது. அணுஆயுத தொழில்நுட்ப கடத்தல் விவகாரம் காரணமாக பாகிஸ்தான் சோர்ந்து விடப்போவதில்லை. இது பாகிஸ்தானுக்கு எந்த ஆபத்தையும் ஏற்படுத்திவிடாது. ஏவுகணை சோதனைகளை பாகிஸ்தான் தொடர்ந்து மேற்கொள்ளும்.

'ஷாகின் - 2' என்ற அதிநவீன ஏவுகணை அடுத்த மாதத்துக்குள் செலுத்தி சோதனை நடத்தப்படும். இந்த ஏவுகணை 2000 கிலோமீற்றர் தூரம் பறந்துசென்று தாக்கும் ஆற்றல் உள்ளது இவ்வாறு முஷாரப் கூறினார்.

## ஈராக்கின் ஆயுதங்கள் குறித்து

# சுதந்திர விசாரணைக்குழு அமைக்க புஷ் சம்மதம்



ஈராக்கின் ஆயுதங்கள் தொடர்பாக சுதந்திரமான விசாரணைக்குழு அமைப்பதற்கு அமெரிக்க அதிபர் புஷ் சம்மதம் தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சியினர் இவ்வகையான விசாரணைக் குழுவிற்கு தமது எதிர்ப்பினைத் தெரிவித்துள்ளனர். ஜனநாயகக் கட்சியின் தலைவர் "ரான்சி பெலேசி" ஜனாதிபதி புஷ்ஷினால அமைக்கப்பட்ட சுதந்திர ஆணைக்குழுவில் தமக்கு நம்பிக்கை இல்லை எனத் தெரிவித்துள்ளார். மேலும், ஆணைக்குழுவின் முடிவுகள் நவம்பர் மாதத்தில் நடைபெற ஏற்பாடாகியுள்ளது. ஜனாதிபதி, தேர்தலுக்குமுன் இந்த முடிவுகள் அறிவிக்கப்பட வேண்டும் எனவும் தெரிவித்தார்.

ஆனால், இவ் ஆணைக்குழுவின் முடிவுகள் 2005 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 ஆம் திகதி அறிவிக்கப்படும் என அதிபர் புஷ் தெரிவித்தார்.

இது தொடர்பாக கருத்து தெரிவித்திருந்த பி.பி.சியின் சடாம் புறுக்கி இந்த ஆணைக் குழுவின் விசாரணைகள் வெளிவரும் போது, அதிபர் புஷ் மீண்டும் அதிபராகத் தேர்ந்தெடுக்கப்படுவார் எனவும் - இதனால், இந்த ஆணைக குழுவின் விசாரணைகள் எதுவித பாதிப்பையும் ஏற்படுத்தாதெனவும் குறிப்பிட்டார்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland





ஐரோப்பிய யூனியன் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன்.

# பகிஷ்கரிப்பை முடிவுக்கு கொண்டுவர அரசு-ரயில்வே ஊழியர் ஒப்பந்தம்!

(கொழும்பு)

ரயில்வே ஊழியர்கள் கடந்த பதினொரு நாட்களாக மேற்கொண்டு வந்த வேலை பகிஷ்கரிப்பை முடிவுக்குக் கொண்டுவர அரசாங்கமும், ரயில்வே தொழிற்சங்கமும் ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திட்டன.

இந்த ஒப்பந்தம் நேற்றுமுன்தினம் அலரிமாளிகையில் கைச்சாத்திடப்பட்டது. எனினும், நேற்று மாலை வரை ரயில்வே சேவை வழமைக்குத் திரும்பவில்லை. நேற்றுமுன்தினம் கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தத்திற்கு அமைய இரண்டு வருட காலத்திற்கு இடைத்தங்கல் அடிப்படையில் பூரண அதிகாரத்துடன் ரயில்வே திணைக்களம் தொடர்ந்தும் நடைமுறையில் இருக்கும்.

இந்த ரயில்வே திணைக்களத்திற்கு தகுதிவாய்ந்த அதிகாரியை நியமிப்பது உள்ளிட்ட விடயங்கள் அடங்குகின்றன. இதேவேளை, நேற்றுமுன்தினம் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட தொழிற்சங்கப் பிரதிநிதிகள் ரயில்வே ஊழியர்களின் போராட்டத்தை காட்டிக் கொடுத்து விட்டதாக ரயில்வே தொழிற்சங்கங்கள் சில குற்றஞ்சாட்டின.

நேற்றுமாலை வரை வெளி மாவட்டத்திலிருந்து ஒரு சில ரயில்களே கொழும்பு புறக்கோட்டை ரயில் நிலையத்திற்கு வந்தடைந்ததாக ரயில் போக்குவரத்து அத்தியட்சகர் சந்திரதிலக தெரிவித்தார். இதேவேளை, ரயில் சேவை தொழிற்சங்க ஐக்கிய முன்னணியும், சில தொழிற் சங்கங்களும் தொடர்ந்து வேலை பகிஷ்கரிப்பில் ஈடுபடவுள்ளதாகத் தெரிவித்தன.

## இத்தாலி செல்லமுயன்ற 265 பேருக்கு விளக்கமறியல்

சட்டவிரோதமான முறையில் இத்தாலிக்குச் சென்றவேளை, புத்தளம் கடற்பகுதியில் வைத்து அண்மையில் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்ட 265 பேரையும் எதிர்வரும் 20 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இது தொடர்பாக, பிரதம நீதிபதி சறோஜினி குசல விஜயவர்த்தன தெரிவிக்கையில் -

இவர்களைக் கூட்டிச்சென்ற பயண முகவர் தொடர்பாக சத்தியக்கடதாசி ஒன்றினை முடித்து நீதிமன்றில் சமர்ப்பிக்கவேண்டும் எனத் தெரிவித்தார். இவ்வாறு அவர்கள் சமர்ப்பித்தால் பிணையோ அல்லது வேறு சலுகைகளோ நீதிமன்றால் வழங்கப்படுமெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# பிள்ளைகளுக்கு தமிழ் பெயரிட்ட பெற்றோர்கள் கௌரவிப்பு!

(யாழ்ப்பாணம்)

பிள்ளைகளுக்கு தமிழில் பெயர் சூட்டியவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு நேற்று பிற்பகல் 4 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் இடம்பெற்றது. கனடாவாழ் புலம்பெயர் தமிழர் அமைப்பான 'சிலம்பம்' நிறுவனத்தின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

பேராசிரியர் அ.சண்முகதாஸ் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில், ஈகச்சுடரினை மாவீரர் சிவராசாவின் தாயார் ஏற்றிவைத்தார். விழாச்சுடரை புங்குடுதீவு சர்வோதய அமைப்பாளர் பொ.ஜமுனாதேவி ஏற்றிவைத்தார்.

சங்கீதபூஷணம் கணபதிப்பிள்ளை தமிழ் வாழ்த்து இசைத்தார். வரவேற்புரையை அ.சுப்பிரமணியமும், விளக்கவுரையை பண்டிதர் ப.ராஜகுருவும் நிகழ்த்தினர். தொடர்ந்து சிறப்புரையை கவிஞர் புதுவை இரத்தினதுரையும், வாழ்த்துரைகளை கலாநிதி சி.சிவலிங்கராசா, செ.நாச்சியார், பண்டிதர் பொ.பாக்கியம் ஆகியோரும் நிகழ்த்தினர்.

தொடர்ந்து 'சிலம்பம்' அமைப்பின் இலங்கை அமைப்பாளர் நடராஜா, பிள்ளைகளுக்கு தமிழ்ப்பெயர் சூட்டிய பெற்றார்களை கௌரவித்தார்.

இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசாவும் கலந்துகொண்டார். இங்கு தமது பிள்ளைகளுக்கு தமிழ்பெயர் சூட்டிய 300 இற்கும் மேற்பட்ட பெற்றோர்கள் பரிசில் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். (ப)

## விலாச்சி காட்டுப் பகுதியில்

# கண்ணிவெடியில் மூவர் பலியானதற்கும் விடுதலைப் புலிகளுக்கும் தொடர்பில்லை!

## முருங்கன் பொலிஸ் இன்ஸ்பெக்ரர் தெரிவிப்பு

(அநுராதபுரம்)

அநுராதபுரம் - விலாச்சி காட்டுப் பகுதியில் கடந்த மாதம் 30 ஆம் திகதி மூன்று சிங்களவர்கள் கண்ணிவெடியில் சிக்கிப் பலியானதற்கும் விடுதலைப் புலிகளுக்கும் எவ்வித தொடர்புமில்லையென, வடபகுதியில் கண்ணிவெடியகற்றும் நிறுவனமொன்றை ஆதாரங்காட்டி, முருங்கன் பொலிஸ் இன்ஸ்பெக்ரர் ரட்ண சிறி கமகே தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது -

யுத்தம் நடந்த காலத்தில் இந்தப் பகுதியில், இங்கு வெடித்தது போன்ற கண்ணிவெடிகள பல புதைக்கப்பட்டிருந்தன. இவற்றைக் கண்ணிவெடியகற்றும் வெளிநாட்டு அமைப்பினர் அகற்றியுள்ளனர்.

அத்துடன், இந்தப் பகுதி, பொது மக்கள் செல்வதற்கு தடைசெய்யப்பட்டுள்ளது.

அவ்வாறு பொதுமக்கள் யாராவது செல்லவேண்டுமாக விருந்தால், பொலிஸாரின் அனுமதியின்றி செல்லவேண்டாமென அவர் கேட்டுக்கொண்டார்.

# முதலீட்டை அதிகரிக்க தாய்லாந்தில் மாநாடு!

(கொழும்பு)

இலங்கையில் வெளிநாட்டு முதலீட்டை அதிகரிக்கும் நோக்கில் இரு மாநாடுகள் ஜப்பானிலும், தாய்லாந்திலும் நடைபெறவுள்ளன.

எதிர்வரும் 12 ஆம் திகதி தாய்லாந்தின் தலைநகர் பாங்கொங்கில் நடைபெறவுள்ள இந்த மாநாட்டில் முதலீட்டுக் குழு ஒன்றும இலங்கை முதலீட்டு சபை அதிகாரிகள் சிலரும் கலந்துகொள்வர்.

இதேவேளை, ஜப்பானில கியோக்கி நகரில் நடைபெறவுள்ள மாநாட்டில் பொருளாதார மறுசீரமைப்பு விஞ்ஞான தொழில்நுட்ப அமைச்சர் மிலிந்த மொறகொட உட்பட இலங்கையின் பல பிரதிநிகள் கலந்துகொள்ளவுள்ளதாக அரசாங்க ஊடகப்பேச்சாளர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

## நூற்றுக்கு மேற்பட்ட...

கொண்டிருந்தமையையும் கரையிலிருந்து காணமுடிந்தது.

அத்துமீறிய இந்திய இழுவைப் படகுகளின் மீன்பிடித்தலுக்கு இலங்கை கடற்படையும் இடங்கொடுப்பது போல எண்ணத் தோன்றுவதாக கரையோர பகுதி மக்கள் விசனம் தெரிவித்தனர்.

வழமையாகவே திங்கள், புதன், சனிக்கிழமைகளில் இவ்வாறான செயற்பாடுகள் தொடர்வதனால், தங்கள் தொழில் உபகரணங்கள் சேதமடையலாம் என்ற அச்சம் காரணமாக, மேற்குறிப்பிட்ட நாட்களில் நெடுந்தீவுப் பகுதி மீனவர்கள் ஆழ்கடலில் மீன்பிடித் தொழிலில் ஈடுபடுவதில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. (113)

## நாடாளுமன்ற...

வரை அமைச்சர்களாக நியமிக்கவும், பாதுகாப்பு அமைச்சைத் தொடர்ந்தும் தம்வசம் வைத்திருக்கவும் ஜனாதிபதி சந்திரிகா தீர்மானம் எடுத்துள்ளார்.

ஊடகத்துறை அமைச்சராக லக்ஷ்மன் கதிர்காமர் நியமிக்கப்படவிருப்பதுடன், காபந்து அமைச்சரவையில் அமைச்சர்களின் எண்ணிக்கையும் 15 ஆகக் குறைக்கப்படவுள்ளது.

பிரதமர் ரணில் பெந்தரவிலுள்ள ஆடம்பர விடுதியொன்றில் நெருங்கிய நண்பர்களுடன் இருந்தபோது ஜனாதிபதியின் நாடாளுமன்றக் கலைப்பு அவருக்குத் தெரியப்படுத்தப்பட்டது.

நாடாளுமன்றக் கலைப்பு அறிவிக்கப்பட்டதையடுத்து நாளை தாய்லாந்துக்கு விஜயம் செய்யவிருந்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தனது பயணத்தை ரத்துச்செய்திருப்பதாக இன்று அதிகாலை ஐக்கிய தேசியக் கட்சித் தலைமையகம் தெரிவித்தது.

## இந்திய கடற்படைத்...

யிருக்கும்போது, திருகோணமலை உள்ளிட்ட பல்வேறு கடற்படைத் தளங்களுக்கும் விஜயம் செய்து பாதுகாப்பு நிலவரங்களை மதிப்பீடு செய்யவிருந்தார்.

அத்துடன் - ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, பிரதமர் ரணில் ரணில் விக்கிரமசிங்க, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சிறில் ஹேரத், கடற்படைத் தளபதி தயா சந்தகிரி ஆகியோரையும் சந்தித்துப் பேச்சு நடத்தும் வகையில் அட்மிரல் மாதவேந்திரசிங்கின் இலங்கை பயணத் திட்டம் அமைந்திருந்தது.

ஆனால், திடீரென இவரது இலங்கைக்கான விஜயம் பிற்போடப்பட்டதாக இந்தியக் கடற்படைத் தலைமையகம் அறிவித்துள்ளது. இந்தத் திடீர் ஒத்திவைப்புக்கான காரணம் எதுவும் வெளியிடப்படவில்லை.

கடந்த ஆண்டு நவம்பர் மாதத்தில் இவர் இலங்கைக்கு வரவிருந்தபோதும் இந்திய பாதுகாப்பு அமைச்சின் அறிவுறுத்தலின் பேரில் பயணம் பிற்போடப்பட்டது.

பாகிஸ்தான் கூட்டுப்படைத் தளபதி இலங்கைக்கு விஜயம் செய்யவிருந்த தகவலை இலங்கை அரசு தெரியப்படுத்தாதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையிலேயே அட்மிரல் மாதவேந்திர சிங்கின் இலங்கை விஜயத்தை ஒத்திவைக்குமாறு இந்திய பாதுகாப்பு அமைச்சு கேட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

## மாங்குள...

சென்று கொண்டிருந்தவேளை, எதிரேவந்த கன்ரர் வாகனம் மோதியதில் மோட்டார் சைக்களிலில் சென்ற இருவரும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர்.

இருவரது சடலங்களும் விசாரணைகளுக்காக கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளன. விபத்துக்குள்ளான வாகனம் இரண்டும் மாங்குளம் காவல் துறையால எடுத்துச் செல்லப்பட்டதாகத் தெரியவருகின்றது.

## இயல்புநிலை...

யான இயல்புநிலை அமுல்படுத்தப்படாமையைக் கண்டித்தும் அதனை உடன் அமுல்படுத்துமாறு வலியுறுத்தியுமே இந்தக் கண்டனப் பேரணியை நடத்துவது எனத் தீர்மானிக்கப்பட்டது.

அன்றையதினம் நல்லூர் ஆலய முன்றலில் பேரணியை ஆரம்பித்து அங்கிருந்து யாழ். செயலகத்திற்குச் சென்று அங்கு கண்டனக் கூட்டம் நடத்துவது என்று முடிவு செய்யப்பட்டது. (111)

## அச்செழு...

அருகில் ரி.56 ரக துப்பாக்கி கிடந்ததாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

றுவன்வெலவைச் சேர்ந்த இந்த இராணுவ சார்ஜன்டின் சடலம் பலாலி இராணுவ வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டது. மல்லாகம் நீதிவான் சறோஜினி இளங்கோவன் சடலத்தை பலாலி வைத்தியசாலையில் பார்வையிட்ட பின்னர் கொழும்பு சட்ட வைத்திய அதிகாரியின் பரிசோதனைக்காக சடலத்தை அனுப்பிவைக்குமாறு உத்தரவிட்டார்.

## பொலிஸ் மா...

திகதி நடைபெறவுள்ள அரசியலமைப்புச் சபையின் கூட்டத்திலேயே பொலிஸ் மா அதிபரின் சேவை நீடிப்புத் தொடர்பான விடயம் ஆராயப்படுமென்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த நிலையில் - இந்திர டி சில்வாவிற்கு சேவை நீடிப்பு வழங்கப்பட்டால் அதற்கெதிராக உயர்நீதிமன்றத்தில் அடிப்படை உரிமைமீறல் வழக்கைத் தாக்கல் செய்வதற்கு பிரதிப் பொலிஸ் மா அதிபர் ஜெயதிஸ்ஸ ஹேரத் திட்டமிட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

இவரது இந்த சட்ட நடவடிக்கைகளுக்கு பல்வேறு மனிதஉரிமை அமைப்புக்களும் ஆதரவு தெரிவித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

## ஐரோப்பிய யூனியன்...

நடந்த யுத்தத்தால் அப்பகுதியில் வாழும் மக்கள் அழிவுகளைச் சந்தித்துள்ளனர். எனவே, அவர்களது வாழ்க்கைத்தரத்தை அபிவிருத்தி செய்து சுமுக நிலையை ஏற்படுத்த வேண்டியுள்ளது.

எனவே, ஐரேப்பிய நாட்டாளுமன்ற உறுப்பினர்கள் வடக்கு-கிழக்கு பகுதி மக்களுக்கான உதவிகளை நேரடியாக வழங்கி அப்பகுதி மக்களின் மனிதாபிமானத் தேவைகளை பூர்த்திசெய்ய வேண்டும் எனவும் தமிழ்ச்செல்வன் குழுவினர் கேட்டுக்கொண்டனர்.

இதேவேளை, வடக்கு - கிழக்கு மக்களுக்கான மனிதாபிமான உதவிகளை நேரடியாகச் செய்வதற்கு எதிர்வரும் 17 ஆம் திகதி வொஷிங்ரனில் நடைபெறும் கூட்டத்திற்குப் பின்னர் ஏற்பாடு செய்யப்படுமென ஐரோப்பிய யூனியனின் நாடாளுமன்ற உறுப்பினரான ஜோன் வோல்ஸ் குஷ்னாகன் இந்தச் சந்திப்பில் தெரிவித்தார்.

## வேலூர் சிறையிலிருந்து...

578 நாட்களாக சிறைவைக்கப்பட்டிருந்த வைகோ, வேலூர் சிறையில் இருந்து வெளியில் கால் எடுத்து வைத்ததும் ம.தி.மு.க தொண்டர்கள் பட்டாசு கொளுத்தியும், இனிப்பு வழங்கியும் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர்.

ஏராளமான தொண்டர்கள் வைகோவுக்கு மாலைகளும் சால்வைகளும் அணிவித்தனர்.

வரவேற்பு வெள்ளத்தில் மிதந்த வைகோ அனைவருக்கும் நன்றி தெரிவித்தார். பின்னர் காரில் சென்னை புறப்பட்டார். அவரது காரைத் தொடர்ந்து 200 இற்கு மேற்பட்ட கார்கள் அணிவகுத்து வந்தன. வழிநெடுக அவருக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

அடுத்த வாரம் வைகோ தனது சொந்த ஊரான கலிங்கப்பட்டி செல்கிறார். அங்கு அவருக்கு சுமார் 40 ஆயிரம் பேர் திரண்டு பிரமாண்டமான பொதுக்கூட்டம் நடத்தி வரவேற்பு அளிக்கவுள்ளனர்.

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 08.02.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.